இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 233 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 01 திங்கட்கிழமை 17.07.2017

வடமராட்சி கிழக்கில்

## தேசிய பூங்காவுக்கு வழங்கிய காணி குறித்து மீளாய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடமராட்சி கிழக்கில் தேசிய பூங்காவுக்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட 48 ஆயிரம் ஏக்கர் தொடர்பான மிக முக்கிய மீளாய்வுக் கலந்துரை » 25

## முல்லைத்தீவில் காடழிப்பைக் கண்டித்து நேற்று இளைஞர்கள் திரண்டு பேரணி

### 7 கிலோமீற்றர் நடந்து எதிர்ப்பை வெளியிட்டனர்

முல்லைத்தீவு, ஜூலை 17
முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத காடழிப்பு மற்றும் குடியேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் அணிதிரண்டு கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.
சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பேரணியாக நடந்து சென்று தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.
'கருக்காதே கருக்காதே தேக்கை கருக்காதே', » 25



## கடற்படை அதிகாரிகள் மேலும் சிலர் சிக்குவர்

கொழும்பு, ஜூலை 17
முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட வழங்கிய தகவல்களின் அடிப்படையில், கடற்படையைச் சேர்ந்த மேலும் பலர் அடுத்து வரும் வாரங்களில் கைது செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
கொழும்பு ஊட » 25

## 11 தமிழ் இளைஞர்கள் பணத்துக்காகவே கடத்தல்

### பொலிஸார் கூறுகின்றனர்

கொழும்பு, ஜூலை 17
கொழும்பு மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழ் இளைஞர்களும் பணத்துக்காகவே கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறினார்.
அதற்கான வலுவான ஆதாரங்கள் குற்றத்தடுப்புப் பிரிவின் விசாரணைகளின் மூலம் கிடைத்துள்ளன.
கடத்தப்பட்டவர்கள் கடற்படையினரின் தொலைபேசிகள் ஊடாக தமது உறவினர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
(விரிவு 2 ஆம் பக்கத்தில்)

## வடக்கில் 27 பட்டதாரிகளுக்கு இன்று நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
கணித , விஞ்ஞான பாடங்களுக்கான பட்டதாரிகள் நியமனத்துக்காக இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் சான்றிதழ் சமர்ப்பிக்கத் தவறி காலம் தாழ்த்தி அதனை வழங்கிய 27 பேருக்கு இன்று நியமனம் வழங்கப்பட » 25

நவம்பரில் பட்ஜெட் முடிவடைந்த பின்னர்

# டிசெம்பர் 7 க்கு முன் உள்ளூராட்சித் தேர்தல்

### அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம்

கொழும்பு, ஜூலை 17
நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னரும், டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னருமான காலப் பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாகத் தெரியவருகின்றது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.
அலரி மாளிகையில் நேற்று மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் மகிந்த அணியைத் தவிர அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.
உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டவரைவு தொடர்பில் ஆராயப்பட்டது. அதில் சில தொழில்நுட்ப திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. » 25

## மணல் விநியோகம் குடாநாட்டில் சீரானது

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
கட்டுமானப் பணிகளுக்கான மணல் விநியோகம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மணல் தேவையானோர் தமது பிரதேச செயலரின் அனுமதியுடன், மருதங்கேணிப் பிரதேச செயலரிடம் அதற்கான கோரிக்கையைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள முடியும். » 25

## கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞன் படுகாயம்

### பாலைப்பழம் பிடுங்க சென்ற போது பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
கிளிநொச்சி முழங்காவில் காட்டுக்குள் பன்றிக்கு வைத்திருந்த கட்டுத் துவக்கு வெடித்ததால் இளைஞர் ஒருவர் வயிற்றுக்குள் குண்டு பாய்ந்து படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
நேற்று மதியம் சம்பவம் இடம்பெற்றது. » 25

தேர்தல் சட்டத் திருத்தம்;

## அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் சம்மதம்

கொழும்பு, ஜூலை 17
உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்திருத்தத்துக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் நேற்று இணங்கியுள்ளனர். 60 சதவீதம் தொகுதி வாரியாகவும், 40 சதவீதம் விகிதாசார அடிப்படையிலும் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் கலப்பு முறையிலேயே தேர்தல் நடைபெறவுள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், அலரி மாளிகையில் » 25

வித்தியா படுகொலை:

## டி.ஐ.ஜி. லலித் ஜயசிங்க விளக்கமறியல்சாலைக்குள்

யாழ்ப்பாணம், ஜூலை 17
புங்குடுதீவு மாணவி கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வடக்கு மாகாண முன்னாள் மூத்த பொலிஸ் மா அதிபர் லலித் ஏ.ஜயசிங்க எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். » 25



## டெனீஸை பதவி நீக்க முதல்வர் என்னுடன் ஆலோசிக்கவில்லை

### கூறுகின்றார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 17
அமைச்சர் டெனீஸ்வரனைப் பதவி நீக்குவதற்கான நடவடிக்கை எடுப்பது தொடர்பில், ரெலோவோ அல்லது வடக்கு மாகாண முதலமைச்சரோ என்னுடன் கலந்தாலோசிக்கவில்லை. » 25

## கூட்டு அரசிலிருந்து வெளியேறினாலும் சு.க. உறுப்பினர்கள் மகிந்தவுடன் சேரார்

கொழும்பு, ஜூலை 17
கூட்டு அரசிலிருந்து வெளியேறினாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மகிந்த அணியில் இணையமாட்டார்கள். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும், சிறிலங்கா சுதந்திரக் » 25

## டி.ஐ.ஜியை அழைத்துச் சென்ற வாகனம் விபத்தில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 17
புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவை அழைத்துச் சென்ற வாகனம் விபத்தில் சிக்கியது.
இந்த விபத்து ஊர்காவற்றுறைப் பகுதியில் நடந்தது. » 25



newuthayan.com
உதயன் DIGITAL
24 மணிநேரப் பதிவேற்றம்

# 11 தமிழ் இளைஞர்களும் பணத்துக்காகவே கடத்தல்

## பொலிஸார் கூறுகின்றனர்

கொழும்பு, ஜூலை 17

கொழும்பு மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் பணத்துக்காகவே கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவின் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றிய லெப்டினன்ட் கொமடோர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக 2009ஆம் ஆண்டு குற்றத்தடுப்பு பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்தது.

அந்த முறைப்பாட்டில் சம்பத் முனசிங்க தங்கியிருந்த இடத்தில் இருந்து அடையாள அட்டைகள், கடவுச் சீட்டு, வெடிபொருள்கள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பத் முனசிங்க தீவிரவாத அமைப்புடன் தொடர்புபட்டுள்ளாரா என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த தியாகராஜா ஜெகன், கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியை சேர்ந்த கஸ்தூரி ஆராச்சிகே அன்ரனி, மன்னாரை சேர்ந்த சூசைப்பிள்ளை அமலன் லியோன் மற்றும் அவரது மகன் சூசைப்பிள்ளை ரொஷான் லியோன் ஆகியோரின் அடையாள அட்டைகளே மீட்கப்பட்டன என்று தெரியவந்தது.

அத்துடன் தெஹிவளை பகுதியில் வைத்து 5 பேர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் லெப்டினன்ட் கொமடோர் சம்பத் ஹெட்டியாராச்சிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடத்தப்பட்டவர்கள், கடற்படையின் தொலைபேசிகள் ஊடாக தமது உறவினர்களுடன் தொடர்பு கொண்டமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க இரண்டு குழுக்களை கொண்டு நடத்தியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்கவை சந்தித்து பேசியமையும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த இளைஞர்கள் பணத்துக்காகவே கடத்தப்பட்டுள்ளனர். அதற்காக வலுவான ஆதாரங்கள் குற்றத்தடுப்புப் பிரிவின் விசாரணை களின் மூலம் கிடைத்துள்ளன - என்றார். (ற-5)



டெங்குத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் வவுனியாவில் நேற்று இளைஞர்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகமும் சமூக ஆர்வலர்களும் இணைந்து குட்செட்வீதி, புகையிரத நிலைய வீதி போன்ற பகுதிகளில் துப்புரவாக்கும் பணிகளை மேற்கொண்டனர். (ற-10)

# மைத்திரிபால தலைமையில் மருத்துவமனையை கையேற்கும் நிகழ்வு

கொழும்பு ஜூலை 17

நெவில் பெர்னான்டோ மருத்துவமனையை பொது மருத்துவமனையாக மாற்றும் நிகழ்வு அரச தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நெவில் பெர்னான்டோ வைத்தியசாலையைப் பயன்படுத்தி மக்களுக்குத் தரமான சுகாதார சேவைகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம். இதுவரைகாலமும் இழுபறி நிலையில் இருந்த இவ்விடயம் தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இந்த மருத்துவமனை பொது மருத்துவமனையாக செயற்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ற)

# தொடருந்து நிலையங்களில் டெங்கு ஒழிப்பு

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தொடருந்து நிலையங்களை அண்மித்த பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு வார செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று தொடருந்து நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதன் தேசிய ஆரம்ப நிகழ்வு தெமட்டகொடை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்றது.

நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு வாரம் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (ற)

# முல்லை. மாவட்டச் செயலர் சரியாகச் செயற்பட வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் காட்டம்

முல்லைத்தீவு, ஜூலை. 17

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் தன்னுடைய கடமையை ஒழுங்காக செய்ய வேண்டும். இல்லை எனில் முல்லைத்தீவு மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். ஒழுங்காகக் கடமை செய்வதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் எத்தனையோ பேர் உள்ளார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுற்றுச் சூழல் அழிப்பையும், நிலப் பறிப்பையும் எதிர்த்து நேற்றுச் சட்டவிரோத குடியேற்றத்துக்கு எதிரான இளைஞர் அணியால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எல்லோருக்கும் உரிய நாடு என்கிறீர்கள். ஆனால் தமிழர்களை விலக்கிவிட்டு சிங்களவர்களுக்கும், முஸ்லிம் மக்களுக்குமான தனியான ஒரு செயலணி அமைத்துள்ளீர்கள்.

இந்தக் காடுகள் எங்கள் மக்களுக்குச் சொந்தமானவை. இந்தத் தேக்கமரங்களை விடுதலைப்புலிகள் நடுகை செய்தார்கள். அவர்களை வேறுபடுத்த வேண்டாம். அவர்களும் எங்கள் மக்கள்தான். அவர்கள் இந்த மக்களுக்காகத்தான் மரங்களை நட்டார்கள். இது மக்களின் சொத்து இதை யாரும் அழிக்க முடியாது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அவரது கடமையைச் செய்வதாயின் சரியாகச் செய்யவேண்டும் யாருக்கும் துணைபோகின்ற வேலையை செய்யக்கூடாது. விடுமுறை நாள்களில் வந்து கல்லிடலாம் அல்லது அத்திவாரம் போடலாம், அராபிய நாடுகளில் இருந்து ஆள்களைக் கொண்டு வரலாம் என்று எண்ண வேண்டாம். (ற-10,7)

# முஸ்லிம் மக்கள் குடியமர்வுக்கு முல்லை. மக்கள் எதிர்ப்பில்லை

## சாந்தி சமாதானம் சமத்துவம் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு கூறுகிறது

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் மீள் குடியேறுகின்றனர். முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்கள் அதற்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட ஒரு சிலரே வெளியிடத்தில் இருந்த ஆள்களை வரவழைத்து எதிர்க்கின்றனர்.

இவ்வாறு சாந்தி சமாதானம் சமத்துவம் மற்றும் அபிவிருத்திக்கான முல்லைத்தீவு மாவட்ட அமைப்பின் தலைவர் அல்காஹ் எஸ்.எ.றாகிம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுற்றுச் சூழல் அழிப்பையும் அடாத்து நிலப் பறிப்பையும் எதிர்த்து நேற்று சட்ட விரோத குடியேற்றத்துக்கு எதிரான இளைஞர் அணியால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 25 வருடங்களுக்கு முன்னர் ஆயிரத்து 478 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் வெளியேறினோம். நாங்கள் புத்தளம் போன்ற பகுதிகளில் 25 ஆண்டுக்கும் மேலாக அகதிகளாக வாழ்ந்தோம். எமது பிள்ளைகள் திருமணம் செய்துள்ளனர். தற்போது 6 ஆயிரத்து 800 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரம் பேர் உள்ளோம்.

முல்லைத்தீவில் இருந்து வெளியேறாது விட்டிருந்தால் எமது காணிகளை உரிய காலத்தில் பெற்றிருப்போம்.

தற்போது பல வேண்டுகோளுக்கு பின்னர் எங்கள் மக்கள் பிரதிநிதிகளின் உழைப்பால் காணிகள் அற்றவர்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன. காணிகள் அற்ற மக்களுக்கு காணிகள் வழங்கப்படவேண்டும் என்பதில் முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்களும் உறுதியாக உள்ளனர். குறுகிய நோக்கத்துக்காக ஒரு சிலர் வெளியிடங்களில் இருந்த ஆள்களை கொண்டு வந்து எதிர்ப்பை பதிவு செய்ய முனைகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் எப்போதும் ஒற்றுமையாகவே வாழ்கின்றோம். வாழ்ந்து வருகிறோம். அதைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் தோல்வியையே சந்திப்பார்கள் - என்றார். (ற-10,7)

# கர்ப்பிணித் தாய்மாருக்கு உலர் உணவு வழங்கல்

## அரச தலைவர் தலைமையில் நடைபெற்றது

கொழும்பு, ஜூலை 17

மத்திய மாகாணத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உலர் உணவு கூப்பன் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் நேற்று நடைபெற்றது.

அரச தலைவர் மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் கண்டியிலுள்ள அரச தலைவர் மாளிகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது என்று அரச தலைவர் ஊடகப்.பிரிவு தெரிவித்தது. அதில் உள்ளதாவது.

மத்திய மாகாணத்தில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலர் உணவு கூப்பன் மற்றும் போசனைப் பொதி வழங்கப்பட்டன.

கண்டி அரச தலைவர் மாளிகையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்காக தயார்செய்யப்பட்டிருந்த பகல் போசன விருந்திலும் அரச தலைவர் கலந்து கொண்டார்.

திடீர் விபத்தில் உயிரிழந்த தனது மகனின் இதயத்தை இருதய சத்திர சிகிச்சைக்காக அன்பளிப்புச் செய்த உடுநுவரவைச் சேர்ந்த ஐ பி நந்தசேன மற்றும் இந்திரா கல்யாணி ஆகியோர் அரசதலைவரைச் சந்தித்தனர். அவர்களை நலம் விசாரித்த அரச தலைவர் இந்த அன்பளிப்புக்காக அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநர் மார்சல் பெரேரா, வடமத்திய மாகாண ஆளுநர் பி பீ திசாநாயக்க, தென்மாகாண ஆளுநர் ஹேம குமார நாணயக்கார, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் அனுராத ஜயரத்ன, மத்திய மாகாண மகளிர் விவகார அமைச்சர் திலின பண்டார தென்னகோன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்று ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ற-10)

# கிழக்குக்கான நிதி ஒதுக்கீட்டில் அரசு பாரபட்சம்

## கிழக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூலை 17
நிதி ஒதுக்கீட்டில் கொழும்பு அரசு காட்டும் பாரபட்சம் மாகாண அபிவிருத்தியைப் பாதிக்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் கிழக்கு முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்.

மாகாண அபிவிருத்தியில் எதிர்நோக்கும் பின்னடைவுகள் தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்த ஆண்டு அபிவிருத்திக்காக கொழும்பு அரசால் ஒதுக்கப்படவேண்டிய நிதி விடுவிக்கப்படவில்லை. இந்த வருடத்தின் அரையாண்டு கடந்து விட்ட போதிலும் கிழக்கு மாகாண சபைக்கு இந்த ஆண்டுக்கான நிதியில் ஒரு சதமேனும் வந்து சேரவில்லை. கிழக்கு மாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதில் நடுவண் அரசு கையாளும் பாரபட்சப் போக்கால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் பல்வேறு தடங்கல்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

கொழும்பு அரசால் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய நிதி தாமதித்துக் கிடைப்பதால் பொதுமக்களே பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒதுக்கப்பட்டுள்ள நிதியை உரிய நேரத்தினல் வழங்க கொழும்பு அரசு ஆவன செய்ய வேண்டும் - என்றார். (ற-10,46)

## இராஜகிராமம் மக்களுக்கு குடிநீர் தாங்கி கையளிப்பு



மட்டக்களப்பு, ஜூலை 17
ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இராஜபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி வைபவ ரீதியாக நேற்றுத் திறக்கப்பட்டது.

அஹிம்சா நிறுவனத்தின் தாகம் தீர்ப்போம் குடிநீர்த் திட்டத்தின் கீழ் இது முன்னெடுக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.முகுந்தன், பிரதேச சபைச் செயலாளர் கே.பேரின்பராஜா, அஹிம்சா நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா ஆகியோர் இணைந்து இந்தக் குடிநீர்த்தாங்கியை பாவனைக்கு வழங்கினர்.

இராஜபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இராஜபுரம் மகா விஷ்ணு ஆலயத்தின் பூசகர் எஸ். வீரையா, உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. ஆர்.முகுந்தன், பிரதேச சபைச் செயலாளர், கே.பேரின்பராஜா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். கருணாகரன், அபிவிருத்தி உத்தியோகத்தர், அஹிம்சா நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா, உபதலைவர் எஸ்.ராஜமோகன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைத் தலைவரும் அஹிம்சா நிறுவன ஆலோசகருமான த.வசந்தராஜா, அஹிம்சா நிறுவனத்துக்கான நோர்வே நாட்டு இணைப்பாளர் சு.பரணீதரன், கரடியனாறு பொலிஸ் அதிகாரி எஸ்.குணம் ஆகியோர் உட்பட பெருமளவு கிராம மக்கள் கலந்து கொண்டனர்.(ற-10,46)

## காத்தான்குடி மருத்துவமனை ஆளணியை உயர்த்தத் திட்டம்

### கிழக்கு மாகாண உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 17
சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு காத்தான்குடி ஆதார மருத்துமனையிலுள்ள ஆளணியை கணிசமான அளவு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் தெரிவித்தார்.

மாகாண சுகாதார அபிவிருத்திகள் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

கிழக்கு மாகாணத்தின் வர்த்தக நகரான காத்தான்குடியில் சனத்தொகை அடர்த்தி அதிகம். காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகம்.

தற்போது இந்த மருத்துமனையில் மருத்துவர்கள் உட்பட சகல தரங்களையும் கொண்டு 130 பேர் என்ற எண்ணிக்கையிலுள்ள ஆளணியை 280ஆக உயர்த்துவதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோர் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்திக்கப்படும் என நம்புகின்றோம்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய மருத்துவமனைகளை விட சிறப்புக் கவனமெடுத்து காத்தான்குடி ஆதார மருத்துவமனையின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து வருகின்றோம். அந்த வகையில் புதிய பல பிரிவுகளையும் நாம் ஆரம்பித்து வருகின்றோம்.

முதலமைச்சரின் முயற்சியின் பயனாக காத்தான்குடி ஆதார மருத்துவமனையின் அபிவிருத்திக்கென கொழும்பு அரசினூடாக 85 மில்லியன் ரூபா நிதி 2018ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ற-10)



## இரு குழுக்கள் இருப்பதாலே நாட்டில் பல பிரச்சினைகள்

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
நாட்டில் இரு குழுக்கள் இருப்பதாலேயே இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கொத்மலை காமினி திசாநாயக்க தேசிய கல்லூரிக்கான தொழில்நுட்ப பீட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நாட்டில் எந்த விடயத்தை எடுத்தாலும் இரண்டு குழுக்கள் காணப்படுகின்றன. அதில் மத பிக்குகள் முதல் அரசியல்வாதிகள் வரை அடங்குகின்றனர். அதனாலேயே இனவாதம் தொடர்பாகப் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இன, மத, மொழி, பேதம் இன்றி இலங்கையில் அனைவரும் ஒற்றுமையாக வாழ ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான அசோக எயரத் குமார தசநாயக்க, கொத்மலை வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள் உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10)

## மட்டு. உணவகங்களில் நேற்று திடீர்ச் சோதனை

மட்டக்களப்பு, ஜூலை 17
மட்டக்களப்பு, ஒட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவில் வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் நேற்று திடீர்ச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன்போது நான்கு உணவகங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர் என்று ஒட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ். ரீ.எம்.நஜீப்கான் தெரிவித்தார்.

உணவகங்களில் துப்புரவு இன்மை காணப்படுகின்றது என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்து ஒட்டமாவடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் சுகாதார மருத்துவ அதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட உணவு ஔடத பரிசோதகர்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

அதன்போது மூன்று உணவகங்கள் மற்றும் ஒரு பேக்கரி ஆகியவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். அந்த உணவகங்களில் பாவனைக்குதவாத பொருள்கள் மற்றும் பழுதடைந்த பழவகைகள் என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

எச்சரிக்கை விடுக்கப்பட்ட உணவகங்களுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் தங்களது உணவகங்களில் உள்ள குறைகளை திருத்தி அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒருவார காலத்துக்குள் திருத்தி அமைக்கப்படாதவிடத்து அதன் உரிமையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (ற-10)



ஹற்றன் புனித அன்னம்மாள் ஆலயத்தின் 188ஆவது வருடாந்த திருவிழா நேற்று நடைபெற்றது. கண்டி மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய வியானி பெர்னான்டோ ஆண்டகை திருப்பலி ஒப்புக்கொடுத்தார். திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் பங்கு தந்தை லெஸ்லீ பெரேரா தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்ப மானது.
(ற-10)

## சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம் தொடர்கிறது

வவுனியா, ஜூலை 17
நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வவுனியா சுகாதாரத் தொண்டர்கள் முன்னெடுத்துள்ள கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 74 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

வவுனியா பிராந்திய மருத்துவ அதிகாரியின் அலுவலகத்துக்கு முன்பாக கொட்டகை அமைத்து கடந்த மே மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தீர்வின்றித் தொடர்கின்றது.

போர் இடம்பெற்ற காலத்திலும், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களிலும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய சுகாதார தொண்டர்களே சேவைக்கால அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

"வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களாகிய நாங்கள் 74 நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களில் 820 சுகாதாரத் தொண்டர்களும் சுகாதாரப் பணிமனையூடாக டெங்கு தொடர்பான விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்தி டெங்கு ஏற்படக்கூடிய இடங்களை அகற்றியிருந்தோம். அதன் காரணமாக வடக்கில் கடந்த காலத்தில் டெங்கின் தாக்கம் குறைவாகக் காணப்பட்டது. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் நாங்கள் பணியாற்றக் காத்திருக்கிறோம். எங்கள் நியமனம் தொடர்பாக அரச தலைவர் மற்றும் கொழும்பு சுகாதார அமைச்சர் ஆகியோர் கவனம் எடுக்க வேண்டும். நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை எங்களது போராட்டம் தொடரும்" என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-10)

# கேப்பாபிலவு மக்களின் போராட்டம் தொடர்கிறது

## நேற்றுடன் 138 நாள்களாயின

முல்லைத்தீவு, ஜூலை 17
தமது பூர்வீக வாழ்விடங்களை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் நேற்று 138ஆவது நாளாகத் தொடர்கின்றது.
முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை மீள்குடியேற்று வதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்துவரும் அரசு நாங்கள் 5 மாதங்களாக வீதிகளில் இருந்து போராடுவதை கண்டுகொள்ளவில்லை என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.
இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியே தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.



"எட்டுத் தலைமுறையாக நாங்கள் வாழ்ந்த நிலங்களை விடுவிக்க வேண்டும் என்று கோருகின்றோம். காணி விடுவிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும். எமது போராட்டம் தொடர்பில் அரசு பாராமுகமாக இருக்கின்றது. நாம் தமிழர் என்பதாலா அரசு இவ்வாறு நடந்து கொள்கின்றது." என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் விரக்தியுடன் தெரிவித்தனர்.
விவசாய, மற்றும் மீன்பிடியை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து வரும் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவதால் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஐந்து மாதங்களாக அவர்கள் தொடர் போராட்டம் நடத்தும் நிலையில் இதுவரை எந்தவொரு தீர்வும் வழங்கப்படவில்லை. (ற)



## ஓட்டோ- கார் விபத்து; ஹற்றனில் சம்பவம்

ஹற்றன், ஜூலை 17
ஹற்றன், நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று காருடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்றுக்காலை நடந்துள்ளது. ஹற்றனில் இருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியும், கொட்டகலை நகரப்பகுதியில் குறுக்குப் பாதையிலிருந்து பிரதான வீதிக்கு நுழைந்த காருமே விபத்துக்குள்ளாகின. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. வாகனங்கள் சேதமடைந்தன. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## மாடு திருடிய மூவர் கைது

திருகோணமலை, ஜூலை 17
திருகோணமலை திம்பிரிவெவ பகுதியில் பட்டியில் நின்ற மாடொன்றைத் திருடி இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்த குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டனர் என மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
றொட்டவெவ பகுதியைச் சேர்ந்த மூவரே கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
திம்பிரிவெவ பகுதியில் பட்டியில் பால் எடுப்பதற்காக கட்டி வைக்கப்பட்ட மாட்டைக் காணவில்லை என்று மாட்டு உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
பொலிஸார் தேடுதல் நடத்தியபோது நொச்சிக்குளம்.ஜின்னாநகர் பிரதேசத்திலுள்ள கல்மலைக்கு அருகிலுள்ள காட்டுப்பகுதிக்குள் மாட்டின் தலை கண்டெடுக்கப்பட்டது.
சந்தேகத்தின் பேரில் மூவரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது மாட்டின் தோல் பகுதியும் மீட்கப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்ட மூவரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர். (ற-10,45)



## வீர மக்கள் தின நிகழ்வுகள் கொழும்பில் கடைப்பிடிப்பு

கொழும்பு, ஜூலை 17
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 28 ஆவது வீர மக்கள் தின நிகழ்வு கொழும்பில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
காலை 9 மணியளவில் கொழும்பில் அமைந்துள்ள புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் நிர்வாகச் செயலாளர் ம.பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.
நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு கழகத்தின் செயலதிபர் அமரர் க.உமாமகேஸ்வரனின் உருவப்படத்துக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மௌன அஞ்சலியும், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டன.
நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## கோயம்புத்தூருக்கு விமான சேவை

கொழும்பு, ஜூலை 17
கொழும்பில் இருந்து இந்தியாவின் கோயம்புத்தூர் வரையில் புதிய விமான சேவை நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இந்தியாவின் பல இடங்களுக்கு புதிய விமானப் பயணங்கள் ஆரம்பிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
கொழும்பில் இருந்து இந்தியாவின் விசாகப்பட்டினம் மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களுக்கும் விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



பூநகரி, பல்லாய் மடு மாதா ஆலய திருவிழாவும், திருச்சொரூப பவனியும் நேற்றுக் காலை அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் தலைமையில் நடைபெற்றது. (ற)

## தொடருந்து நிலையங்களில் குப்பை கொட்டினால் தண்டம்

தொடருந்துத் தடங்கள் மற்றும் தொடருந்து நிலையங்களில் குப்பை கொட்டும் பயணிகளுக்கு எதிர்காலத்தில் தண்டம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
ரயில்வே திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பயணிகள் ரயில் தடத்தில் குப்பைகளைக் கொட்டுவதால் சூழல் மாசடைகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். நாடு முழுவதுமுள்ள பிரதான தொடருந்து நிலையங்கள் மற்றும் உப ரயில் நிலையங்களில் நேற்று முதல் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற)

## மாணிக்கக் கல் அகழ்வு: ஐவர் நேற்றுச் சிக்கினர்


கொழும்பு, ஜூலை 17
சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.
காசல்ரீ நீர்த் தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் பொகவந்தலாவ டின்சின் கேசல் கமுவ ஓயாவுக்கு அருகில் நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
பொகவந்தலாவ பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தபட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. சட்டவிரோத மாணிக்க் கல் அகழ்வில் ஈடுபட்டு வந்தவர்கள் நாவலப்பிட்டி, பலாங்கொட, பொகவந்தலாவ மற்றும் டினசின் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.
கைது செய்யபட்டவர்கள் ஐந்து பேரையும் ஹற்றன் நீதிவானிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-10)



திருகோணமலை நகர சபையின் ஏற்பாட்டில் திண்மக்கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் நேற்று நடத்தப்பட்டது. திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நகர சபையின் செயலாளர் தே. ஜெயவிஷ்ணு தலைமையில் பயிற்சி முகாம் நடைபெற்றது. (ற-10,40)

# சுற்றுலாத் தளமாகிறது பண்ணைக் கடற்கரை

## நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் ஆரம்பம்



யாழ்ப்பாணம் மே 6

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரை மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதியைச் சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கான நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் வேலைத்திட்டங்கள் விரைவு படுத்தப்படுகின்றன என்று யாழ்ப்பாண பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரை மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதியைச் சுற்றுலாத் தளமாக மாற்றும் செயற்திட்ட முன்மொழிவு கடந்த வருடம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கான ஆரம்பக்கட்ட வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டங்களை யாழ்ப் பாண மாநகரசபை,யாழ்ப்பாண பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டதாவது:

சுற்றுலாத் துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பண்ணைக் கடற்கரையைச் சுற்றுலா இடமாக மாற்றுவதற்காக கடந்த ஆண்டு மாவட்ட செயலகத்தில் செயற்திட்டம் நிறைவேற்றப் பட்டது. அதன்படி அபிவிருத்தி வேலையின் ஒவ்வொரு பகுதியையும் யாழ்ப்பாண பிரதேச செயலகம், யாழ்ப் பாண மாநகர சபை என்பன பொறுப் பேற்று செயற்படுத்துகின்றன. இந்தத் திட்டத்தின் கடந்த ஆண்டுக்கான நிதி தற்பொழுது விடுவிக்கப்பட்டுள்ளது. அதனால் அபிவிருத்தி வேலைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. பண்ணைப் பாலத்தின் கரையோரமாக சூரிய சக்தியில் ஒளிரும் மின்குமிழ்கள் பொருத்தும் பணிகள் நிறைவடைந்துள் ளன. மண்டைதீவு ,சாட்டிக் கடற்கரை போன்ற கடல் பிரதேசங் களுக்கான படகுச் சவாரி விளையாட் டுக்களை வழங்குவதற்கு வேலைத்திட்டங்கள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. 40 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வேலணை சாட்டியிலும் 34 மில்லியன் ரூபா செலவில் செயற்றிட்டங்கள் மேற் கொள்ளப்படவுள்ளன . பண்ணைப் பாலத்துக்கு அருகே படகுகள் கரையை அடையும் போது அதன் அடிப்பகுதி கல்லில் பட்டு இடையூறு ஏற்படாத வகையில் பாலத்தின் கரையோரப்பகுதி சீராக்கப்பட்டு வருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது . (21-ரி)

## யாழ்ப்பாண நகர வர்த்தகரை 3 நாள்களாகக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாண நகரில் காணாமற் போன வர்த்தகர் தொடர்பில் இதுவரை தகவல் கிடைக்கவில்லை என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த வே. நடராஜா (வயது - 63) என்பவரே கடந்த வெள்ளிக் கிழமை மதியம் காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியில் வர்த்தக நிலையம் நடத்தி வரும் அவர், நேற்றுமுன்தினம் மதியம் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள்கள் கொள்வனவுக் காகச் சென்றிருந்தார். எனினும் அவர் வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண் டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4,101)

## வயல்கள் அளந்து பதிவு செய்யும் அடுத்த கட்டம் இன்று ஆரம்பம்

தென்மராட்சி ஜூலை 17

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட் பட்ட காலபோக நெற்செய்கை வயல்கள் அளந்து பதிவு செய் யும் பணிகள் இன்று முதல் அடுத்த கட்டமாக ஆரம்பிக்கப்ப டவுள்ளன.

இதன் பிரகாரம் இன்று அமைப்புக்குட்பட்ட புளியம்பிட்டி பகுதி வயல்களும் நாளைசெவ்வாய்க்கிழமை சங்குப்பிட்டி பகுதி வயல்களும் எதிர்வரும் வியாழக்கிழமை தீசுட்ட வயல் பகுதிகளும் அளந்து பதிவு செய்யப்படுமெனவும் இந்தப் பகுதி யைச் சேர்ந்த நெற்செய்கையாளர்கள் தமது வயல்களின் உறுதி அல்லது குத்தகைப் பத்திரம் ஆகியவற்றின் புகைப் டப் பிரதியுடன் வருகை தருமாறு கமக்கார அமைப்பின் தலைவர் வி.சதானந்தன் அறிவித்துள்ளார். (21-9)





திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு தீர்த் தத் திருவிழாவான கடந்த புதன் கிழமை இரவு நடைபெற்றது. நிகழ்ச்சியின்போது சிறப்புப் பரிசாக செல்வி அபிஷாயினி கலியுகவரதன் தங்கப்பதக்கத் தைப் பெற்றுக் கொண்டார். மாகாண சபை உறுப்பி னர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் முதன்மைவிருந்தின ராக சின்மயா மிஷன் ஆச்சார்யார் ஜாக்ரத சைதன்யா ள் கலந்து கொண்டு ஆன்மிக உரையாற்றினார். (21)

தமிழ்மொழித் தினப் போட்டியில்

## அளவெட்டி அருணோதயாவின் மாணவர்கள் இருவர் முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜூலை 17

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் தனி இசை மற்றும் கட்டுரையாக்கம் ஆகிய போட்டிகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர் கள் இருவர் முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர் என்று கல்லூரி அதிபர் நா. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பிரிவு 1 இல் கட்டுரையாக்கப் போட்டியில் உதய குமார் கம்சாயினி முலாமிடத்தையும், பிரிவு 5 இல் தனி இசையில் நித்தியானந்தன் சிவாஜன் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

கொழும்பு டீ.எஸ் சேனநாயக்க மகா வித்தியால யத்தில் போட்டிகள் இடம்பெறுகின்றன. (4)

## கார்த்திகைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவி லின் ஆடிக்கார்த்திகைப் பெருவிழா நாளை மறு தினம் புதன்கிழமை காலை 5 மணிக்கு அதி காலை வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. சிறப்பு மேளக்கச்சேரி யும்,வாணவேடிக்கைகளும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (21-ரி)

## வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 10ஆம் நாள் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும் என்று தெரிவிக் கப்பட்டது. (21-ரி)

மயான விவகாரம்

## போராடும் மக்களுக்கு ஆதரவு வழங்குங்கள்

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 17

மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றுவது தொடர்பில் போராடும் மக்களுக்குஆதரவுவழங்குமாறுசமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பினால் வெளியிடப் பட்ட செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

வடக்கு மாகாண சபையே! மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்று. மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து. கிராமியக் கட்ட மைப்பை வலுப்படுத்து என்ற கோரிக்கையை முன்வைத்துக் கடந்த புதன்கிழமை தொடக்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை புத்தூர் மேற்கு, கலைமதி கிராம மக்கள் ஆரம்பித்திருந்தார்கள். இந்தப்போராட்டம் நான்காவது நாளாக இன்றும் (நேற்று முன்தினம்) இவ்வூர் மக்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அனைத்து அரசியல் கட்சிகள், சமூகஅமைப்புகள்,தொழிற் சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், இளைஞர் அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், மாணவர் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்கின்றது. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானங்களால் பல்வேறு சுற்றுச் சூழல், சுகாதார மற்றும் உளவியற் பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்கின்றனர். ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்தை இதுவரை எந்தவொரு மக்கள் பிரதிநிதிகளோ, அதிகாரிகளோ கவனத்தில் எடுக்காமையை வன்மையாகக் கண்டிப்பதுடன், அனைத்து மக்களையும் இப்போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (21-12)

## வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி தேசிய மட்ட வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலிடம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் தேசிய மட்ட தமிழ்மொழித்தின வில்லுப்பாட்டு போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர் என கல்லூரி முதல்வர் வண.டி.எஸ்.சொலமன் தெரிவித்தார்.

"கல்லூரியின் மூத்த ஆசிரியர் து.கணேசமூர்த்தியின் வழிகாட்டலில் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் (2017) தேசிய மட்டத்தில் வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை எமது கல்லூரி சுவீகரித்தது. 2010ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணக் கல்லூரி தேசிய மட்ட வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது." என்று கல்லூரி முதல்வர் மேலும் தெரிவித்தார். (50)

## கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம் யாழ். செயலகத்தில் இன்று செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17
கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம் குறித்த வேலைப்பட்டறை மற்றும் அனுபவ பகிர்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இந்தச் செயலமர்வு இடம்பெற வுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நிலத்தடி நீர் மாசுபட்டும், உவராகியும், மலக் கழிவு கலந்தும் உள்ளது என்று கூறப்பட்டு வருகின்றது.

இதனால் சுத்தமான குடிதண்ணீரைப் பெற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கடல் நீரை நன்னீராக்கி அவசர திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்குவது குறித்த கலந் துரையாடலே இன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இன்றையதினம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணத்துவ ஆலோசகர் எஸ்.எம்.குரூஸ் வரவேற்புரை நிகழ்த்துவார். மாவட்டச் செயலாளர் நா.வேத நாயகன் தலைமையுரை நிகழ்த்துவார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டம் தொடர்பில் திட்டப்ப ணிப்பாளர் எந்திரி. தி.பாரதிதாசன் விளக்கவு ரையாற்றுவார்.

கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் குறித்து ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த மூத்த பொறியி யலாளர் எஸ்.ஜெயசீலன் விளக்கமளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (21,50)



யாழ்ப்பாணம் தீவக வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் , வேலணை மத்திய கல்லூரி மண்ட பத்தில் ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கு தமிழ்மொ ழிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை நடைபெற்றது . இதில் வேலணைப் பிரதேசத்தில் உள்ள ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கல்வி கற்கும் கலைத்துறை மாணவர்கள் கலந்துகொண் டனர். (21-ரி)

## அராலி இந்துவில் நாளை பரிசளிப்பு

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2மணிக்கு சொர்ணம் செல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் பா.பாலகு மார் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோ கரனும், சிறப்பு விருந்தின ராக ஆஸ்திரேலியா பொறி யியலாளர் சிவானந்தன் தம்பதிகள் லண்டனிலுள்ள விரிவுரையாளர் தி.விஜய காந்தரூபனும், மதிப்புறு விருந்தினராக கல்லூரியின் ஓய்வுபெற்ற சங்கீத ஆசி ரியைதிருமதிசிவகாமசுந்தரி விஜயரட்ணமும் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக் கப்பட்டது.. (4)

## ஆடிக் கார்த்திகை

யாழ்ப்பாணம், ஜூலை 17
நீர்வேலி தெற்கு கந்தசுவாமி ஆலயத்தில் நாளை செவ் வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆடி மாத கார்த் திகை உற்சவம் இடம் பெறும் என்று அறிவிக்கப் பட்டது. (4,17)

## கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 17
கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாக்களில் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறு நாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளன. (4)

## ஆடிச் செவ்வாய் வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை ஆடிச்செவ்வாயை வழிபாடு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முற்பகல் 11 மணிக்கு சிறப்பு முழுக்கு வழிபாடுகள் இடம் பெற்றுத் தொடர்ந்து தீப வழிபாடு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (4,17)

## மணல் பதுக்கல் பொலிஸாரிடம் சிக்கியது

அல்லாரை வடக்குப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 115 லோட் மணல் குவியல்களைப் பொலிஸார் கண்டு பிடித்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரி விக்கப்பட்டது.

"அல்லாரைப் பகுதியில் இருந்து சட்ட விரோதமாகக் கடத்திக் கொண்டு வரப் பட்ட மணல் அல்லாரைவடக்கில் மறை வான இடத்தில் பறிக்கப்பட் டிருந்தது. இந்த மணல் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை மாலை கண்டு பிடிக்கப்பட்டது. தற்போது பொலிஸாரின் பாதுகாப்பில் அது உள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (21-9)



தேசிய மட்டத் தமிழ்த் தினப், போட்டியில் இரண்டாம்பிரி வுக்கான பேச்சுப் போட்டியில் வடக்கு மாகாணத் துக்கு இரண்டாம் இடம் கிடைத்துள் ளது. யாழ்ப்பா ணம் புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவகுமார் கலிஸ்ரா இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். டி.எஸ் சேனநாயக்கா கல்லூரியில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற இந்தப்போட்டியில் முதலாம் இடம் மத்திய மாகாணத்துக்கும் 3ஆம் இடம் கிழக்கு மாகாணத்துக்கும் கிடைத்துள்ளன. (21-12)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 80 | 60 |
| கத்தரி | 100 | 120 | 120 | 140 | 140 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 140 | 160 | 120 | 140 |
| பாகல் | 140 | 140 | 240 | 180 | 180 |
| க.கிழங்கு | 140 | 130 | 160 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 200 | 260 | 260 | 260 |
| பூசணி | 90 | 120 | 100 | 120 | 80 |
| தக்காளி | 150 | 150 | 140 | 140 | 140 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60 | 60 |
| கீரை | 30 | 40 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 250 | 300 | 250 | 200 |
| புடோல் | 80 | 100 | 100 | 80 | 80 |
| கோவா | 120 | 150 | 140 | 120 | 120 |
| வெண்டி | 100 | 100 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 180 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 70 | 50 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 90 |
| தேசிக்காய் | 70 | 60 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 150 | 240 | 180 | 160 | 240 |
| இராசவள்ளி | 350 | 300 | 300 | 260 | |
| முருங்கைக்காய் | 240 | 240 | 240 | 150 | 200 |



## சாதனை

தேசியமட்ட தமிழ்த் தினப்போட்டிகளில் கரகாட்டப் போட்டியில் பங்குபற்றி வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மாணவர்கள் முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களே முதலிடத்தைப் பெற்றனர். (21)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 700 | 800 | 1000 |
| பாரை | 500 | 600 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 500 | 500 | 500 | 600 |
| விளை. | 500 | 400 | 400 | 600 |
| முரல் | 400 | 500 | 300 | 500 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 400 | 400 | 500 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | – |
| சூடை | 200 | 100 | 200 | – |
| ஒட்டி | 300 | 300 | 300 | – |
| திருக்கை | 380 | 250 | 400 | 300 |
| மதனம் | 300 | 150 | 250 | – |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 250 | 250 | 600 | – |
| வாழை | 200 | 200 | 500 | – |




சமையல் செய்யும் பெண்கள் தற் போது இலகுவாகவும், விரைவாகவும் உள்ளியை உடைப்பதற்கு உள்ளி வெட்டும் கருவி சந்தைக்கு வந்துள் ளது. இது 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## வடக்கு விவசாய அபிவிருத்திக்கு 135 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

மாகாணத்துக்காக குறித்து ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதிமூலம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண விவசாய அபிவிருத்திக்கு "மாகாணத்துக்கான குறித்து ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதிமூலம் 135 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் பகிரப்படும். அந்த நிதியில் 18 வகையான விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொருமாவட்டத்திலும் 18 வகையான வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது, விவசாய அபிவிருத்தியை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் 18 வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சில 50 வீத மானிய உதவியுடன் கூடியதாகவும் சில நூறு வீதமும் மானிய உதவியுடன் கூடியதாக மேற்கொள்ளப்படவுள்ளன.

விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு தேவையான பயனாளி தெரிவுகள் பெரும் பிரிவுகளுக்கு பொறுப்பான விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

18 வகையான விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் நெல் உற்பத்தி அபிவிருத்தி உவர் நில நெற்பயிர்ச்செய்கை பப்பாசி தேசி பயிர்ச்செய்கை தேனீவளர்ப்பு காளான் உற்பத்தி பழப்பயிர் உற்பத்தி உண்மை வெங்காய விதை உற்பத்தி வளவியல் பயிர்ச்செய்கை உள்ளிட்ட பதினெட்டு வகையான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

(21-11)

## நீர் விநியோக தடை நீங்கியது

சம்மேளன செயலாளர் சிவமோகன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 17
இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொண்ட 900 ஏக்கர் நெற் பயிரை காப்பாற்றுவது தொடர்பில் எழுந்த அச்சம் நீங்கியது. அந்தப் பயிர்களுக்கான நீர் விநியோகம் தடையின்றி மேற்கொள்வதற்கு வழிமுறைகள் இனங்காணப்பட்டு நீர்பாசனத் திணைக்களத்தினரால் அவை சீர்செய்யப்பட்டுள்ளன. என இரணைமடு விவசாயிகள் சம்மேளன செயலாளர் சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டின் சிறுபோக நெற் செய்கைக்காக 900 ஏக்கர் நெல் பயிரிடப்பட்டது. அவ்வாறு பயிரிடப்பட்ட நெல்லுக்கான நீர்ப்பாய்ச்சல் இடம்பெறும் வேளையில் ஓர் புதிய நெருக்கடி எதிர் கொள்ளப்பட்டது. அந்த நெருக்கடி உடனடியாக விவசாயிகளால் சுட்டிக் காட்டப்பட்டது. பயிரிடப்பட்ட நெல்லுக்கு இன்னமும் குறைந்த பட்சம் இரண்டு தடவைகள் நீர்ப்பாசனம் தேவையாகவுள்ளது. இந்த நிலையில் இரணைமடுக் குளத்தினுள் நீர் உள்ளபோதும் வாய்க்கால் மற்றும் குளத்துப் பிரதேசங்களில் இடம்பெற்ற சீரமைப்பு பணிகளின்போது போடப்பட்ட தடுப்பணைகள் மற்றும் சகதிகளால் நீர் வாய்க்காலில் ஓடுவது தடைப்பட்டது. குறித்த விடயத்தினை உடனடியாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். துரித செயலில் இறங்கிய நீர்ப்பாசனத் திணைக்களம் உடனடியாகவே இன்று (நேற்று முன்தினம்) கனரக இயந்திரங்கள் மூலம் சேறு அகற்றி தடையற்ற நீர் விநியோகத்துக்கு வழி அமைத்து கொடுத்துள்ளனர். இதனால் குளத்தில் இருந்து மேலும் 3 அடிக்கு மேற்பட்ட நீரை பெற்றுக்கொள்ளமுடியும். குளத்தின் பாதுகாப்பு, கால்நடை பராமரிப்பிற்கும் எஞ்சிய நீர் என அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படுவதோடு விவசாயிகளின் நூறு வீதப் பயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் தன்மையும் காணப்படுகின்றது.

இதனால் விவசாயிகள் எவரும் அச்சம் கொள்ளும் நிலையில் இல்லை. என்றார். (21-101)



முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 2008 ஆம் ஆண்டுவரையில் மிகவும் புகழ் பெற்று விளங்கிய முக்கிய இடம் தற்போது அழிவடைந்து பராமரிப்பு இன்றிக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. புதுக்குடியிருப்புச் சந்தியில் முல்லைத்தீவு பரந்தன் சாலையோரம் காணப்படும் இது சிறிய கட்டடம் போர்க்காலத்தில் புதுக்குடியிருப்பில் இருந்து மக்கள் படைக்குச் சென்றவர்களுக்கான பயிற்சி ஏற்பாட்டு நிலையத்தினர் தங்கியிருந்த இடமாகும். அந்தப் பகுதியைச் சூழ டோசர்கள் மூலம் துப்பரவுப் பணிகள் இடம்பெறுவதால் குறித்த கட்டடமும் அழிக்கம்படுமா என்ற ஏக்கமும் ஏற்பட்டுள்ளது. போர்க் காலத்தில் இயங்கிய பல மாவீரர் மண்டபங்கள் முதல் இவ்வாறான இடங்கள் வரையில் தற்போது இல்லாதழிக்கப்பட்டு அந்த இடங்களில் பிற கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (21-101)

## தமிழர் ஒற்றுமையை குலைக்க சிலர் முயற்சி

கிளிநொச்சி மாவட்டக் கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் தலைவர் காட்டம்



கிளிநொச்சி, ஜூலை 17
தமது அரசியல் ஆதாயங்களுக்காக தமிழ் மக்களிடையே ஒற்றுமையைச் சிதறடித்து குழப்பங்களை ஏற்படுத்தப் பல குழுக்களால் பல சதித்திட்டங்கள் தீட்டப்பட்டு எமது பிரதேசங்களில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இவ்விடயத்தில் எமது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இது எமது விடுதலைக்கான எமது இலட்சியப் பயணத்தில் தடங்கல்களை ஏற்படுத்தும்.

இவ்வாறு கரைச்சிப்பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்டக் கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் தலைவருமான ப. குமார்சிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தமிழ் தேசிய உணர்வாளர்களை கடந்த புதன்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் சந்தித்தார். தற்போதைய அரசியல் சூழ்நிலை, புதிய அரசியலமைப்பு வரைபு பற்றிய கருத்துக்களை வழங்கியிருந்தார். அந்த நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது, எமது தமிழினத்தின் விடுதலைக்காகப் பயணிக்கின்றபோது பல வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்துத்தான் ஆகவேண்டும் என்பதை எங்களுடைய வரலாற்றினூடாக நாம் கற்றுள்ளோம். தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப்படும்போது அதனைப் பொறுத்துக்கொள்ளாத இனவாதிகளாலும் அதனைக் குழப்புவதால் தாம் எந்தள்வு ஆதாயமடையலாம் என்ற தீய நோக்கம் கொண்ட எம் மத்தியில் வாழும் சில அரசியல் குழுக்களும் அதனைக் குழப்பி வந்துள்ளதை நாம் வரலாற்றில் கண்டுள்ளோம். அதேசெயற்பாடுகள் தான் தற்போதும் இடம் பெற்று வருகின்றன. தமிழ் மக்களின் ஆணை கிடைத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா அவர்களது காலத்தில் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுத்திட்டம் கிடைக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களுடைய பேரவா. அவரது காலத்தில் தமிழ் மக்களுக்குரிய நிரந்தர தீர்வுத்திட்டம் வழங்கப்படும் என்பது எமது நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும். இந்நிலையில் எமது மக்களிடையே உள்ள ஒற்றுமையைச் சிதறடித்து மக்களைக் குழப்பி தமிழர்களின் பலத்தை உடைப்பதற்கான செயற்பாடுகள் நன்குதிட்டமிடப்பட்ட முறையில் குறுகிய சிந்தனைகொண்ட சுயலாப அரசியல் நடத்தும் குழுக்களால் நடைபெற்று வருகின்றன. இப்படியான சதித்திட்டங்கள் எமது பிரதேசங்களில் தற்போது மிகவும் தீவிரமான முறையில் இடம்பெற்றுவருகின்றன. இவ்விடயத்தில் எமது மக்கள் தெளிவான நிலையிலுள்ளார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் அரசியல் வறுமைக்குள்ளும் வெறுமைக்குள்ளும் வாழும் அரசியல் குழுக்கள் சிலவற்றின் இப்படியான சதித்திட்டங்களால் எமது மக்களது ஒற்றுமையைக் குழப்பி தமிழர்களது பலத்தை சிதைத்தழித்துவிடமுடியாது என்பதே உண்மை. என்றார். (21-426)

## நெடுந்தீவுக் கடலில் நங்கூரமிடும் தளம் தேவை

கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

நெடுந்தீவு, ஜூலை 16
நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீன்பிடிக் கலங்களைப் பாதுகாப்பாக நங்கூரமிட்டு தரித்து வைப்பதற்கும் பாதுகாப்பாகக் கரை சேருவதற்கும் நங்ககூரமிடுதளமோ அல்லது எந்த விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் பிரதேசத்தில் இல்லை என அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்தாவது, பல்வேறு நிலைகளிலும் பின்தங்கிக் காணப்படும் எமது நெடுந்தீவுப் பிரதேசத்தில் பெரும்பாலானோர் கடற்றொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றோம். ஆயிரத்து 200 கடற்றொழிலாளர்களைக் கொண்ட எமது பிரதேசத்தில் ஒருநாள் படகுகள், சிறிய படகுகள், தெப்பங்கள் என அறுநூற்றுக்கும் மேற்பட்ட மீன்பிடிக் கலங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையில் எமது மீன் பிடிக் கலங்களைப் பாதுகாப்பான முறையில் நங்கூரமிட்டுத் தரித்து வைப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. இதனால் காற்று கடுமையாக வீசும் நேரம் மற்றும் கடற்கொந்தளிப்பான நாள்களில் படகுகள் அறுபட்டு பாறைகளுடன் மோதுண்டு மிகுந்த சேதங்களுக்கு உள்ளாகின்றன். பெரும் இழப்புக்களை எமது மீனவர்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இழப்புக்களை எதிர்கொண்டவர்கள் இன்னமும் அதிலிருந்து மீள முடியாமல் உள்ளனர். எமது மீனவர் பாதுகாப்பற்ற இந்தக் கடலோரம் தமது படகுகளைப் பாதுகாக்க முடியாமல் திண்டாடுவதும், அல்லலுறுவதும் கண்கூடாகும். தினம்தினம் தொழிலுக்குச் செல்ல முடியாமலும் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இந்த நாள்கள் இவர்களுக்கு வருமானமற்ற நாள்களாகவே அமைகின்றன என்றனர்.

இது தொடர்பாக நெடுந்தீவு கடற்றொழில் சங்கத் தலைவர் அருள்ஜீவன் தெரிவித்ததாவது, இந்தவிடயம் தொடர்பாக நாம் பல வருடகாலமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதல் அரசியல் தலைமைகள் வரை பல்வேறு தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். இதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக பல வருடங்களாகக் கூறப்பட்டு வருகின்றதே தவிர முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எமது பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை. இது எமது நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. மீனவக் குடும்பங்கள் அதிகமாக வாழும் நெடுந்தீவின் வடக்குக் கரையோரப் பகுதியில் தமது மீன்பிடிக்கலங்களை பாதுகாப்பான முறையில் நங்கூரமிட்டு வைப்பதற்கான நங்கூரம் இடும் தளமொன்றை அமைத்துத் தரும்படி எமது மீனவர்கள் கோரி நிற்கின்றார்கள். இது எமது நீண்ட நாள் கோரிக்கையாகும். இதன் மூலமாக நெடுந்தீவுப் பிரதேச மீனவர்களது முக்கியமானதொரு பிரச்சினையொன்று தீர்க்கப்படுவதுடன் நெடுந்தீவு பிரதேசத்தின் கடற்றொழில் மேம்பாடு அமைவதற்கும் மீனவக் குடும்பங்களது வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கும் இது வழிகோலும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் எமது பிரச்சினை தொடர்பில் மேலான கவனமெடுத்து செயற்பட வேண்டுமென பாதிப்புறும் மீனவ சமூகத்தினரைப் பிரதிநிதித்து வப்படுத்தும் அமைப்பு என்கின்ற வகையில் நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினராகிய நாம் எமது மக்களுடன் இணைந்த வகையில் எம் கோரிக்கையை முன்வைக்கின்றோம் என்றார்.

(21-10)




## மயிலிட்டியில் குடியமர்ந்த மக்கள்

# பிரச்சினையைக் கூறினால் உதவுவதற்குத் தயார்

### வடக்கு மாகாண கடற்படை தளபதி ரியர் அட்மிரல் கே.கே ஜெயந்த டி சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

மயிலிட்டித் துறைமுக மீனவர்கள் தமக்கு ஏதும் பிரச்சினை அல்லது அபிவிருத்தி தொடர்பான தேவை இருப்பின் அது குறித்து எமக்குத் தெரியப்படுத்தினால் நாம் அவர்களுக்கு உதவுவதற்குத் தயாராக உள்ளோம்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கடற்படை தளபதி ரியர் அட்மிரல் கே.கே ஜெயந்த டி சில்வா தெரிவித்தார்.

வடமாகாணக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் கே.கே.ஜெயந்த டிசில்வாக்கும் யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் கந்தசாமி கருணாகரனுக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் காங்கேசன் துறை தலைமையகத்தில் இடம்பெற்றது. அதன்போதே கடற்படைத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

சந்திப்பின்போது நயினை அம்மன் உற்சவத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட படகுகளின் தரம் மற்றும் உயிர் காக்கும் அங்கிகள் தொடர்பாகவும், குறிகட்டு வான் துறைமுக அபிவிருத்தி தொடர்பாகவும், மாவட்டக் கரையோர பாதுகாப்பு மற்றும் கடற்கரைத் திண்மக் கழிவு என்பன குறித்து கலந்துரையாடப்பட்டது.

"நயினாதீவு அம்மன் உற்சவ காலத்தில் நான் சகல படகுகளை சோதித்து அவற்றில் தகுதியான 43 படகுகளுக்கு அனுமதித்திருந்தேன். அதிலும் உயிர் காக்கும் அங்கிகளின் தரம், மற்றும் அதனை ஒவ்வொரு பிரயாணத்தின் போதும் பிரயாணிகள் அணிய வேண்டும் என்பதில் நான் முழு கட்டுப்பாடு பொறுப்புணர்வுடன் இருந்தேன். அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பொறி (பாதை) சேவையை தேவையான நேரத்தில் சனத்தொகை நெரிசலுக்கு ஏற்ப முன்னெடுத்தேன். உற்சவ காலங்களில் நாம் ஒரு லட்சத்து 50ஆயிரம் லீற்றர் குடிதண்ணீரை ஆலய தேவைக்காக வழங்கியிருந்தோம்.

குறிகாட்டுவான் துறைமுக அபிவிருத்தி, பிரயாணிகள் தங்குமிட கட்டடம், மலசலகூடம் மற்றும் அதற்கான வீதி போக்குவரத்து மீள்சீரமைப்பு குறித்து நான் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ஊடாக பேசியுள்ளேன். அதற்கான முன்மொழிவுப் பத்திரங்களையும் முன்வைத்துள்ளேன்.

இந்தத் திட்டம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரியது. அவர்கள் இந்த உட்கட்டுமான அபிவிருத்திக்கு முன்வந்தால் அவர்களுக்கு நாம் தோள்கொடுத்து உதவுவோம். அபிவிருத்தி அடைந்து வரும் சூழலில் நாமும் அதற்கேற்ற விதத்தில் மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட அபிவிருத்தியில் செயலர் வேதநாயகன் முன்னின்று செயற்படும் அதிகாரி, அவர் ஊடாக இந்த அபிவிருத்தி முன்னகர்த்தப்படும். நயினாதீவு உற்சவகாலங்களில் அரச நிறுவனங்களின் பங்கு செயற்பாடு என்பது மிகக் குறைவாக இருந்தது. இதை என்னால் அவதானிக்க முடிந்தது. தீவக அரச நிறுவனங்களின் பங்களிப்பு இருந்திருந்தால் இன்னும் நயினை கால உற்சவம் சிறப்படைந்து அடியார்களுக்கான சேவை இடம்பெற்றிருக்கும். ஆலயத்தின் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் நாம் பங்கெடுத்திருந்தோம். சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஆலய நிர்வாகத்துக்கும் எமக்குமான தொடர்பு சரியாகப்படாமை எமக்கு மிகுந்த கவலையை அளித்தது.

கடற்கரையோரங்களில் திண்மக் கழிவுகளையோ அல்லது வேறு ஏதேனும் கழிவுகளை கொட்டுபவர்களை நாம் இனம் கண்டால் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவோம். மயிலிட்டி, ஊர்காவற்துறை நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் பெரிய உட்கட்டுமான அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம். மயிலிட்டி துறைமுகம் அண்மையில் விடுவிக்கப்பட்டது. மீனவர்கள் தமக்கு ஏதும் பிரச்சினை அல்லது அபிவிருத்தி தேவை குறித்து முன்வைத்ததால் நாம் உதவுவதற்குத் தயாராக உள்ளோம் என்று கடற்படை தளபதி தெரிவித்தார்.

(21-50)

# சிறுவர் இல்லங்களின் தேவை வடக்கில் அதிகமாக உள்ளது

### வடக்கு அமைச்சர் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு

வவுனியா, ஜூலை 17

நீதிமன்றங்களால் சீர்திருத்தத்துக்காக அனுப்படும் சிறுவர்களை பராமரிப்பதற்கு வடக்கு மாகாணத்தில் சிறுவர் இல்லங்கள் போதாது உள்ளன. சிறுவர் இல்லங்களை மேம்படுத்த வேண்டியதேவைஎமக்கிருக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செலயக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட இணைத்தலைவர்கள் அண்மையில் வவுனியா அன்பகம் ஒன்றில் இடம்பெற்ற சிறுவர்கள் மீதான வன்முறைகள். அவை தொடர்பில் அதில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் திட்டவரைவுகள் தொடர்பாக விளக்கம் கேட்கப்பட்டது. அதன்போதே அமைச்சர் ப. சத்தியலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்வது தொடர்பாக நியதிச்சட்டம் கடந்த வரும் வடமாகாணசபையில் கொண்டுவரப்பட்டது. 6மாதம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உருவாக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் மூலம் சிறுவர் இல்லங்கள் சட்ட ரீதியாக மூடப்படலாம். சிறுவர் இல்லங்களை சட்ட ரீதியாக மூடுவதாக இருந்தால் அந்த நிதியச்சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். தற்போது சிறுவர் இல்லங்களில் விடப்படும் சிறுவர்களுக்கு பெற்றோர்கள் உள்ளனர். நீதிமன்றத்தால் அனுப்பிவைக்கப்படும் சிறுவர்களுக்கு இல்லங்கள் போதாமல் உள்ளன. இல்லங்களில் சமூக சேவைகள் மேற்கொள்ளப்படுவதால் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் சிறுவர்கள் அங்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள். நாங்கள் தற்போது திடீரென சிறுவர் இல்லங்களை மூடமுடியாது. சிறுவர் இல்லங்கள் இருக்கவேண்டிய தேவை எங்களுடைய மாகாணத்துக்கு இருக்கின்றது.

வடமாகாணத்தில் 12ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் பெற்றோர்கள் அற்ற நிலையில் உள்ளனர். சிறுவர்கள் இல்லங்களை மேம்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

அந்த வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட சில காலம் செல்லும். என்றார். (21)

# சட்டவிரோத மீன்பிடியைத் தொடர் போராட்டங்கள் மூலமே தடுக்கலாம்

### நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூலை 17

சட்டவிரோத மீன்பிடிகளை உடனடியாக நிறுத்த முடியாது. இவற்றை தொடர் போராட்டங்கள் வாயிலாகவே நிறுத்த முடியும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதன் பிற்பாடு தமிழர்களினுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகிறது. முல்லைத்தீவு கரையோர பிரதேசம் சிங்கள மீனவர்களால் அபகரிக்கப்பட்டு வருகிறது. இழுவை மடிவலை தடைச் சட்டம் போல், புதிதாக சட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் தென்னிலங்கை, இந்திய மீனவர்களின் வருகை குறையவில்லை. எல்லை தாண்டும் மீனவர்களைக் கைது செய்து படகுகளைக் கைய்கப்படுத்தி வைத்திருந்தாலும் சிறிது காலத்துக்கு பின்னர் அவர்களை விடுதலை செய்கின்றனர்.

வடக்கு கடற்பரப்பில் தென்னிலங்கை, இந்தியாவில் இருந்து வந்து சட்டவிரோதமான முறையில் மீன் பிடியில் ஈடுபடுபவர்களை நிறுத்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். சட்டவிரோதமான மீன்பிடிகளை ஒரே இரவில் நிறுத்திவிட முடியாது. அவற்றை தொடர் போராட்டங்கள் வாயிலாகவும் எதிர்ப்புகள் வாயிலாகவுமே நிறுத்த முடியும். என்றார்.

(21-101)

# தமிழ் அரசுக் கட்சியில் பெண்கள் அணிதிரள வேண்டும்

### அந்தக் கட்சியின் தலைவர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி யில் பெண் உறுப்பினர்கள் பங்களிக்கவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா அழைப்பு விடுத்தார்.

மறைந்த தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தை நினைவு கூரும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தை நினைவு கூர்ந்து மாவை சேனாதிராசா ஒளி தீபம் ஏற்றி மாலை அணி வித்தார். தொடர்ந்து இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ்.மாவட்ட கிளை தலைவர் பெ.கனகசபாபதி, நிர்வாக செயலாளர் ஆ.சே.குலநாயகம், முன்னாள் வலி வடக்க பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் மகளிர் அணியினரும் ஒளி தீபம் ஏற்றி வணங்கினர். பின்னர் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணி சீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்றது.



அதில் கருத்து தெரிவிக்கும் போது இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் பெண்கள் அணிதிரண்டு வருகின்றனர். அதேபோல எமது தமிழ் அரசு கட்சியிலும் பெண்கள் அணிதிரளவேண்டும். அதன்மூலம் மக்களுக்கான சேவைகளை, அபிவிருத்திகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கலாம். என்றார்.

நிகழ்வில்கலந்து கொண்ட தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் பிரதேசசபை தவிசாளருமான சுகிர்தன் பெண்களின் பங்களிப்பு பிரதிநிதித்து வம் தொடர்பாக விரிவாக விளக்கமளித்தார். கூட்டத்துக்கு வந்த மகளிர் அமைப்பினருக்கும் மறைந்த தலைவர் அ.அமிர்தலிங்கம் குறித்த நூல்கள் வழங்கப்பட்டன. இறுதியில் இலங்கை தமிழரசு கட்சியின் நிர்வாக செயலாளர் ஆ.சே.குலநாயகதின் நன்றியுரை இடம் பெற்றது.

(21-50-8)

# இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர்தர வீடுகள் நிர்மாணிக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 17

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர் மட்ட வீட்டுத் திட்டமொன்றை பரீட்சார்த்தமாக மேற்கொள்வது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை வழமைக்குக் கொண்டுவருவதற்கான விடயங்களைக் கண்டறியும் பொருட்டு, நெலுவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற காலி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளத்தின் காரணமாக முழுமையாக சேதமடைந்த பாடசாலைகள், பெருந்தெருக்களை மீண்டும் நிர்மாணிப்பதில் கேள்விமனுக் கோரலில் தங்கியிருக்காது திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும் என்றும் அவர் இதன்போது கூறியுள்ளார்.


சேதமடைந்த பொலிஸ் நிலையங்களை மீண்டும் நிர்மாணிக்கும் போது இரண்டு மாடிக் கட்டடங்களாக அவற்றை அமைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த வர்த்தக நிலையங்களை மதிப்பீடு செய்து அவைதொடர்பான அறிக்கையைக் கூடிய விரைவில் பெற்றுக்கொண்டு நிவாரண நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும்.

பொதுமக்களுக்குப் பணத்தை வழங்கி அவர்களது வர்த்தக முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

அத்துடன் கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாயிகள் என்போருக்கு தேவையான நிதியை வழங்கி கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும். சுகாதாரம், குடிதண்ணீர் உள்ளிட்ட வசதிகளைப் போன்று பாதிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் பெரிய பிரச்சினைகள் உள்ளன.

வெள்ளத்தின்போது தொழிற்சாலைகளில் இருந்து காப்புறுதி செய்யப்படாத தயாரிக்கப்பட்ட தேயிலை குறித்த விடயங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுப்பதற்கும் உயிரிழப்புக்களைக் குறைப்பதற்கும் அரச அதிகாரிகளைப் போன்று எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் அரசுடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இதன்மூலம் மக்களின் வாழ்க்கை நிலையை குறுகிய காலத்துக்குள் மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவர முடியும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார். (த-ய)



# தனித்து ஆட்சியமைக்க ஐ.தே.கவினால் முடியும்

*கூறுகிறார் கபீர் ஹாசிம்*

கொழும்பு, ஜூலை 17

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டு உடன்படிக்கை காலாவதியானாலும், ஐக்கிய தேசியக் கட்சியால் தனித்து அரசொன்றை உருவாக்க முடியும் என அந்த கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போதைய கூட்டணி அரசைப் பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அரசில் இருப்பதா, இல்லையா என்பதை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் தீர்மானிக்க முடியும் என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்தில் கூறினார் எனத் தகவல் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# கடற்படை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் தசநாயக்க

கொழும்பு, ஜூலை 17

2008ஆம் ஆண்டு கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க, வெலிசறையில் உள்ள கடற்படை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பரிந்துரையின் பேரிலேயே அவர் கடற்படை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

வெலிசறைக் கடற்படை மருத்துவமனையில் வைத்து கைது செய்யப்பட்ட கொமடோர் டி.கே.பி. தசநாயக்க நோயாளர் காவு வண்டியிலேயே நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதையடுத்து, அவரை ஜூலை 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கொமடோர் டி.கே.பி.தசநாயக்க, பின்னர் தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து தற்போது, வெலிசறையில் உள்ள கடற்படை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அவரது பாதுகாப்புக்காக ஐந்து சிறைக் காவலர்கள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளனர். (த)



# ஊடகங்களைக் கட்டுப்படுத்த எந்தவொரு சட்டமும் வாராது

*சபாநாயகர் கரு ஜயசூரிய கூறுகிறார்*


கொழும்பு, ஜூலை17

அரசு ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான எந்தவொரு சட்டத்தையும் கொண்டு வராது என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சட்டமொன்றைக் கொண்டுவருவதற்கான தேவையோ அல்லது அதற்கான ஏற்பாடுகளோ அரசிடம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் பேசும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக வதந்திகள் பரவி வருவதாகவும், அது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ய)



# அமைச்சர் சாகலவை பதவி நீக்கவேண்டும்

*அரச தலைவருக்கு ஐ.தே.கவின் அமைச்சர்கள் சிலர் அழுத்தம்*

கொழும்பு, ஜூலை17

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் சிலர் அரச தலைவரிடம் கோரியுள்ளனர் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் கீழ் இருக்கும் சட்டம் ஒழுங்கு அமைச்சு, கடந்த அரசின் ஊழல் மோசடிகள் மற்றும் கொலைகள் குறித்த விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லவில்லை என்பதால், அந்த அமைச்சை மூன்று மாதங்களுக்குள் அரசதலைவரின் பொறுப்பின் கீழ் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், விசாரணைகளை துரிதமாக முன்னெடுத்துச் செல்லவும் அதற்கான கூடிய ஒத்துழைப்புகளை வழங்கவும் அமைச்சர் சாகல ரத்நாயக்க இணங்கியுள்ளார் எனத் தெரியவருகிறது.

வெலிக்கடைச் சிறையில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகொலை, ரத்துபஸ்வெலவில் நிராயுதபாணிகளான பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை உட்பட பல சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இந்த வாரத்துக்குள் தீவிரப்படுத்தப்படும் எனக் கூறப்படுகிறது. (த-ய)

# இலங்கை-இந்திய விமானப் படை அம்பாறையில் கூட்டாகப் பயிற்சி

கொழும்பு, ஜூலை 17

அம்பாறை மாவட்டத்தில் இலங்கை விமானப்படையினருடன் இணைந்து இந்திய விமானப்படையினர் வான்வழித் தரையிறக்கப் பயிற்சிகளை மேற்கொண்டனர்.

கடந்த 9ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை இந்தப் பயிற்சிகள் இடம்பெற்றன.

இலங்கை விமானப்படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதற்காக 65 இந்திய விமானப்படையினர், இந்திய விமானப்படையின் போக்குவரத்து விமானம் ஒன்றில் இங்கு வந்திருந்தனர்.

இவர்கள் அம்பாறையில் விமானப்படையினருடன் இணைந்து வான்வழித் தரையிறக்கம் உள்ளிட்ட கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

பயிற்சிகளை முடித்த இந்திய விமானப்படை அணி நேற்று முன் தினம் நாடு திரும்பியுள்ளது. (ய)



# பொதுசன ஐக்கிய முன்னணிக்கு புத்துயிரூட்டவுள்ள மகிந்த, பசில்

கொழும்பு, ஜூலை17

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் நோக்கங்களை விளக்கும் கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 5ஆம் திகதிவரை இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, உறுப்பினர்கள் சேர்க்கப்படவுள்ளனர் என முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சில கருத்தரங்குகளில் மாத்திரம் மகிந்த ராஜபக்ச கலந்து கொள்ளவுள்ளார். எந்த மாவட்டங்களில் அந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படும் என்பதைக் கூறமுடியாது.

தேர்தலை ஒத்திவைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு எதிராக மக்களைத் தெளிவு படுத்துவதே இந்தக் கருத்தரங்குகளின் நோக்கம் எனவும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டார். (த-ய)

**தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
பிரபல்யமான திருமண மண்டபம்
ஒன்றுக்கு பெண்
உபசரிப்பாளர்கள் தேவை.

**077 932 6147**

**சகானியா வெளியீடுகள்**

2016 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டம் G.C.E O/L மாதிரி வினாத்தாள்கள் 5 பாடங்களுக்குமானது புதிதாக வெளிவந்துள்ளது. விலை - 550/= 5பாடங்கள் 5 வருடங்கள் கடந்தகால வினாவிடை தொகுப்பு (Past Papers) விலை 650/= மட்டும். G.C.E O/L தொகுதிப் பாடங்கள் அனைத்தும் வெளி வந்துள்ளது. (CS 5841) (14)

**சகானியா வெளியீடுகள்**
**077 361 3285**
அனைத்து புத்தக சாலைகளிலும்

**அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம்**
**பண்டித் துளசிராம் சுவாமி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள் வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த தேதி நட்சத்திரம் ஜாதகம் ஆகியவற்றைக்கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப்போகின்றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை, லட்சுமிகடாச்சப் பூஜைகள் எல்லா தோசங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும் படிப்பு தொழில், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப்பயணம், வீடு கட்டுதல் கணவன் மனைவி ஒற்றுமை, காதல் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, கல்யாணயோகம், வாஸ்திரம் மற்றும் பிரச்சனைகள் எதிரிகள் கண்திருஸ்டி கோட் வழக்குகள், வாகனப்பொருத்தம், பணப்பிரச்சினை, பிள்ளைகள் குடும்பத்துடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல் லொற்றரி பாக்கியம் மற்றும் வசிகரம் செய்யப்படும் ராசிக்கற்கள் பார்த்துச் சொல்லப்படும். எண்கணிதப்படி மணமக்கள் பொருத்தம் பார்க்கப்படும் நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள். **காலை 9.00 - மாலை 7.00**

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (முல்லை சந்தி)**
**077 218 6324**

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2903 திகதி 15.07.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 19 20 31 43 I
போனஸ் இல.: 61
திங்கட்கிழமை ஜக்பொட்: ரூ.31,504,770/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 33 35 55 58

நீலநிற டிக்கட்டுக்கள் 2017.07.17 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்



### காங்கேசு சின்னத்தம்பி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு சின்னத்தம்பி 08.07.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், சசிலாவின் பாசமிகு கணவரும், கணபதிப்பிள்ளை - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தர்சிகா, தசிகரன், தனுசியா, சிதுர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிறைஞ்சன், ராகவி ஆகியோரின் பாசமிகு மாமனும் அம்பிகாவதி, நல்லம்மா, பழனி, விக்னேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும், ஆதவன், அர்யுனன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2017) திங்கட்கிழமை சுவிஸ்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நீர்வேலி மேற்கு,
மாலை வைரவர் கோயிலடி, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 664 9104 / 076 649 5976**

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 02 . 1928



மறைவு
15 . 07 . 2017

### திருமதி சிவக்கொழுந்து சிவகுரு

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், 24/3, மதவடி லேன், கே.கே. எஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சிவகுரு 15.07.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா சிவகுருவின் அன்பு மனைவியும், சண்முகநாதன் (கனடா), சிவலிங்கநாதன் (நாதன் சூ பலஸ் - யாழ்ப்பாணம்), மங்கையர்க்கரசி (கனடா), யோகநாதன், திருலிங்கநாதன் (அபிராமி சூ சென்ரர்-யாழ்ப்பாணம்), சிவநாதன் (கனடா), இலங்கநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லீலாவதி (கனடா), செல்வராணி (கனடா), காலஞ்சென்ற பரமசாமி மற்றும் விஜயலட்சுமி, சசிகலா, ஜீவரஞ்சினி (கனடா), சுகந்தினி ( கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கண்மணி, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, செல்லையா, தம்பு, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதானந்தன் - வினோதினி, கிருபானந்தன் - சர்மிளா, நித்தியானந்தன் - குசாந்தினி, ரஜனி - குணபாலன், கிருஷாந்தி - கஜேந்திரன், பத்மரூபி-ஞானரவி, ஜெகதீபன் - அனுந்திகா, ரஜீவன் - தயாழினி, சதாநந்தினி - லக் ஷ்மிகாந்தன், ராகுலன், சுபாஜினி - சக்திவேல், கேதீசன், தனுஷா, பிரியதர்சினி, திலக் ஷன், சதுர்ஜன், அபிராமி, பபித்தா, நிவேதா, பிரணவன், அபினா, அஜின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாஜினி, அஷ்வினி, சாலினி, வினுஷன், ருக் ஷி, லக் ஷிகன், கிருஷிகா,பிருதிகா, தனுஷன், மகிசிகன், ஹரிசன், சபரினா, ஷாசனா, ருதேஷ், சரணி, அக் ஷிகா, வினுஷ், ஆரூரன், ஆருஷா, அட்ஷயா, ஆரியன், அர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2017) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**021 222 1375**


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வைத்திலிங்கம் இலட்சுமணன் (பனங்கட்டி)

தோற்றம்
28.07.1939

மறைவு
17.07.2011



ஆனதய்யா ஆறாண்டுகள்
ஆறவில்லை எம் அந்தரங்கம்
ஆறாத கடல் அலை போல்
ஆறாது எம் இதயங்கள்
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
ஆறாது ஐயா உங்கள் அரவணைப்பு
ஆறுதலோடு எம்மை அரவணைத்து
உயர்த்திய தெய்வமே ஐயா !

என்றும் உங்கள் அன்போடு வாழ்ந்திருப்போம் ஐயா!

மனைவி - சிவக்கொழுந்து,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தந்தை காலடி எமது கோயில்

**இலட்சுமணன் காட்வெயர்**
**கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.**

## புலிகளை அழித்ததால் மகிந்த அகற்றப்பட்டார்

கூறுகிறார் தினேஸ் குணவர்த்தன

புலிகளைத் தோற்கடித்ததால்தான் மகிந்த தோற்கடிக்கப்பட்டார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும் பொது எதிர ணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: மகிந்த தோல்வியடைந்தமைக்குப் பலரும் பல்வேறு வகையான காரணங்களைக் கூறிவருகின்றனர். பொருளாதார வீழ்ச்சியே அவரது வீழ்ச்சிக்குக் காரணம் என்று சிலரும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளே காரணம் எனச் சிலரும் கூறி வருகின்றனர். இவை ஏதோ ஒரு வகையில் காரணமாக இருக்கலாம். ஆனால் முக்கியமான காரணம் இவையல்ல. புலிகளைத் தோற்கடித்தமைதான் மஹிந்தவின் வீழ்ச்சிக்குக் காரணம். அவர் புலிகளைத் தோற்கடித்ததால் அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று சர்வதேசம் வெளிப்படையாகவே கூறியது. மகிந்த நினைத்தி ருந்தால் அவரது அரசியல் இருப்புக்காக புலிகளைத் தோற்கடிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர் அவரது அரசியல் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை. நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்தார். இத னால்தான் அவர் புலிகளைத் தோற்கடித்தார். இன்று அவர்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அவரை அரசியலில் இருந்து அகற்றுவதற்கு சதி செய்யப்படுகின்றது. இவர்கள் என்னதான் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினா லும் அவர் மக்கள் மனங்களில் வாழ்கின்றார். மக்கள் அவரை அங்கீகரிக்கின்றனர். சதி என்றென்றும் வெற்றியடைந்து கொண்டே இருக்காது என்பதை சதிகாரர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (த-3)

# மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் விமர்சித்திருப்பாரா டிலான்?

## சு.க. பொதுச் செயலாளர் துமிந்த பதிலடி

கொழும்பு, ஜூலை 17

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கட்சியின் பொதுச்செயலாளரை விமர்சனம் செய்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை டிலான் பெரேரா நினைத்துப்பார்க்க வேண்டும் எனச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் பேச்சாளருமான டிலான் பெரேரா, அண்மையில் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் டிலான் பெரேரா அண்மையில், துமிந்த திஸாநாயக்கவின் கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமானவை எனக் கூறியிருந்தார். கட்சியின் பொதுச்செயலாளர் ஒருவரைப் பகிரங்கமாக இவ்வாறு விமர்சனம் செய்வதன் மூலம் டிலான் பெரேரா, தனது அரசியல் அனுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி யுள்ளார். இதனால் எவருக்கும் எந்தவொரு கருத்தையும் வெளியிட அனுமதியுண்டு.

விமர்சனங்கள் மற்றும் இழிவுபடுத்தல்கள் மூலம் தமது அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச கட்சியின் தலைமை வகித்த காலத்தில் தேசிய அமைப்பாளரை விமர்சனம் செய்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் - என்றார். (த-ய)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் ஏவிளம்பி வருடம் ஆனிமாதம்
25 ஆம் நாள் (09.07.2017)
ஞாயிற்றுக்கிழமை
பௌர்ணமித் திதியில் இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

**வெங்கிடாசலசர்மா இராஜகோபாலசர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள்
பின்வரும்
தினங்களில் நடைபெறும்.

*18.07.2017 - செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தசாகம்*
*19.07.2017 - புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏகோதிஷ்டம், மாசிகம்*
*20.07.2017 - வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சபிண்டீகரணம்*
*21.07.2017 - வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிரஹயக்ஞம்*
*நண்பகல் 12.00 மணிக்கு சமாராதனை (மதியபோசனம்)*

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் (மதியபோசனத்திலும்) கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 654 4400, 077 615 1790

## 88 ஆவது பிறந்த தினமும் 3 ஆம் ஆண்டு நினைவலைகளும்

தாயின் மடியில்
17
.
07
.
1929



இறைவன் திருப்பாதங்களில்
21
.
04
.
2014

**வைத்திய கலாநிதி செல்வதுரை இந்திரராசா**

உங்கள் நினைவுடன் வாழும்

**அன்பின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"செல்வம்", 114, பலாலி றோட், உரும்பிராய்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமைபுரியும்
**நாகப்பர் தேவபாலன்**
அவர்களின் அன்புத் தாயாராகிய
**திருமதி மகேஸ்வரி நாகப்பர்**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவரின் பிரிவால் துயருறும்
**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம் பருத்தித்துறை.**

சிவமயம்

## நினைவுப் பிரார்த்தனை அழைப்பு

மண்ணில்
01
.
08
.
1937



விண்ணில்
17
.
06
.
2017

பன்னாலை சைவநெறிக் காவலர்

**அமரர் சரவணமுத்து விநாயகரத்தினம்**

*(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர், ஸ்தாபகர் - கீரிமலை சிவநெறிக் கழகம் சிரேஷ்ட உறுப்பினர் - நிர்வாகசபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை)*

அவர்களின் நினைவுப் பிரார்த்தனை வைபவம்

**இடம்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னசத்திர மண்டபம்**

**காலம்**
**19.07.2017 புதன்கிழமை பகல் 10.00 மணி**
**பகல் 11.30 மணி மதிய விருந்து**


அனைவரும் சமுகம் தந்து நினைவுப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தயவு கூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**அன்னாரின் குடும்பத்தவர்கள், பன்னாலை, தெல்லிப்பழை.**

**நன்றிக்கடன் மிக்க மாணவர்கள்**

## மரண அறிவித்தல்



**திருமதி சிவபாக்கியம் சதாசிவம்**

வேலணையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கெருடாவிலை வசிப்பிடமாகவும், தற்போது பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சதாசிவம் 14.07.2017 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவாதிப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், இராஜேஸ்வரி (பரந்தன்), பொன்ராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (கொடிகாமம் சரஸ்வதி பேக்கரி உரிமையாளர்) மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற மனோகரன் (கெருடாவில் - மனோகரா பேக்கரி உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஸ்ணசாமி (இந்தியா), வரதா (பிரான்ஸ்), சரஸ்வதி, தர்மகுலசிங்கம், சந்திரவதனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வ.தர்மகுலசிங்கம் (தறுமு - மருமகன்)**

**077 432 2258**



## அரசின் செயற்பாடுகளால் பொருளாதாரம் பெருவீழ்ச்சி

*மகிந்த ராஜபக்ச குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை17
அரசின் தூரநோக்கற்ற நடவடிக்கையால் நாட்டின் பொருளாதாரம் பெரும்வீழ்ச்சி கண்டுள்ளது என முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்பக்ச தெரிவித்துள்ளார். பாணந்துறையில் இடம்பெற்ற சுதந்திர கலை அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2015 ஜனவரி 08 ஆம் திகதி இந்தநாட்டில் இருந்த பணத்துக்கு என்னநடந்தது என்பது தற்பொழுது தெரியாதுள்ளது. இந்த அரசின் சீரற்ற நடவடிக்கையால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கும் என்னையேகாரணம் காட்டுகின்றனர். ஆடத் தெரியாதவன் மேடை கோணல் என்று கூறியதுபோன்றுதான் அரசின்இந்தக்கதையும். தற்போதைய அரசு அரசியல் லாபம் கருதியே அனைத்தையும் செய்கின்றது. நாட்டு மக்களுக்கு இந்த அரசு வேண்டாம் என்றாகிவிட்டது. அரசு அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளைஅதிகாரத்துக்கு வந்ததும் மறந்துவிட்டது - என்றார். (த-ய)

# மைத்திரியின் செல்வாக்கை குறைப்பதற்கு ஐ.தே.க. சதி

*அமைச்சர் டிலான் பெரேரா குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 17
ஐக்கியதேசியக்கட்சியும், ஒன்றிணைந்தஎதிரணியும் இணைந்து அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவைப் பலவீனப்படுத்துவம்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என சந்தேகம் எழுந்துள்ளது என நெடுஞ்சாலைகள் இராஜாங்கஅமைச்சரும், சிறிலங்காசுதந்திரக்கட்சியின்பேச்சாளருமானடிலான் பெரேராதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ரணில்விக்கிரமசிங்க, பேராசிரியர்ஜீ.எல். பீரிஸ், தினேஷ்குணவர்தன, குமாரவெல்கமமற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர்புதியஅரசமைப்புக்காகவும்நிறைவேற்றுஅதிகாரஅரசதலைவர்முறைமையைஒழிப்பதற்காகவும் உழைக்கின்றனர்.

சுதந்திரக்கட்சியும்பௌத்தத்தின்மூன்றுபீடங்களுக்கான மகாநாயக்கர்களும், நிறைவேற்றுஅரசதலைவர்முறைமையைவைத்துக்கொண்டு, தற்போதிருக்கும்அரசமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குவிரும்புகின்றனர்.

எனவே, அரசதலைவரைப்பலவீனப்படுத்துவதற்கு, ஐ.தே.கவுக்கும்ஒன்றிணைந்த எதிரணிக்கும்இடையில்மறைவானநிகழ்ச்சிநிரலொன்றுகாணப்படுகிறதா என்று கேள்வி எழுந்துள்ளது. அரசதலைவர் ஐ.தே.கவின்தாளங்களுக்குஆடுபவர்அல்லர் என்பதைப் பலதருணங்களில்நிரூபித்துள்ளார். ஐ.தே.கவும், ஒன்றிணைந்தஎதிரணியும், மகாசங்கத்தினர்எடுத்துள்ளதீர்மானத்துக்குமாறாகஅரசமைப்புச்சீர்திருத்தவிடயத்திலும் நிறைவேற்றுஅதிகாரமுறைமையிலும்ஒரேஎண்ணங்களையேகொண்டிருக்கின்றனர்என்பதுவும், ஒன்றாக இணைந்துசெயற்படுகின்றனர்என்பதுவும்தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது- என்றார். (த-ய)

## அம்பாந்தோட்டை தாங்கிகளை விற்பனை செய்தால் போராட்டம்

*பெற்றோலிய வளத் தொழிற்சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை17
அரசு அம்பாந்தோட்டை துறைமுகத்திலுள்ள எண்ணெய்த் தாங்கிகளை விற்பனை செய்வதற்கு முயன்றால் தொடர் வேலைநிறுத்தத்தில் குதிப்போம் என என பெற்றோலிய வள தொழிற்சங்கங்களின் ஒன்றியம் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது. அரசு இன்னும் ஓரிரு தினங்களில் அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது. இந்த ஒப்பந்தத்தோடு எண்ணெய்த் தாங்கிகளை வழங்குவதற்கான ஒப்பந்தமும்கைச்சாத்திடப்படுமாக இருந்தால், அன்றைய தினம் முதலே வேலைநிறுத்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ட.ஜே.ராஜகருணா கூறியுள்ளார். (த)

## பெப்ரவரியில் அரசமைப்பை நிறைவேற்றவிருந்தது அரசு

*ஆயினும் அந்தத் திட்டம் பலிக்கவில்லை என்கிறார் உதய கம்மன்பில*

இந்த வருடம் பெப்ரவரி மாதமே புதிய அரசமைப்பு உருவாக்கப்படவிருந்தது என்றும் பௌத்த மதத்துக்கான முதன்மை இடம் மற்றும் ஒற்றையாட்சி போன்றவற்றால் எழுந்த சிக்கல்கள் காரணமாகவே அதை நிறைவேற்ற முடியாமற் போனதுஎன்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: புதிய அரசமைப்பு தொடர்பில் நாம் கூறியவை எல்லாம் உண்மை என்பதை இப்போதுதேரர்கள் விளங்கிவைத்துள்ளனர். அவர்கள் அதற்கான எதிர்ப்பைவெளியிட்டுள்ளனர். ஒற்றையாட்சி நீக்கப்படாது பௌத்த மதத்துக்கான முதன்மைஇடம் நீக்கப்படாது என்று பிரதமர் கூறுகின்றார். ஆனால், ஒரு மதத்துக்குஅப்படி சிறப்புச் சலுகை வழங்க முடியாது என்று சுமந்திரன் கூறு கின்றார். ஒற்றையாட்சி கதையும் இவ்வாறுதான்.

அரசமைப்பை உருவாக்குவதற்கு யோசனைகளை முன்வைத்த உப குழுக்களின்அறிக்கையில் ஒற்றையாட்சிக்குப் பதிலாக நான்கு யோசனைகளும் பௌத்த மதத்துக்கானமுதன்மை இடத்துக்குப் பதிலாக ஏழு யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் தேரர்களைச் சந்தித்த அரசதலைவர் பௌத்த மதத்துக்கான முதன்மை ஸ்தானத்தைநீக்கமாட்டேன் என்றார். அப்படியென்றால் எதற்கு இந்த மாற்று யோசனைகள்? உண்மையில் இந்த வருடம் பெப்ரவரி மாதமே புதிய அரசமைப்பு உருவாக்கப்படவிருந்தது. பௌத்த மதத்துக்கான முதன்மை ஸ்தானம் மற்றும்ஒற்றையாட்சி போன்றவற்றால் எழுந்த சிக்கல்கள் காரணமாகவே அதை நிறைவேற்ற முடியாமல் போனது. ஜனவரி மாதம் 9,10,11 ஆகிய திகதிகளில் இது தொடர்பில் விவாதம் நடத்தி பெப்ரவரியில் நிறைவேற்று வதற்கே அரசுதிட்டமிட்டிருந்தது. இப்போது எப்படியாவது பொய்களைக் கூறி அதை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசு முயற்சி செய்கின்றது. என்றார். (த-3)

## சைட்டம் பிரச்சினைக்கு சாதகமான தீர்வு வரும்

*மருத்துவர் சங்கம் நம்பிக்கை*

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக்கல்லூரிதொடர்பில்எழுந்துள்ளபிரச்சினைக்கு, அனைவரும்ஏற்றுக்கொள்ளக்கூடியதீர்வொன்றுமுன்வைக்கப்படும்என தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கஉறுதியளித்துள்ளார் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்தெரிவித்தது.

சுகாதாரஅமைச்சர்ராஜித சேனாரத்னவின்ஏற்பாட்டில், அரச மருத்துவ அதிகாரிகள்சங்கத்தின்உறுப்பினர்களுக்கும் தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவுக்கும்இடையிலான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, பேராசிரியர் காலோபொன்சேகாவை மீண்டும்வைத்தியசபையின்தலைவராகநியமிக்க வேண்டும்என்றுகோரிக்கைவிடுக்கப்பட்டது.

இதுதொடர்பில்அரசுடன்இணக்கப்பாட்டுக்குவரமுடிந்தது என சங்கத்தின்நிறைவேற்றுக்குழுஉறுப்பினர் டொக்டர்பிரசாத்கொலம்பகேதெரிவித்தார்.

சைட்டம்தொடர்பானபிரச்சினைக்கும்தீர்வுகிட்டும் வகையில்இந்தப்பேச்சு இடம்பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், மருத்துவக் கல்விதொடர்பானதரமான கொள்கையொன்றைக் கொண்டுவந்து, அதனைச் சட்டமாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார். (ய)

## ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கப் புதிய செயலகம்

கொழும்பு, ஜூலை17
பெரும் நிதிமோசடிகள், ஊழல்கள்உள்ளிட்ட குற்றச்செயல் கள் தொடர்பில்நடவடிக்கைஎடுப்பதற்குபுதியசெயலகமொன்றுநிறுவப்படஉள்ளது. அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனமற்றும்தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கஆகியோரின்பணிப்புரைக்குஅமையஇந்தசெயலகம்உருவாக்கப்படஉள்ளது.

இதுதொடர்பிலானசட்டவரைவொன்று விரை வில் நாடாளுமன்றில்சமர்ப்பிக்கப்படஉள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பன்னாட்டுத் தரநிர்ணயங்களின்அடிப்படையில்இந்தப்புதியசெயலகம்இயங்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

ஊழல்மோசடிகள்உள்ளிட்டகுற்றச்செயல்களுக்குஎதிராககாத்திரமானவிசாரணைகளைமேற்கொண்டு நடவடிக்கைஎடுக்கும்நோக்கில்இந்தப் புதிய செயலகம் உருவாக்கப்படஉள்ளது. (த-ய)

## கூட்டு அரசை விட்டு விலகி மகிந்தவுடன் இணைவோம்

*அமைச்சர்கள் சிலர் எச்சரிக்கை*

அரசில்இருந்துவிலகிமகிந்த அணியில் இணையப் போவதாக மைத்திரி தரப்பு அமைச்சர் சிலர் அரசுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளனர். பிரதி அமைச்சர் அனுராத ஜயரத்னவின் வீட்டில் ஓரிரு நாள்களுக்கு முன்இடம்பெற்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தின்போதே இவ்வாறு எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

தற்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக பிரதி அமைச்சர்அனுராத ஜயரத்னவின் வீட்டில் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மற்றும்நா டாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சந்திப்பொன்றை மேற்கொண்டனர். அந்தச் சந்திப்பின்போது அரசின் செயற்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. குறிப்பாக, அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் முன்னாள் அமைச்சர்பி ரியங்கர ஜயரத்ன ஆகியோர் அரசின் தற்போதைய செயற்பாடுகளை, அரசு செல்லும்பயணத்தைக் கடுமையாக எதிர்த்தனர். அரசின் தற்போதைய போக்கு அரசில் இருந்து பலரை வெளியேறச் செய்துவிடும் என்று எச்சரித்தனர். இவர்களைப்போல் மேலும் பல அமைச்சர்களும் அவர்களது அதிருப்தியை அரசுக்கு வெளிப்படுத்தினர். அரசில் இருந்து பலர் விலகி மகிந்த பக்கம் செல்வார்கள்என்ற செய்தியை அவர்கள் மறைமுகமாக வெளிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்தவுடன்தொடர்பை ஏற்படுத்திய அருந்திக பெர்னாண்டோ மிக விரைவில் 18பேர் அரசில் இருந்து விலகி மகிந்தவுடன் இணைவோம் என்று கூறினார் என்று சனத் நிசாந்த தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அரசுக்குள் குறிப்பாக, மைத்திரி தரப்புக்குள் ஒரு சலசலப்பு ஏற்பட்டுள்ளதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எப்போது வேண்டுமானாலும் கட்சித் தாவல்கள் இடம்பெறலாம் என அறிய முடிகின்றது. (த-3)

# உமாஓயா திட்டத்தால் பாதிப்புற்ற சகல குடும்பங்களுக்கும் நட்டஈடு

கொழும்பு, ஜூலை17
உமாஓயாத்திட்டத்தால்பாதிக்கப்பட்டுள்ளசகலகுடும்பத்தினருக்கும்எதிர்வரும்செப்ரெம்பர்மாதம் 15ஆம்திகதிக்கு முன்நட்டஈடுகள்வழங்கப்படவுள்ளன. இதற்கென 30 கோடிரூபாநிதிமாவட்டச்செயலாளருக்குஏற்கனவேவழங்கப்பட்டிருக்கின்றது என கடற்றொழில், நீரியல்வளங்கள்அமைச்சரும்மகாவலி அபிவிருத்திஇராஜாங்கஅமைச்சருமானமகிந்தஅமரவீரதெரிவித்தார்.

உமாஓயாதிட்டத்தின்பாதிப்புகள்பற்றிஆராய்வதற்காகநியமிக்கப்படடஅமைச்சர்கள் குழு கடந்த வியாழக்கிழமை கூடிகலந்துரையாடியபின் இந்தத்தீர்மானம்மேற்கொள்ளப்பட்டது.

இந்தக்கூட்டத்தில்தன்னுடன் அமைச்சர்களானடிலான்பெரேரா, விஜித்விஜயமுனி சொய்சா, இராஜாங்கஅமைச்சர்லக்ஸ்மன்செனிவிரத்ன மற்றும்ஊவாமாகாணமுதலமைச்சர்சாமரசம்பத்தசநாயக்கஆகியோர்கலந்துகொண்டனர் என்றும் அமைச்சர் கூறினார்.

உமாஓயாதிட்டத்தால்ஏற்பட்டுள்ளநீர்ஒழுக்கால் தோன்றும்குடிதண்ணீர்இழப்பை ஈடுசெய்ய ஓயாவிலிருந்துதியத்தலாவவரையில்கள் மூலம்தண்ணீர்தருவிக்கப்படுமெனவும், இதன்மூலம்பாதிக்கப்பட்டகுடும்பமொன்றுக்குநாளாந்தம் 500 லீற்றர்நீர் கிடைக்குமென வும்அவர் மேலும் தெரிவித்தார். (ய)

## புதிய அரசமைப்பு குறித்து

# மகிந்த அணிக்குள் கருத்து முரண்பாடு

கொழும்பு, ஜூலை 17
புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படுவது குறித்து பொது எதிரணியின் மூத்த உறுப்பினர்கள் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
தினேஷ் குணவர்த்தன, திஸ்ஸ விதாரண மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் பொது எதிரணி அரசமைப்பு நடவடிக்கைக் குழுவில் இருக்கவேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர்.
பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் சகல குழுக்களில் இருந்தும் பொது எதிரணி விலகவேண்டும் எனக் கூறியுள்ளனர்.
இது குறித்து இறுதி முடிவை எடுப்பதற்காக பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அடுத்த வாரம் கூடிக் கலந்துரையாடவுள்ளனர்.
இந்தக் கூட்டத்தில் இறுதி முடிவை எடுக்க முடியாது போனால், தேசிய சுதந்திர முன்னணியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரிடம் கடிதத்தைக் கையளித்து அரசமைப்பு நடவடிக்கைக் குழுவில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (து)

## டிசெம்பருக்குப் பின்னர் ஐ.தே.க. – சு.க. இடையே புதியதொரு உடன்பாடு

கொழும்பு, ஜூலை 17
அரசின் அடுத்தக் கட்ட வேலைத்திட்டம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. அந்தக் கட்சியுடன் புதிய உடன்படிக்கை டிசெம்பர் மாதத்திற்குப் பின்னர் கைச்சாத்திடப்படும்
இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் துமிந்த திஸநாயக்க.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை தன்னுடன் அரசில் இருக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன , சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரிடம் கூறவில்லை.
மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவர் என்பது சிலருக்கு மறந்துவிட்டது.
நல்லாட்சி அரசு இன்று கவிழும் நாளை கவிழும் என்று கூறிப் பொது எதிரணி மற்றும் அரசின் அமைச்சர்கள் சிலர் கருத்துக்களை வெளியிட்டுக் கனவு கண்டாலும் அரசைக் கவிழ்க்க இடமளிக்கப் போவதில்லை என அரச தலைவர் தெளிவாகக் கூறியுள்ளார் - என்றார். (து)

## பிரகீத் கடத்தல் வழக்கு

## விசாரணைக்கு இராணுவம் திடீரென முழு ஒத்துழைப்பு

கொழும்பு, ஜூலை 17
புதிய இராணுவத் தளபதியாக மகேஸ் சேனநாயக்க நியமிக்கப்பட்டதை அடுத்து ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் குழுக்களுக்கு இராணுவத்தினர் வழங்கி வரும் ஒத்துழைப்புகள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.
இந்த விசாரணைக்குக் கடந்த காலத்தில் இராணுவத்தினர் போதிய ஒத்துழைப்புக்களை வழங்கவில்லை.
விசாரணைக்குத்தேவையான கிரிதல இராணுவ முகாமின் முக்கியமான ஆவணங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் தொடர்பான தகவல்கள் உரிய முறையில் புலனாய்வுப் பிரிவினருக்குகிடைக்கவில்லை.
அவற்றைக் குற்றப் புலனாய்வுப்பிரிவினருக்கு வழங்குமாறு நீதிமன்றம் பலமுறை இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்ட போதிலும் அவை வழங்கப்படவில்லை.
இந்த நிலையில், கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது இது குறித்து முழு ஒத்துழைப்பு வழங்க இராணுவம் விருப்பம் தெரிவித்துள்ளது.
இதற்கு அமைய புதிய இராணுவத் தளபதியின் ஊடாக லசந்த விக்ரமதுங்க கொலை, போத்தல ஜயந்த, கீத் நொயார், உபாலி தென்னகோன் ஆகியோரைத் தாக்கியவர்களைக் கண்டறிய உதவிகள் கிடைக்கும் எனப்புலனாய்வுப் பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (து)

# தெற்காசிய வான் பரப்புக்குள் விமானப் பறப்பு பரிசீலனை

கொழும்பு, ஜூலை15
தெற்காசிய எல்லைக்குள் அனுமதியின்றி இன்றி விமானப்பயணங்கள் மேற்கொள்வது தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
சார்க் எல்லை சட்டம் மற்றும் ஒழுங்கு உள்துறை அமைச்சர்களின் மாநாட்டு அமர்வு கொழும்பு, காலிமுகத்திடல் ஹோட்டலில் இடம்பெற்றது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமர்வுகள் இடம்பெற்றன.
எல்லை ரீதியில் முகம்கொடுக்கப்படும் பயங்கரவாதப் பிரச்சினை, போதைப்பொருள் வர்த்தகம், ஆயுதக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக எல்லை என்ற ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.
இதேவேளை, தெற்காசிய எல்லைக்குள் பொதுவிசா அற்ற பயணங்களை அறிமுகப்படுத்திவைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (து-ய)

## அதிகாரப் பகிர்வுக்கு எதிரணி பச்சைக்கொடி

கொழும்பு, ஜூலை 17
புதிய அரசமைப்பு தொடர்பான வழிநடத்தல் குழுவின் கூட்டம் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்றபோது அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பான விடயங்களுக்கு மகிந்த அணியின் சார்பில் கலந்து கொண்ட உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன மற்றும் பிரசன்ன குணவர்த்தன ஆகியோர் இணங்கியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
எதிரணியைச் சேர்ந்த பிரசன்ன குணவர்த்தன மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர்.
அந்தக் குழுவில் இருந்து விலகுவதாக இவர்கள் கூறி வந்த போதிலும் கடந்த 6ஆம் திகதி நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இதனடிப்படையில் முதலமைச்சர்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவுள்ளதுடன் ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்படவுள்ளன எனக் கூறப்படுகிறது.
இதன்போதே அதிகாரப் பகிர்வு தொடர்பில் எதிரணி உறுப்பினர்கள் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து)

## வெல்கம எம்.பியின் மனு: நவம்பரில் விசாரணைக்கு

கொழும்பு, ஜூலை 17
நாடாளுமன்றஉறுப்பினர்குமாரவெல்கமவின்அடிப்படை உரிமைமீறல் மனு எதிர்வரும் நவம்பர்மாதம் 7ஆம்திகதிவிசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளது.
நிதிமோசடிவிசாரணைப்பிரிவினால் தாம் கைதுசெய்யப்படவுள்ளதாகவும்,
அதனைத் தடுத்துநிறுத்தஇடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறும்கோரிகுமாரவெல்கம கொழும்பு உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல்மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
குறித்தமனுநேற்றுமுன்தினம், தலைமைநீதியரசர்பிரசாத்டெப் மற்றும்நீதியரசர்களான அனில் குணரட்னமற்றும்நளின்பெரேரா ஆகியோர்முன்னிலையில்பரிசீலிக்கப்பட்டது.
குமாரவெல்கமபோக்குவரத்து அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில்இலங்கைப்போக்குவரத்துச்சபைக்குவாகனஉதிரிப்பாகங்கள்இறக்குமதிசெய்தபோது மோசடிகளில்ஈடுபட்டார் என குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.
இதுதொடர்பில்தாம்கைதுசெய்யப்படுவதைத்தடுக்குமாறுகோரி குமாரவெல்கம மனுத்தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-ய)

## கூடுதல் அதிகாரம் கோருகிறதா சு.க. ?

கொழும்பு, ஜூலை17
தேசிய அரசில் அங்கம்வகிக்கும்
சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூடுதலான அதிகாரங்களைக்கோரி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்தஉடன்படிக்கைஎதிர்வரும் செப்ரெம்பர்மாதத்துடன் முடிவுக்கு வருகிறது.
இந்தநிலையில்மீளவும்ஐக்கியதேசியக்கட்சியுடன்உடன்படிக்கைகைச்சாத்திடும்போதுமேலதிகஅதிகாரங்களைக் கோருவதற்குசுதந்திரக்கட்சிஉத்தேசித்துள்ளது என மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
புதிய உடன்படிக்கையை ஒற்றைக் கைச்சாத்திடுவதற்காக இரண்டு கட்சிகளும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.
இந்தஉடன்படிக்கைபெரும்பாலும்ஒக்ரோபர்மாதமளவில் கையொப்பமிடப்படும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.
அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சியினருக்கு உரிய மரியாதை அளிக்கப்படுவதில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-ய)

## மாற்றுவலுவுள்ள பெண்ணை வன்புணர்ந்தவருக்குச் சிறை

கொழும்பு, ஜூலை17
மாற்றுவலுவுடையபெண்ணொருவரைபாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தியகுற்றச்சாட்டைஏற்றுக்கொண்டநபர் ஒருவருக்கு கம்பகா உயர்நீதிமன்றத்தினால் 10வருட கடூழியச்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் பாதிக்கப்பட்டபெண்ணுக்குஐம்பதாயிரம்ரூபாஅபராதம்செலுத்துமாறும் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோஉத்தரவிட்டார்.
கம்பகாபுத்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடையநபருக்கே இந்த உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. (து-ய)

# கூட்டு அரசில் இருந்து விரைவில் விலகுவேன்

## மேலும் 17 பேர் இதே நிலைப்பாட்டில் என்கிறார் பிரதி அமைச்சர் விஜேசேகர

கொழும்பு, ஜூலை 17
தேசிய அரசிலிருந்து தான் வெளியேறப்போவதாக அறிவித்துள்ள தபால் மற்றும் முஸ்லிம் விவகார பிரதி அமைச்சர் துலிப் விஜேசேகர, மேலும் 17 உறுப்பினர்கள் இதே நிலைப்பாட்டில் இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.
தேசிய அரசமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அடுத்த ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது. அதன்பின்னரே தான் வெளியேறுவார் என்றும், இது பற்றி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் துலிப் விஜேசேகர கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய அரசில் இணைந்து செயலாற்றிய காலப்பகுதியில் கம்பஹா மாவட்ட மக்களுக்கு என்னால் எதுவும் செய்ய முடியாமல்போனது. இது கவலையளிக்கின்றது. அத்துடன், சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு முரணான செயற்பாடுகளும் அரசால் முன்னெடுக்கப்படுகின்றன.
எனவேதான், மக்களின் கோரிக்கையின்படி இத்தகையதொரு முடிவை எடுத்துள்ளேன். என்னுடன் சு.கவிலுள்ள 17 உறுப்பினர்கள் இருக்கின்றனர் - என்றார்.
துலிப் விஜேசேகர முன்னாள் அரச தலைவர் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் பொருளாதார அமைச்சராக இருந்த பசில் ராஜபக்சவுக்கு மிகவும் வேண்டப்பட்டவராகவும், அவரின் விசுவாசியாகவும் செயற்பட்டுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
ஆட்சி மாற்றத்தின் பின்னர் மைத்திரி அணியுடன் கைகோர்த்தாலும், மகிந்த அணிக்கு விசுவாசமாகவே செயற்பட்டு வருகின்றார் என்ற குற்றச்சாட்டும் இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. (து)




## இந்தியா - பாகிஸ்தான் பேச்சு நடத்த வேண்டும்

### குத்தேரஸ் வலியுறுத்தல்

வொஷிங்டன், ஜூலை 17
இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து, பேச்சின் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் வலியுறுத்தி உள்ளது.
ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அதன்போதே காஷ்மீர் விவகாரம் தொடர்பிலான கருத்துக்களை அவர் தெரிவித்தார்.
"இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து பேச்சின் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். இரு தரப்புக்களும் எல்லையை மீறாது என்று நம்புகிறேன். இந்த விடயம் தொடர்பில் பாகிஸ்தான் தலைமை அமைச்சரை 3 தடவைகளும், இந்தியத் தலைமை அமைச்சரை 2 தடவைகளும் நான் சந்தித்துள்ளேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ட்ரம்புக்கு கியூபா கண்டனம்

அமெரிக்காவுக்கும் கியூபா வுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த சில இணக்கப்பாடுகளைத் திரும்பப் பெற்றுள்ள ட்ரம்பின் நடவடிக் கைக்கு கியூப அதிபர் ரவுல் காஸ்ரோ கண்டனம் தெரிவித்தார். ஒபாமா எடுத்த கடுமையான முயற்சியின் பயனாக அமெரிக்காவுக்கும் கியூபா வுக்கும் இடையில் சில இணக்கப்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. ஆனால் ட்ரம்ப் அதிபரானதும் அவற்றில் சிலவற்றைத் திரும்பப் பெற்றார். இதற்கு ரவுல் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.
"புரட்சியை அழிக்கின்ற முயற்சிகள் தோல்வியடையும். அமெரிக்க, எமது செல்வத்தைச் சுரண்டுவதை நாங்கள் நிராகரிக்கின்றோம். இனிமேலும் அமெரிக்காவிடம் இருந்து பாடங்கள் கற்றுக் கொள்ள கியூபாவுக்கு அவசியம் ஏதுமில்லை" என ரவுல் மேலும் தெரிவித்தார். (ம)



## சொகுசு வாகனங்களை போர் வாகனங்களாகப் பயன்படுத்தியது ஐ.எஸ்.


பக்தாத், ஜூலை 17
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து மோசூல் கைப்பற்றப்பட்ட பின்னர் அந்த அமைப்புத் தொடர்பான பல விடயங்கள் ஒன்றன்பின்னர் ஒன்றாக வெளிவந்துகொண்டுள்ளன. இதன்படி அந்த அமைப்பு பயன்படுத்திய போர் வாகனங்கள் பற்றிய தகவல் தற்போது வெளிவந்துள்ளன. இதன்படி அந்த அமைப்பு சாதாரண வாகனங்களையும், சொகுசு வாகனங்களையும் கவச வாகனங்களாகவும், கனரக வாகனங்களாகவும் மாற்றி போருக்குப் பயன்படுத்தியமை தெரியவந்துள்ளது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் முதன்மையான வர்த்தக நகரான மோசூல் இருந்தது. இது கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.
மோசூலின் இறுதிக்கட்ட 'திக் திக்' நிமிடங்கள் தொடர்பிலான தகவல்கள் தற்போது ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்துள்ளன. தமது மனைவி மற்றும் குழந்தைகளை அந்த அமைப்பின் ஆயுததாரிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி போரிட்டமை, தைகிரிஸ் ஆற்றில் குதித்து உயிர்துறந்தமை, தற்கொலை தாரிகளாக மாறியமை என்று பல விடயங்களை ஈராக் இராணுவம் தெரிவித்திருந்தது. தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வாகனங்கள் தொடர்பான விடயங்கள் வெளிவந்துள்ளன.
இதன்படி அந்த அமைப்பு பொதுமக்களின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தவல்ல சாதாரண தர வாகனங்களையும், சொகுசு வாகனங்களையும் போருக்குப் பயன்படுத்தியமை தெரியவந்துள்ளது.
சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் அவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. வாகனங்களின் இயல்பான கவசங்களுக்குப் பதிலாக மேலதிக கவசங்களை இணைத்து போர் வாகனங்களாக ஐ.எஸ்.ஐ.எஸ். மாற்றியுள்ளது. வாகனங்கள் அத்தனையும் பொதுமக்களிடம் இருந்து வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்ட வாகனங்களே என்றும் அவை அனைத்தும் விரைவில் அழிக்கப்படும் என்றும் ஈராக் இராணுவம் தெரிவித்துள்ளது. (ம)



சீனாவின் சன் டோங் மாநிலத்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில், சிங்குவாங் என்று பெயரிடப்பட்டுள்ள பெண் நாயொன்று, தமது தாயை இழந்து அநாதரவாக உள்ள புலிக்குட்டிகளை தனது குட்டிகளைப்போன்று பராமரித்து வருகிறது. அது தொடர்பான ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டுள்ளன. (ம)

## சர்ச்சைக்கு... இஸ்ரேலின்...

டெல்அவிவ், ஜூலை 16
சர்ச்சைக்குரிய கிழக்கு ஜெருசலே...
கட்டுமானங்களை விரைவாக முன்...
இஸ்ரேல்.
பலஸ்தீனத்துக்குச் சொந்தமான கி...
பகுதி இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்...
பகுதியை பலஸ்தீனத்திடம் இஸ்...
வேண்டும் என்று தெரிவித்து ஐக்கிய...
தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்...
ரேலின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்...
தன.
அந்த நாடு கிழக்கு ஜெருசலேமில் த...
ஆழமாக வேரூன்றச் செய்ய பல ...
மேற்கொண்டது. அவற்றில் முக்கி...
ஜெருசலேமில் குடியிருப்புத் தொகுதி...





## உருக்கமாக விடைபெற்றார் லியு சியாவ்போ

பிஜிங், ஜூலை 17
மனித உரிமைகள் ஆர்வலராக இருந்து அமைதிக்கான நோபல் பரிசை வென்றவரான சீனாவின் லியு சியாவ்போ நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டார்.
2010ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற அரசியல் ஆர்வலரான லியு சியாவ்போ, சீனாவில் மனித உரிமைகளுக்கான போராட்டத்தின் முதன்மையான அடையாளமாகப் பார்க்கப்படுகிறார்.
இருப்பினும், "அரச அதிகாரத்தைத் அழிக்க விரும்பும் குற்றவியல் நோக்கம் கொண்டவர் லியு சியாவ்போ" என சீன அரசு குறிப்பிடுகிறது.
2009ஆம் ஆண்டு லியுவுக்கு 11 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
புற்றுநோய் காரணமாக கடந்த 13ஆம் திகதி சிறையிலேயே உயிரிழந்தார் லியு. பல்லாயிரக் கணக்கானோர் கண்ணீர் மல்க அவர் நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டார். (ம)





## செவ்வாய்க்கு மனிதன் 2030இல் சாத்தியமல்ல

செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் திட்டம் எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் சாத்தியமல்ல என்று நாசா தெரிவித்துள்ளது.
சூரியக் குடும்பத்தில் பூமிக்கு அடுத்த படியாக இருக்கும் செவ்வாய் கிரகத்தில் உள்ள சூழ்நிலைகள் குறித்து ஆய்வு செய்யும் பணியில் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான (நாசா) உள்ளது. மனிதர்கள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் சாத்தியமாகும் பட்சத்தில் அங்கு மனிதர்களை அனுப்பி பரிசோதனை செய்வது மற்றும் எதிர்காலத்தில் மனிதர்களை அங்கு குடியேற்றம் செய்வது குறித்த திட்டமும் நாசாவின் பரிசீலனையில் உள்ளது.
இந்த நிலையில், நாசாவின் விண்வெளி ஆய்வு பிரிவின் தலைவர் வில்லியம் ஜெர்ஸ்டன்மையர் 2030இற்குள் மனிதர்களை செவ்வாயில் குடியேற்றம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.
"ஏற்கனவே பல்வேறு ஆளில்லா செயற்கைக்கோள்களை பல பில்லியன் டொலர்களில் உருவாக்கி செவ்வாயில் நாசா ஆய்வு செய்து வரும் நிலையில், மனிதர்களை அங்கு குடியேறச் செய்யும் திட்டம் நாசாவின் முக்கிய கனவுகளில் ஒன்றாக இருந்து வருகிறது. செவ்வாயில் மனிதர்களை குடியேறச் செய்யும் திட்டம் அதிக செலவு பிடிக்கக் கூடியது. எனவே தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமல்ல" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)





## கட்டுக்குள் அடங்கவில்லை கலிபோர்னியக் காட்டுத் தீ


வொஷிங்டன், ஜூலை
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ கட்டுக்குள் அடங்காமல் தொடர்ந்து நீடித்து வருகிறது.
கலிபோர்னியாவின் மத்திய பகுதியில் ஏற்பட்டுள்ள இந்தக் காட்டுத் தீ கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கட்டுக்குள் அடங்காமல் நீண்டு செல்கிறது. 20 உலங்குவானூர்திகள், 80 வாகனங்கள், சுமார் 750 தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவரப் போராடிய போதிலும், போராட்டம் இன்னும் முழுமையாக வெற்றியடையவில்லை. உலங்குவானூர்திகள் மட்டுமல்லாமல் தற்போது வானூர்திகளும் களமிறக்கப்பட்டுள்ளன. இது நிலமையின் தீவிரத்தன்மையை உணர்த்தும்படியாக அமைந்துள்ளது.
சுமார் 100 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன. நூற்றுக் கணக் கான் வீடுகள் எரிந்து நாசமடைந்துள்ளன. உயிரிழந்த வன விலங்குகளின் சடலங்கள் பெரிய குழிகளில் போட்டுப் புதைக்கப்படுகின்றன. எனினும் மனித உயிரிழப்புத் தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் வரவில்லை. (ம)



## ...ரிய கிழக்கு ஜெருசலேமில் ...கட்டுமானங்கள் துரிதகதி


...பகுதியில் தனது
...னடுத்து வருகிறது
...க்கு ஜெருசலேம்
...டுள்ளது. இந்தப்
...ரல் ஒப்படைக்க
...நாடுகள் சபையில்
...து. எனினும் இஸ்
...கொண்டே இருந்
...னது ஆதிக்கத்தை
...டவடிக்கைகளை
...மானது கிழக்கு
...ளை அமைக்கும்

திட்டம். அவ்வாறு அமைக்கத் திட்டமிட்ட குடியிருப்புத் தொகுதிகளின் கட்டுமானங்கள் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளன.
இன்னும் ஓரிரு மாதத்தில் கட்டுமானங்கள் முழுமையாக முடிவடைந்து அந்தப் பகுதியில் யூதர்கள் குடியிருத்தப்படுவார்கள் என்று கருதப்படுகிறது.
இஸ்ரேலின் இந்த ஆக்கிரமிப்பு மனோபாவத்துக்கு எதிராக பலஸ்தீனத்தில் பல குழுக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.
அவற்றுக்கு பலஸ்தீன அரசு பக்கபலமாக உள்ளது. அண்மையில் பலஸ்தீன அதிபர் அப்பாஸ் ஆற்றிய உரையொன்றில், "எமது போராட்டம் யூதர்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. மாறாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோபாவத்துக்கு எதிரான போராட்டம்" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## பக்தாதி கொல்லப்பட்டமைக்கான ஆதாரமில்லை என்கிறது அமெ.

வொஷிங்டன், ஜூலை 17
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி கொல்லப்பட்டமைக்குப் போதிய ஆதாரம் எதுவும் இல்லை என்று அமெரிக்கா மீண்டுமொருமுறை தெரிவித்துள்ளது.
கடந்த மாதம் இறுதிப் பகுதியில் தாம் நடத்திய வான் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி உயிரிழந்தார் என்று ரஷ்யா தெரிவித்திருந்தது. இதை அமெரிக்கா மறுத்தது. பக்தாதி கொல்லப்பட்டமைக்கான எந்த ஆதாரமும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்தது. எனினும் ஈரான், துருக்கி மற்றும் சிரியாவில் நடைபெறும் போரைக்கண்காணிக்கும் அமைப்பு என்பன பக்தாதி கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தின. ஈராக் ஊடகங்களும் பக்தாதி கொல்லப்பட்டிருக்கலாம் என்பது தொடர்பில் ரஷ்யாவுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தன. இந்த நிலையில் பக்தாதி கொல்லப்பட்டமைக்கான எந்த ஆதாரமும் இல்லை என்று அமெரிக்கா மீண்டும்ஒருமுறைஅழுத்தம்திருத்தமாகத் தெரிவித்தது.



இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் ஜிம் மேட்டீஸ், "எங்களுக்கு உறுதியானதகவல்கள்வந்தால்நாங்கள் கண்டிப்பாக தெரிவிப்போம். இப்போது, வந்துள்ள இந்த தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை" எனத் தெரிவித்துள்ளார். (ம)

## கலவரத்தால் எண்மர் சாவு

### செனகல்லில் துயரம்

செனகல் நாட்டில் நடைபெற்ற கால்பந்தாட்டம் ஒன்றின் போது, ரசிகர்களின் கலவரத்தால் மைதானத்தின் சுவர் இடிந்து விழுந்து 8 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.
ஆட்டம் விறுவிறுப்பாக சென்றுகொண்டிருந்த நேரத்தில், ஒரு அணியைச் சேர்ந்த ரசிகர்கள், மற்றொரு அணியைச் சேர்ந்த ரசிகர்கள் மீது கற்கள் மற்றும் போத்தல்களை வீசி அடிதடியில் ஈடுபட்டனர். இது கலவரமாக மாறியதன் விளைவாகவே மைதானத்தின் சுவர் விழுந்து எண்மர் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது. (ம)

## ஐ.எஸ்ஸின் ஆப்கன் தலைவர் சாவு

பக்தாத், ஜூலை 17
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆப்கானிஸ்தானுக்கான தலைவர் கொல்லப்பட்டார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.
ஈராக், சிரிய நாடுகளைப் போன்று ஆப்கானிஸ்தானிலும் வேரூன்றுவதற்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கடும் முனைப்புக் காட்டி வந்தது. அந்த அமைப்பின் ஆப்கானிஸ்தானுக்கான தலைவராக அபு சயீது என்பவர் செயற்பட்டுவந்தார். குனார் மாகாணத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலில் அபுசயீது கொல்லப்பட்டார் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்தது. ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட பல முக்கிய தாக்குதலுக்கு மூளையாக சயீது இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthavanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அபாயச் சங்கு

மைத்திரி– ரணில்கூட்டு அரசு குறித்துதமிழ் மக்களின் மனங்களில் என்ன இருக்கிறதோ அதையே அப்பட்டமாக வெளிப்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன்.

இலங்கைக்கு 5 நாள்கள் பயணமாக வந்திருந்தார் எமர்சன். மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புத் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் அவர். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நிலை மற்றும் நிலை மாறு கால நீதிச் செயற்பாடுகள் என்பன தொடர்பில் அவர் நேரில் ஆராய்ந்தார். பல பகுதிகளுக்கும் நேரில் சென்ற அவர், அமைச்சர்கள் உட்படப் பலரையும் சந்தித்துப் பேசினார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் அவர் நேரில் சந்தித்தார்.

இவற்றின் பின்னர் அவர் விடுத்துள்ள அறிக்கை மிக முக்கியமானது. அரசும் தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களும் அதிகம் கவனத்தில்கொள்ள வேண்டியது.

போர்க்குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் இலங்கை தோல்வி கண்டுவிட்டது என்று அவர் தனது அறிக்கையில் நேரடியாகவே குற்றஞ்சாட்டியுள்ளார். போர்க் குற்றங்கள் தொடர்பில் கொழும்புக்கு வழங்கப்பட்ட 2 வருட காலத்தில் எதனையும் செய்யாத அது, அதன் பின்னர் நீடிக்கப்பட்ட மேலும் 2 வருட காலத்திலும் 4 மாதங்களாக எதுவும் செய்யாமல் வளாவிருக்கிறது என்று சாடியுள்ளார்.

மிக மிக மந்தமான செயற்பாடு என்ற நிலையில் இருந்து எதுவுமே அற்ற நிலைக்கு கொழும்பு சென்றுவிட்டதை அவர் தெட்டத்தெளிவாகச்சுட்டிக்காட்டியுள்ளார். இது ஆபத்தான போக்கு. கொழும்பு அரசுகள் இப்படித்தான் செய்யும் என்று காலம் காலமாகத் தமிழர்கள் நம்பி வந்தவையே இப்போது நிறைவேறிவருகின்றன.

போர்க்குற்ற விசாரணைகள் விடயத்தில் அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கப்படுவதன் அவசியத்தை எமர்சனின் அறிக்கை தமிழர் தரப்புக்கும் உணர்த்திச் சென்றிருக்கிறது. குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது விடயத்தில் கூடிய அக்கறை எடுத்துச் செயற்படவேண்டியது அவசியம்.

முதலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவது, அடுத்து உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது, அதன் பின்னர் போர்க் குற்றங்கள் தொடர்பில் குற்றவியல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான சிறப்பு வழக்கறிஞர் அலுவலகத்தை அமைப்பது ஆகிய படிநிலைகளின் அடிப்படையில் விடயங்கள் நகரும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எமர்சனிடம் தெரிவித்திருக்கிறார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதே கடந்த ஒரு வருட காலமாகப் பூர்த்தியாகமல் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது எப்போது நிறைவேறும் என்பதே தெரியவில்லை. அது நிறைவேறியதன் பின்னரே ஏனையவை என்றால் அதற்கிடையில் இந்த அரசின் ஆட்சிக் காலம் முடிவடைந்துவிடும். அதற்குப் பின்னர் இவையெல்லாம் தீண்டத்தகாதனவாகிவிடும்.

அதிலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று அவசியமல்ல என்று தமிழர் தரப்பு மறுத்து வரும் நிலையில் அதனை நிறுவுவதில் கொழும்பு தீவிரம் காட்டுவதும் சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. குற்றம் இழைத்தவர்களுக்குப் பொதுமன்னிப்பை வழங்குவதே இந்த ஆணைக்குழுவின் நோக்கம் என்றே தமிழர்கள் சந்தேகப்படுகிறார்கள். அப்படி நடந்தால், ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் போர்க் குற்ற விசாரணைக்கான வழக்கறிஞர்கள் அலுவலகத்தை அமைப்பதால் எந்தப் பயனும் இல்லை.

இவையெல்லாவற்றையும் பார்க்கையில் மைத்திரி– ரணில் அரசும் காலத்தைக் கடத்திச் சென்றே காரியத்தைச் சாதித்துவிடலாம் என்றே நினைப்பதாகத் தமிழர்களிடம் காணப்படும் சந்தேகம் மேலும் வலுப்படுகிறது. இந்த நிலமையை மாற்றுவதற்கு என்ன செய்வது? போர்க்குற்ற விசாரணைகளையும் அரசியல் தீர்வையும் ஒருங்கே கொண்டு நகர்த்துவதற்கு என்ன செய்வது? என்பவற்றைத் தமிழர்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் விரைந்து சிந்திக்க வேண்டியதற்கான அபாயச் சங்கை ஒலித்துச் சென்றிருக்கிறது எமர்சனின் [illegible]கை.

# பிளவுபடவிருந்த அரசியல் உறவு ஒன்றிணையும் நிலையை எட்டுமா?

வீடு எப்போது உடையும், அதற்குள் இருப்பவர்கள் எப்போது வீதிக்கு வருவார்கள், நாம் ஏற்றிக்கொண்டு பயணிப்போம் எனச் சிலரும் , அவ்வாறு வருபவரின் கீழ் புது உதயம் பெறுவோம் என இன்னுமோர் தரப்பும், இலவு காத்த கிளிபோல் காத்திருந்தனர். இவ்வாறானவர்களின் செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பில் இடம் பெற்ற சில சலசலப்புக்களும் இடமளிக்காமல் இல்லை.



ந.லோகதயாளன்

வடக்குக் கிழக்குத் தமிழர்களின் மிகப் பெரும் அரசியல் சக்தியாகவும், இறுதியாக எஞ்சியுள்ள ஒரேயொரு பலம் பொருந்திய சக்தியாகவும் விளங்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வளர்ச்சியை மழுங்கடிப்பதற்குப் பல காலமாக பலரும் முனைந்து வருவது வெளிப்படையான தொன்று. காலத்துக்குக் காலம் கூட்டமைப்பில் நிலவும் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடு அல்லது ஜனநாயக ரீதியிலான கருத்து முரண்பாடு களைச் சாதகமாக்கி கூட்டமைப்பை உடைத்து பலவீனப்படுத்தி விட்டால் தம்மை வளர்த்துக் கொள்ளலாம் அல்லது தாமும் அரசியலில் இடம்பிடித்துக்கொள்ளலாம் என நம்புபவர்கள் இதில் அதிக கவனத்தைச் செலுத்தி வருகின்றனர் எனக் கூறினால் அது மிகையாகாது.

இதற்காகவே வீடு எப்போது உடையும். அதற்குள் இருப்பவர்கள் எப்போது வீதிக்கு வருவார்கள். நாம் ஏற்றிக் கொண்டு பயணிப்போம் எனச் சிலரும், அவ்வாறு வருபவரின் கீழ் புது உதயம் பெறுவோம் என இன்னுமோர் தரப்பும். இலவு காத்த கிளி போல் காத்திருந்தனர். இவ்வாறானவர்களின் செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பில் இடம்பெற்ற சில சலசலப்புக்களும் இடமளிக்காமல் இல்லை. கட்சியின் முடிவு அல்லது செயற்பாடுகளில் உடனடியாக உடன்படமுடியாத வட மாகாண முதலமைச்சரும் பல விடயங்களில் ஓர் எழுதாத விதியைக் கடைப்பிடித்திருந்தார்.

### தனது விடாப்பிடியான போக்கை முதலமைச்சர் மாற்றிக் கொள்கிறாரா?

அதாவது வட மாகாண முதலமைச்சர் கடந்த ஓர் ஆண்டு காலமாக, வாழைக்காய் மந்தம் , வழுதுணங்காய் (கத்தரிக்காய்) சொறி சிரங்கு ஏற்படுத்தும் . கீரை குளிர் என்கின்ற நிலைப்பாட்டில் இருந்து மாறி, தற்போதே சாதாரண நிலமைக்கு வந்துள்ளார். அதாவது கடந்த ஆண்டு முதல் மோதல் நிலமையைச் சந்தித்திருந்த மாகாண சபை, தற்போது மோதலின் பின்னரான காதல் நிலைக்கு வந்துள்ளது. அதேபோன்று, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் . கூட்டமைப்பின் தலைவர் . கட்சியின் முக்கியஸ்தர் என்ற மூவர்மீது இருந்த உச்சபட்சக் கோபம் தற்போது தணிந்து இருவர் மீது நட்பு நிலமைக்குக் கொண்டு வந்துள்ளது. மீதியான ஒருவர் மீதான பகமை அல்லது முரண்பட்ட தன்மை மட்டுமே தற்போது காணப்படுகின்றது. இதுதான் கட்சி அரசியல்; உட்கட்சி ஜனநாயகம். கூட்டமைப்பிற்குள் நிலவிய கருத்து மோதலைச் சாதகமாக்கி, அதன் மூலம் முதலமைச்சரை தனிக் கட்சியின் தலைவராக்கி, அவரது செல்வாக்கின் மூலம் அரசியல் நடத்தலாம் என பல உதிரிக் கட்சிகள் எண்ணிக்கொண்டிருந்த நிலையில், மாற்றுத் தலைமை என்ற கருத்து நிலைப்பாடு தேவையற்றது. உள்ள தலைமையை வலுப்படுத்துவதே பொருத்தமானது என முதலமைச்சரே திருவாய் மலர்ந்தருள, உதிரிக் கட்சிகள் மனதுள் கட்டிய மண் கோட்டை தகர்ந்துபோனது.

இதன் இன்னுமோர் படியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கடந்த 4ஆம் திகதி நடத்திய தமது செய்தியாளர் மாநாட்டில் தாம் முதலமைச்சரை மட்டும் மாற்றுத் தலைமையாக நம்பவில்லை எனவும், வட மாகாண முதலமைச்சர் முதலமைச்சராக தொடரவேண்டும் என்பதற்காக அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவிருந்தவேளை

யில் வீதியில் இறங்கவில்லை என வும் தெரிவித்தமையும் முதலமைச் சரின் கூற்றுக்கு கட்டியம் கூறுவதாகவே அமைந்தது.

**அரசுடன் கடும் நிலைப்பாட்டைப் பேணப் போகிறேன் என சம்பந்தன் தெரிவிப்பு**

இதேவேளை சில உதிரிக் கட்சிகள் மட்டுமன்றி சில முகவரியற்ற வர்க ளின் வெற்றுக் கோசத்திற்கும் வட மாகாண முதலமைச்சரின் நிலைப் பாடு முற்றுப்புள்ளி வைத்துள்ள நிலையில், கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சிக்கு வந்தவேளை யில் ஓர் பெரும் மக்கள் குழுமத்து டன் வரவேற்பு நடத்தப்பட்டது. அவ் வேளையில், காணாமல்போன உறவுகளுடன் கலந்துரையாடிய கூட்டமைப்பின் தலைவரோ குறித்த விடயத்துக்கு 10 தினங்க ளுக்குள் ஒரு தீர்க்கமான முடிவை அரச தலைவர் வழங்கியே ஆக வேண்டும். எதிர்வரும்காலம்அரசு டன் கடும் நிலைப்பாட்டின் மூலமே தான் தொடர்புபேண இருக்கிறேன் என்றும் கருத்து வெளிப்படுத் தினார்.

இவ்வாறுவடமாகாணமுதலமைச் சர் மற்றும் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் ஆகிய இருவ ரின் நிலைப்பாட்டில் பெரியதொரு மாற்றம்திடீரென ஏற்பட்டுள்ள அதே வேளை, கூட்டமைப்பின் 2ஆம் தர நிலையில் உள்ளவர்களில் ஒருவ ரான சுமந்திரனின் அண்மைக் கால மௌனமும் ஓர் சந்தேகத் தையே ஏற்படுத்தி நிற்கின்றது.

அதாவது இவை அனைத்துக்கும் பின்னால், பலமானதோர் மூன் றாந்தரப்பு கடந்த ஒரு மாத காலத் துக்குள் தலையீடு செய்துள்ளதா கவே எண்ணத்தோன்றுகின்றது. அவ்வாறான தலையீடொன்று மட் டுமே, இவ்வாறு அனைவரிடத்தி லும் ஏககாலத்தில் மாற்றத்தை ஏற்ப டுத்தக்கூடிய சக்தியாகவும் திகழும்.

**புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டுக்குத் திரும்பும் மணப்பெண் போன்று செயற்படுகிறார் முதலமைச்சர்**

ஏனெனில் பேரவை , மாகாண சபையில்தமிழ்அரசுக்கட்சிஎதிர்ப்பு , சங்கரியரின் 40ஆண்டுகாலநட்பு தூசிதட்டிஎடுக்கப்பட்டமைபோன்ற நிகழ்வுகளுடன் உதிரிகளின் கூட்டு என தனிப்போக்கில் பயணித்துக் கொண்டிருந்த முதலமைச்சர், திடீ ரென மீண்டும் புகுந்த வீட்டில் இருந்துபிறந்தவீட்டிற்குத்திரும்பிய மணப்பெண் போன்று, கருத்து வெளியிடுவது எளிதான காரிய மல்ல. ஏனெனில் முதலமைச்சர் 40ஆண்டுகால நீதித்துறை பின்பு லம் கொண்டவர். என்றுமே தாம் கூறிய கூற்றை மாற்றுவதற்கு அல்ல, அது தொடர்பில் ஆராயவே இணங்காதவர். இதற்கு கடந்த மாதம் அமைச்சர்கள் மீதான அவ ரது இறுதித் தீர்மானம் குறிப்பிட்டுக் கூறக் கூடியதொரு உதாரணம்.

இந்தநிலையில்அத்தனைவிடயங் களையும் கடந்து தற்போது முதல மைச்சர் இவ்வாறான கூற்றைத் தெரிவிப்பதுசாதாரணவிடயமல்ல. அதேநேரம் அதுவோர் தவறான கூற்றும் அல்ல. அதேவேளை, அர சியலில் முதல்வருடன் கடும்போக் கைக் கொண்டுள்ளார் என்று வர் ணிக்கப்படும் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரனும் சற்று அமைதி கொண்டிருப்பது இதனை உறுதி செய்கின்றது. இந்த நிலையில் தமிழ்அரசுக்கட்சியில் உள்ள விரிச லைப் பயன்படுத்தி சங்கரியார் முத லமைச்சரைத் தம்பக்கம் இழுத்து விடக் கூடும் எனச் சந்தேகித்து அதனை முறியடிக்கும் முயற்சியில் குழுவொன்று முதலமைச்சரைச் சந்தித்தது.


**முதலமைச்சரது பிந்திய நிலைப்பாட்டால் ஏமாற்றமடைந்த தரப்பினர்**

முதல்வர் தான் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த அறிக்கையை வாசித்துக் காட்டியதுடன், தமது தற்போதைய நிலைப்பாட்டையும் தெரிவித்தமையால் அந்தக் குழுவி னர் ஏமாற்றத்துடன் வெளியேறி யுள்ளனர். இந்த நிலமையில் தென் னிலங்கையின் தற்போதுள்ள அர சியல் நெருக்கடிகளே, இவர்களின் கூட்டு ஒற்றுமைக்கு வழி ஏற்படுத்தி யுள்ளது. இவற்றில் கூட்டாச்சியா, ஒற்றையாட்சியா என்பதற்கான தேர்வுக்கு ஒருவரும், பௌத்தத் துக்கு முன்னுரிமையா அல்லது சகல மதத்துக்கும் சம உரிமையா என்பதற்கான விடையை ஒருவ ரும் தேடும் அதேவேளை, ஏனைய விடயங்களுக்கான தீர்வு குறித்துத் தேட மூன்றாவதாக மற்றொரு நப ரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்றே தெரியவருகின்றது.

அனைத்து விடயங்களிலும் விட் டுக்கொடுக்க முடியாது என்ற கருத்தை அனைவரும் கொண்டுள் ளபோதிலும், முதலமைச்சர் அதனை வெளிப்படையாகவே தெரிவித்து பௌத்தத்திற்கு முன்னுரிமை என் னும் விடயத்தை தமிழ் மக்கள் ஏற் காத நிலையில், அதற்கு மாற்றுத் தீர்வையும் முன் வைத்துள்ளார். அதாவது தமிழர்களின் தாயக பிர தேசமான வடக்கு கிழக்கு மாகா ணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதே சங்களில் பௌத்த மதத்திற்கு முன் னுரிமை எனவும், வடக்கு கிழக்கில் சகல மதங்களுக்கும் சம உரிமை எனவும் யாப்பில் எழுதப்பட்டே ஆக வேண்டும், என்கின்ற ஒரு யோச னையை முன்வைத்துள்ளார்.


எனவே இவ்வாறு ஆளுக்காள் கன்னை பிரிந்து நின்று, தமிழர் களின்அரசியல்பலம்சிதறடிக்கப்படப் போகின்றதா என்ற சந்தேகம் எழுந் தவேளையில், அதில் தலையிட்டு சுமூக நிலையை ஏற்படுத்திய அந்த மூன்றாந்தரப்பு, புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்திலும் தனது நிலையை வலுப்படுத்தி சரியான தீர்வைப்பெற அழுத்தங்களைப் பிர யோகிக்க வேண்டும் என்பதே தற் போதைய சூழலில் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

**அ**னைத்து விடயங்களிலும் விட்டுக் கொடுக்கமுடியாது என்றகருத்தை அனை வரும் கொண்டுள்ளபோதிலும், முதல மைச்சர் அதனை வெளிப்படையாகவே தெரிவித்து பௌத்தத்திற்கு முன்னுரிமை என்னும் விடயத்தை தமிழ் மக்கள் ஏற்காத நிலையில், அதற்கு மாற்றுத் தீர்வையும் முன் வைத்துள்ளார். அதாவது தமிழர்க ளின் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங் களில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை எனவும், வடக்கு கிழக்கில் சகல மதங்க ளிற்கும் சம உரிமை எனவும் யாப்பில் எழு தப்பட்டே ஆகவேண்டும், என்கின்ற ஒரு யோசனையை முன்வைத்துள்ளார்.



“

பேரவை, மாகாண சபையில் தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு, சங்கரியரின் 40 ஆண்டுகால நட்பு தூசிதட்டி எடுக்கப்பட்டமை போன்ற நிகழ்வுகளு டன் உதிரிகளின் கூட்டு என தனிப்போக்கில் பய ணித்துக்கொண்டிருந்த முதலமைச்சர் திடீரென மீண்டும் புகுந்த வீட்டில் இருந்து பிறந்த வீட்டிற் குத் திரும்பிய மணப்பெண் போன்று, கருத்து வெளியிடுவது எளிதான காரியமல்ல.



## ஆசிரியருக்கான கடிதம்

### பஸ் தரிப்பிடம் அமைக்க முன்வருவார்களா?

வடமராட்சி, மாலுசந்தியில் பஸ்தரிப் பிடம் ஒன்று இல்லாததால், பய ணிகள் மிகவும் சிரமமான சூழலில் மழை, வெயில் பாதிப்புக்களுடன் பிர யாணத்துக்கு கால்கடுக்க நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. நான் சிறுவனாக இருந்த காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் அமைக்கப்பட்டி ருந்த பஸ் தரிப்பிடம், வீதி அகலிப்பு நடைபெற்ற வேளையில் இடநெருக் கீடு காரணமாக அகற்றப்பட்டது. அதன் பின்னர் அந்த பகுதியில் புதி தாக பஸ் தரிப்பிடம் எதுவும் அமைக் கப்படவில்லை.

இந்த இடத்தில் தினமும் நூற்றுக் கணக்கான பயணிகள் போக்குவரத் துக்காக கூடவேண்டி யிருப்பதைக் காண முடிகின்றது. பயணிகள் அரு கில் உள்ள வர்த்தக நிலையங்களின் வாசலில் நிழலுக்காக ஒதுங்கி நிற்ப தால் வர்த்தகர்களுக்கு அது இடை யூறு ஏற்படுத்துவதாக உள்ளது. கடந்த வாரத்தில் ஒரு நாள் தனியார் மருத்துவர் ஒருவரைச் சந்திப்பதற் காக பஸ்சில் பயணித்துக் குறித்த பகு தியில் இறங்கி கொளுத்தும் வெயி லில் நடந்து சென்று மருத்துவரைச் சந்தித்து விட்டு மீண்டும் மாலுசந் தியை வந்தடைந்தேன்.

உண்மையில் களைப்பாறுதலுக்கு ஒரு நிழல் கூட இல்லாததால், அரு கில் உள்ள வர்த்தக நிலையத்தருகில் பஸ்சுக்காகக் காத்திருந்தபோது என் னைப் போல் எத்தனையோ பயணி கள் ஒதுங்குவதற்கு நிழல் தேடுவதை அவதானித்தேன்.

இந்த இடத்தில் முக்கியமாக ஒரு நிழற் குடை அமைத்தால் பல நூற்றுக் கணக்கான பயணிகள் நன்மை அடைவார்கள். முன்பு பஸ்தரிப்பிடம் இருந்த இடத்தில் புதிதாகத் தரிப்பிட மொன்றை அமைக்க உண்மை யில் இடவசதி இல்லை . அருகில் வேறு இடவசதி இருப்பினும், சில சம யம் அது தனியார் காணிகளாகவும் இருக்கக்கூடும்.

எனவே, அந்தப்பகுதி சமூக நலன் விரும்பிகள் அக்கறை எடுத்து சம்பந் தப்பட்ட காணி உரிமையாளர்களு டன் பேசி பஸ் தரிப்பிடத்துக்கென நிலத்துண்டொன்றைப்பெற்று, அந்த இடத்தில் பஸ்தரிப்பிடமொன்றை உரு வாக்கினால், பல நூற்றுக்கணக் கான பயணிகள் பெரும் பயனடை வார்கள்.

எனவே அந்தப் பகுதியைச் சேர்ந்த சமூகநலன் விரும்பிகள் இதுவிடயத் தில் அக்கறை காட்டிச் செயற்பட முன் வர வேண்டுமென வேண்டிக் கொள் கிறேன்.

அன்பு,
வரணி

# பங்குச்சந்தை உறுதியான பெறுபேற்றைக் கண்டுள்ளது

## 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பதிவாக அமைவு

பங்குச்சந்தை உறுதியான பெறுபேற்றைக் கண்டுள்ளதென கொழும்பு பங்குப் பரிவர்தனை நிலையம் தெரிவித்துள்ளது. இந்த உறுதியான பெறுபேறுகள் நடப்பாண்டின் முதல் அரையாண்டு காலப் பகுதிக்கான பதிவாக அமைந்துள்ளன.




இதன்படி அனைத்துப்பங்கு விலைச்சுட்டிகள் (ASPI) 8.35 வீத உயர்வினையும், எஸ் அன்ட் பி எஸ்.எல்-20 (S&PSL-20) விலைச்சுட்டிகள் 11.67 வீத உயர்வினையும் பதிவு செய்துள்ளன. நடப்பாண்டின் முதல் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு கொள்வனவுகள் கடந்த ஆண்டை விடவும் இரு மடங்காக காணப்படுவதுடன் இந்த அதிகரிப்பானது முதல் அரையாண்டு வெளிநாட்டு கொள்வனவுகளில் அதிகூடிய வரலாற்றுப் பெறுமதியாகவும் அமைந்துள்ளது.

அதேவேளை 2016 ஆம் ஆண்டு 0.383 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியல் 22.2 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது. தவிர பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் 24 வாரங்கள் தொடர்ச்சியாக தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்துள்ளது.


2016 ஆண்டில் மந்தமான பெறுபேற்றினை பதிவு செய்த கொழும்பு பங்குப்பரிவர்த்தனை கடந்த முதல் அரையாண்டுகாலப்பகுதி வரையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டு கொண்டுள்ளது. இதன்படி அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) 8.35 வீத உறுதியான வளர்ச்சியினை பதிவுசெய்து ஜூலை 12 ஆம் திகதி 6,748.15 புள்ளிகளாகக் காணப்பட்டது. பெரிய மூலதனம் மற்றும் திரவத்தன்மை நிறைந்த பண்புசார் பட்டியற்படுத்தப்பட்ட 20 நிறுவ னங்களை உள்ளடக்கிய எஸ் அன்ட் பி எஸ்.எல் 20 விலைச்சுட்டி 11.67 வீத வளர்ச்சியினை முதல் காலண்டில் பதிவு செய்து ஜூலை 12 ஆம் திகதி 3,904.45 புள்ளிகளாகக் காணப்பட்டது.

2016 மற்றும் 2015 ஆண்டுகாலப் பகுதிகளில் முறையே 9.66 வீதம் 5.54 வீதம் வருடாந்த வீழ்ச்சியினை வெளிப்படுத்திய அனைத்துப்பங்கு விலைச்சுட்டிகள் (ASPI) இவ்வாண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை பதிவு செய்து கொண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ரூபா 737.2 மில்லியனாகக் காணப்பட்ட நாளாந்த சராசரிப் புரள்வானது கடந்த முதல் அரையாண்டுக் காலச் சராசரியாக 912.7 மில்லியன் ரூபாவை பதிவு வெளிக்காட்டி மொத்த வியாபார நடவடிக்கைகளையும் துரிதமடையச் செய்துள்ளது.

---

### அனைத்துப் பங்கு விலைச்சுட்டி (ASPI) மற்றும் எஸ் அன்ட் பி எஸ்.எல் – 20 ( S&P SL 20 ) விலைச்சுட்டிகளின் போக்கு




### தேறிய வெளிநாட்டு விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பான ஒப்பீடு

| Jan - Jun | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு கொள்வனவுகள் | 51.9 | 15.9 | 42.6 | 31.2 | 38.3 | 53.4 | 43.3 | 36.8 | 31.5 | 62.6 |
| வெளிநாட்டு விற்பனைகள் | 47.1 | 16.4 | 59.6 | 38.6 | 15.1 | 38.3 | 37.6 | 35.3 | 37.8 | 41.1 |
| தேறியது | 4.7 | -0.5 | -16.9 | -7.4 | 23.2 | 15.1 | 5.7 | 1.5 | -6.3 | 21.5 |

R.B.C

2008 ஆண்டு தொடக்கம் நடப்பாண்டு வரை குறிப்பாக, ஜனவரி மாதம் தொடக்கம் ஜீன் மாதம் வரையுள்ள காலப்பகுதிக்கான தேறிய வெளிநாட்டு விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பான ஒப்பீடுகள் மேற்கண்டவாறு அமைந்துள்ளதாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையம் தெரிவித்துள்ளது.

---

## தேறிய முதலீட்டு உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ந்துள்ளது

> "மத்திய வங்கியின் வெளியகத் துறைப் பெறுபேறுகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக பங்குச்சந்தை மற்றும் அரச பிணையங்களின் சந்தையில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களின் அளவுகள் நாட்டின் சென்மதிநிலுவைக் கணக்குக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தேறிய முதலீட்டு உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் தொடர்ச்சியான 24 வாரங்களுக்கு தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலின் ஊடு சந்தை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் முதலீட்டுக்கான ஆர்வத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. நடப்பாண்டின் முதல் அரையாண்டுக்கான குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக வெளிநாட்டுக் கொள்வனவுகள் 62.6 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகிறது. 2016 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்குரித்தான கொள்வனவுப் பதிவிடல்களான 31.5 பில்லியன் ரூபாக்களைக் காட்டிலும் இரண்டு மடங்காகப் பதிவு செய்து நிதியாண்டுகளின் அரையாண்டுக்கான உச்சவரம்பாக அமைந்துள்ளது.

நடப்பாண்டில் இன்று வரையான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் என்பது 22.2 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்து ஆண்டைக் காட்டிலும் அதிகரித்த அடைவாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டினை எடுத்து நோக்கும் போது 383.5 மில்லியன் ரூபா முதலீட்டு உட்பாய்ச்சலினைப் பங்குச் சந்தை பதிவு செய்திருந்தது. மாறாக 2015 ஆம் ஆண்டு 5.3 பில்லியன் ரூபாக்கள் வெளிப்பாய்ச்சலாக அமைந்திருந்தது. தவிர 2012 ஆம் ஆண்டு வரலாற்றில் அதிகூடிய தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் ஆண்டாக அமைந்திருந்தமையும் நிதியாண்டின் முடிவில் உட்பாய்ச்சலாக 38.6 பில்லியன் ரூபா பதிவிடப்பட்டிருந்தமையும் குறித்து நோக்கத்தக்கது.

---

## சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது

கடந்த இரு நிதியாண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மொத்தச் சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது.

2016ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 42.0 வீதமாகவும் 34.4 வீதமாகவும் காணப்பட்ட மொத்தச் சந்தைப் புரள்வில் வெளிநாட்டுமுதலீட்டாளர்களின் பங்களிப்பானது நடப்பாண்டில் 47.2 வீத வளர்ச்சியினை வழங்கியுள்ளது. அத்துடன் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண்டின் இன்று வரையான காலப்பகுதிகளில் கடந்த ஏப்ரல் மாத புரள்வானது 50 வீதத்தினைத் தாண்டியுள்ளது.

> "பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடுகையில் கவர்ச்சிகரமான ஓர் விலை உழைப்பு பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் அதிகரித்த இலாபம் மற்றும் ஒப்பீட்டளவில் விலைச்சுட்டிகளின் அசைவ, அவற்றின் உறுதியான செயலாற்றுகைகள் என்பன வெளிநாட்டு முதலீடுகள் இலங்கை நோக்கி வருவதற்கான அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

---

## தனியார் துறை ஊழியர்களுக்கு ஆயுள் காப்புறுதி நடைமுறை

தனியார் துறை ஊழியர்களும் விரைவில் ஆயுள் காப்புறுதியை பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஊழியர் ஒருவர் உயிரிழக்கும் போது செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகையை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கும் தொழிற்சாலைகள் தொடர்பான சட்டத்தில் புதிதான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசு தீர்மானித்துள்ள தகவலை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன வெளிப்படுதியுள்ளார்.

கடந்த காலத்தில் கைத்தொழிற்சாலைகளிலும் அது சார்ந்தான வேலைத்தளங்களிலும் ஊழியர்கள் சிலருக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புத் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விரைவு நடவடிக்கைகளை கண்டறிவதற்காக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் இடம் பெற்றிருந்த பேச்சுவார்த்தையின் போதே இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளதென கூறப்படுகிறது.

# 'ஆடிக்கூழ்'

## ஆடிப் பிறப்பின் மகத்துவமான கைப்பக்குவம்

ஈழத்தமிழ்மணி

இந்துமதம் கூறும் வாழ்வியல் சார் நன்நெறிப் பண்பியல் கூறுகளின் வழியே ஒவ்வொரு செயற்பாடுகளும் தனித்துவம் பெறுகின்றன. வருடந்தோறும் அவர்கள் கடைக்கொள்கின்ற விழாக்களும் அவ்வழியே சிறப்புப் பெறுகின்றன. வருடத்தின் அத்தனை காலங்களும் இடைவிலகலின்றி இடையிட்டு கொண்டாடப்படுகின்ற தனிச்சிறப்புடைய நிகழ்வுகளின் ஊடே களிப்புறலோடு அசைவுறுகின்றன.
அந்தவகையிலே சைவத் தமிழ் மக்களுக்கு மிகவும் சிறப்பான மாதமாக ஆடி மாதம் அமைந்துள்ளது. ஆடித் தமிழ் மாதப் பிறப்போடு மகிழ்ச்சிப் பிரவாகங்களின் கொண்டாட்டங்களும் ஆரம்பமாகின்றன. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஆடிமாதம் என்பது ஆன்மிக வழியைக் கடைப்பிடிக்கின்ற மாதமாகவும். ஆலயங்களில் சிறப்புத் திருவிழாக்கள் நடைபெறுகின்ற மாதமாகவும் அமைவு பெற்றுள்ளது. குறிப்பாக எம் மூதாதையர்களும் அவர் வழி வந்தவர்களும் இயற்கையோடு ஒன்றித்த வாழ்வைக் கடைப்பிடித்து வந்ததையும், அதற்குரியவாறே தமது பண்பாட்டு விழுமியங்களை சீராமைத்துக் கொண்டு சிறப்புற வாழ்ந்து வந்ததையும் கடந்த கால வரலாறு எடுத்தியம்புகின்றன. நில மங்கையவள் மகிழ்ந்திருக்கும் மாதமாக ஆடிமாதத்தை இன்றும் தமிழர்கள் வரவேற்கின்ற பண்பாட்டையுடையவர்களாக விளங்குகின்றனர்.

### ஆடித் திருநாள்

ஆடிமாதம் பிறந்து விட்டால் ஆடி முதலாம் நாள் ஆடிப்பிறப்புக்கான வரவேற்பளித்தல்களும், விருந்தோம்பல்களும் மேன்மையுறுகின்றன. அதனைத் தொடர்ந்து ஆடிச்செவ்வாய் ஆடிவெள்ளி, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, தந்தைக்குப் பிதிர் கடமை செய்தல் என நிகழ்வுகள் ஒன்றோடொன்று தொடர்புற்று நீண்டு செல்லும். இப்படிப்பட்டதான சிறப்புகளைக் கொண்டமைந்த ஆடிமாதமானது தமிழ்மக்களது வாழ்வில் நல்லதொரு மாற்றத்தை தந்துவிட வேண்டும் என்ற வேண்டுதலோடு இன்றைய திருநாளை இன்முகத்தோடு வரவேற்போம். ஆடிக் கூழ் காய்ச்சி, கொழுக்கட்டை அவித்து பலரையும் மகிழ்வோடு விருந்தோம்பல் செய்வோம்.
ஆடிப் பிறப்பின் முதல் நாள் வருகை என்றதும் எங்களுடைய நினைவுக்கு வருவது 'ஆடிக் கூழ்' என்ற அந்த அற்புதமான உணவுப் பதார்த்தமே. அதில் உள்ளடங்குகின்ற திரவியங்களின் கைப்பக்குவமான குழைவு என்பது அதனை அருந்துகின்ற போது இனிமை தரும். ஒவ்வொருவருடைய நாவிலும் தனிச் சுவை உணர்வை கனிவோடு பகரும். இந்த நிகழ்வு ஈழத்தமிழருக்கே உரித்தான பாணியாக அமைந்திருக்கும்.

### ஆடிக் கூழ்

இந்தத் திருநாளில் யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடியருளிய ஆடிப் பிறப்பின் திருத்துவம் உரைக்கும் வார்த்தைகள் கூட்டிணைந்த பாடல் அற்புதம் செய்யும். இளையோரிடையே பல கதைகளை கூறும்.

*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்த மானந்தம் தோழர்களே...!*
*கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே...!*

என்று தோழமையுணர்வை வளர்த்து கூழின் பெருமையை விளக்கி ஆடிப்பிறப்பினை பெருமிதம் கொள்ளச் செய்கின்றார் சோமசுந்தரப்புலவர்.
ஆடிக் கூழினை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இரசித்தும் ருசித்தும் பருகுவர். பனையிலிருந்து பதமாக இறக்கப்படுகின்ற பதநீரைக் கொதிக்க வைத்து அதனுள் அரிசிமா. வறுத்துக் குற்றியெடுத்து கோது நிக்கப்பட்ட பாசிப் பயறு. சிறிதாக வெட்டியெடுக்கப்பட தேங்காய்த் துண்டுகள், பனங்கட்டிகளைச் சேர்க்கின்றனர். இறுதியில் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து பதமான கூழினை தயாரிக்கின்றனர். அனைவருக்கும் கொடுத்து உண்டு மகிழ்கின்றனர். அத்தோடு மணமும், சுவையும் கருதி கூழுக்கு தனியானதொரு மகிமையும் கிடைக்கப்பெற்றுள்ளது.


### ஆடிமாதச் சிறப்பு


தை முதல் நாள் தொடக்கம் ஆனிமாதத்தின் இறுதி வரையாக அமைவு பெறுகின்ற ஆறு மாத காலப்பகுதி தேவர்களுக்கு உரித்தானதாக சொல்லப்படுகிறது. அதேபோன்று ஆடி முதல் நாளிலிருந்து மார்கழிமாத முடி வரையான காலங்கள் பிதிர்களுக்கு உரித்தானதாக கூறப்படுகிறது. வரலாற்றின் அடிப்படையில் இக்கருத்துக்கள் தமிழ்மக்களிடையே கூறப்பட்டு வருவதுடன் இவை ஒரு ஐதீகம் எனவும் நம்பப்படுகிறது.
ஆடி முதல் நாள் மற்றுமொரு சிறப்பையும் உணர்த்துகின்றது. உறவுகளையும், நண்பர்களையும் விட்டுவிலகி மனக் கிலேசம் கொண்டு இருப்பவர்களை அன்புடன் அழைத்து ஒற்றுமை பேணும் மகத்துவத்தையும் கொண்டமைந்துள்ளது.
ஆடிமாதத்தில் வருகின்ற சிறப்பு மிக்க விரதங்களும், விழாக்களும் சைவத்தமிழர்களுக்கு உரித்தான சிறப்புக்களை எடுத்தியம்புகின்றன. 'ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி' என்ற வார்த்தை நயங்கள் பெண்கள் விரும்பிக் கடைப்பிடிக்கின்ற விரத மகத்துவங்களையும். அவை தருகின்ற நன்மைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.
வானத்தை எதிர்பார்த்து மழை வேண்டி மண்ணை உழுது பண்படுத்தும் கால போகமும் ஆடிமாதத்திலேயே அமைவு பெறுகிறது. பருவத்தே பயிர்செய்கின்ற காலம் ஆடிமாதமாகையால் முருங்கை, கிழுவை போன்றவற்றை பதிவைக்கின்ற வழக்கங்களும் கிராமப் புறங்களில் இன்றும் இருந்துவருகின்றன. முன்னோர்கள் இதனைக் கடைப்பிடித்து வந்தனர். அவர்களின் வழியே நாமும் கைக்கொள்கின்றோம். தொடர்ந்து வனப்பையும், வசந்தத்தையும் கொண்டு வந்து தருகின்ற வசந்த முகிழ்நிலைக் காலங்களாக இவை அமைந்துள்ளன.

### ஆன்மீகக் பேறுகள்

நெல்லுடன் தானியப் பயிர்களான உழுந்து, பயறு, கடலை, கௌபி என்பனவற்றையும் ஆடிமாத காலத்தில் பயிரிடுகின்றனர். வடபகுதித் தமிழர்களைப் பொறுத்த வரையிலே ஆடி மாதம் தனிச் சிறப்பிடம் பெறுகிறது. இக்காலப்பகுதியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திருவிழாவும், அதனைத் தொடர்ந்து வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்த சுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாக்களும் சிறப்புற இடம் பெறுகின்றன. இத்தகு திருநாள்களின் வருகையும் அவை தொடர்புறுத்துகின்ற ஆன்மிக எழுச்சியும் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு நிலைத்திருப்பினை உயர்த்திக் காட்டுகின்றன.
தவிர, தமிழர்களின் பாரம்பரியங்களையும், பண்பாட்டுக்கடமைகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும், வழி தவறாது நல்வழிப்பட்டு நடப்பதற்கும் ஏற்ற ஆன்மீக வழிப்படுத்தல்களைப் பெறும் மாதமாக ஆடி மாதம் அமைந்துள்ளது.
ஆக, இத்தகு சிறப்பான அனுஸ்டானங்களுக்கும், வழிபாடுகளுக்கும் கிடைத்திருக்கின்ற ஆடித் திருநாளில், 'வாழ்த்த வாயும், நினைக்கமட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாக விளங்கும் இறைவனுக்கு ஒரு சேர நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக நாம் விளங்குகிறோம்.
ஆடிப்பிறப்புத் திருநாளில் அனைவரும் உண்டு மகிழ்ந்து குதூகலித்திருந்திட வேண்டும். தமிழர் பண்பாட்டின் நம்பிக்கைத் தொனிப்புகளை மாறுதலின்றி அடி நாதமாக்கிக் கொள்ள வேண்டும். நல்ல சிந்தனைகளை செந்தளிப்புறச் செய்ய வேண்டும். ஆடித் திருமகளை அன்பு உவகையோடு வரவேற்று அவள் வருகையை அனைவரும் ஒன்றுபட்டுக் கொண்டாடுவோம். ஈழத்தமிழர்களின் வாழ்வில் விடியல் பிறக்க அவளைப் பணிந்து இறை அருளை வேண்டுவோம்.







> ஆடிமாதத்தில் வருகின்ற சிறப்புமிக்கவிரதங்களும், விழாக்களும் சைவத்தமிழர்களுக்கு உரித்தான சிறப்புக்களை எடுத்தியம்புகின்றன. 'ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி' என்ற வார்த்தை நயங்கள் பெண்கள் விரும்பிக் கடைப்பிடிக்கின்ற விரத மகத்துவங்களையும், அவை தருகின்ற நன்மைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

# முல்லைக்கு விழுந்த இன்னுமொரு பேரிடி

முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழாமுறிப்புப் பகுதியில் பெரிய அளவில் வன அழிப்பை மேற்கொண்டு, இனப் பரம்பலைச் சிதைக்கும் நோக்குடன் அமைக்ககப்பட உள்ள முஸ்லீம் மக்களுடைய குடியேற்றம் தொடர்பாக முகப் புத்ததங்களில் பல கருதத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. அவ்வாறு பகிரப்பட்ட ஒரு கருத்து பின்வருமாறு உள்ளது

''மன்னாரில் வில்பத்து, வவுனியாவில் பம்பைமடு, முல்லைத்தீவில் குமாரபுரம் என அடர் வனங்கள் முஸ்லிம் மக்களை குடியேற்றும் நோக்குடன் அழிக்கப்பட்டது. தற்போது முல்லைத்தீவு கூழாமுறிப்பு என்றாகிவிட்டது. இன நல்லிணக்கம் கருதி நாம் அனைவரும் அமைதி காத்திருந்தோம். ஆனால் இப்போது நிலமை எல்லைமீறுவதை அவதானிக்கின்றோம். எதிர்கால வாக்கு வங்கி அரசியல் நோக்குடன் நடந்து வரும் இந்த வன அழிப்பு, வடக்கின் இனப்பரம்பலில் பெரும் தாக்கத்தை செலுத்தப்போவதுடன், இதுவரை காலமும் நாம் காப்பாற்றி வந்த வனமும் அழிக்கப்படுகின்றது. இது இயற்கையில் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்து, ஒரு பாலைவன தேசத்தை உருவாக்கிவிடும் என ஐயமுறுகின்றோம். இப்போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் கூழாமுறிப்புக் கிராமத்துக்கு அருகில் இருக்கின்ற, முள்ளியவளைக்கும் ஒட்டுசுட்டான் வீதிக்கும், நெடுங்கேணி புளியங்குளம் வீதிக்கும் இடைப்பட்ட 177 ஏக்கர் வாரி வண்ணான்காட்டை அழித்து முஸ்லிம்களைக் குடியேற்றம் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வன அழிப்புத் திட்டம், முன்னாள்அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலத்திலேயே திட்டமிடப்பட்டிருந்தது என்றாலும், மக்களின் எதிர்ப்புக் காரணமாக கிடப்பில் போடப்பட்டிருந்தது. இப்போது மீளவும் வனத்தை அழிப்பதற்கான முயற்சிகள் தீவிரம் கொள்ளத் தொடங்கப்பட்டுள்ளது போரின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் நடந்து கொண்டிருந்த வேளையில், ஆயிரத்து 444 முஸ்லிம் குடும்பங்களுக்கு காணி வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை அப்போதிருந்த அரச அதிகாரிகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி நடந்த காணியற்றவர்களுக்கான காணி கச்சேரியில் 902 குடும்பத்தினர் கலந்துகொண்டிருக்கின்றனர். காணியற்றோர் எனக் கூறி காணி கோரிய ஆயிரத்து444 பேரில் மிகுதியான வர்கள் யாரென, அதனைக் கோரியவர்களுக்கே தெரியாமல் இருந்தமை வியப்புத் தரும் விடயமாக அந்த நாள்களில் பேசப்பட்டது. அவ்வாறு காணிக் கச்சேரிக்கு வருகை தந்த 902 பேரிலும், 544 குடும்பங்களே காணி பெறத் தகுதியானவர்கள் என கச்சேரியின் முடிவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் முள்ளியவளை ஐயன்கோவிலுக்கு அருகான பகுதி தொடக்கம் கூழாமுறிப்பு வெள்ளைமலை ஏத்தம் வரையான வனத்தை அழித்து புதிய குடியேற்றத்தை உருவாக்க மக்களும் விரும்பவில்லை. வனவளத் திணைக்களமும் விரும்பவில்லை. காரணம் அது இலங்கை வன இலாகாவால் பாதுகாக்கப்பட்ட வனம் என்கிற வகைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமை ஆகும். எனவேதான் வன வளத்துறை கூழாமுறிப்பில் இருந்து வாரிவண்ணாக்காடு வரைக்கும் உள்ள 177 ஏக்கர் அடர் வனத்தை அழித்து காணிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதியளித்திருக்கிறது. இந்த நிலத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்கள் மீள் குடியேறுவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் எங்கள் வளங்களை அழித்து, எங்களின் பண்பாட்டை, பொருளாதார மூலங்களை சிதைத்து, இந் நிலத்துக்கே உரிய பௌதீக பண்பாட்டு விழுமியங்களை அழிக்கும் திட்டமுடனாக சட்டவிரோத குடியேற்றங்களை அனுமதிக்கமாட்டோம்.''

பத்தி எழுத்து

## வரலாற்றில் இன்றைய தினம் 17.07.2017

1762-ரஷ்யாவின் மூன்றாம் பீற்றர் கொலை செய்யப்பட்டதையடுத்து ரஷ்ய அரசியாக இரண்டாம் கத்தறின் முடிசூடினார்.

1867-ஹவார்ட் பல்கலைக் கழகத்துடன் முதல் பல் மருத்துவப் பாடசாலை இணைக்கப்பட்டது.

1896-பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி தனது 16 ஆவது வயதில், இந்தியாவில் சுய ஆன்மிகத் தேடலில் ஈடுபடத் தொடங்கினார்.

1899-வெளிநாட்டு கூட்டு முதலீட்டுடன் ஜப்பானில் தொடங்கப்பட்ட முதல் நிறுவனமாகியது என்.இ.சி. கூட்டுத்தாபனம்.

1902-நியூயோர்க் பவ்லோவில் வில்லிஸ் கரியரால் முதல் வளிச்சீராக்கி (ஏயர் கொண்டிசனர்) உருவாக்கப்பட்டது.

1917-பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் பிறக்கும் ஆண்கள், தமது முதற் பெயராக வின்ஸர் எனும் பெயரைத் தாங்கிக் கொள்ள வேண்டுமென ஐந்தாம் ஜோர்ஜ் அரசர் அறிவித்தார்.

1973-ஆப்கானிஸ்தான் அரசர் மொஹமட் ஸாகிர் ஷா இத்தாலியில் அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உட்பட்டிருந்த வேளை அவரது உறவுக்காரரான மொஹமட் தாவுத் கானால் பதவி கவிழ்க்கப்பட்டார்.

1975-அப்பலோ சோயுஸ் பரிசோதனை திட்டம். அமெரிக்கரின் அப்பலோ விண்கலமும் சோவியத்தின் சோயுஸ் விண் கலமும் விண்வெளியில் இணைந்து கொண்டன.

1976-இந்தோனேஷியாவுடன் இணக்கப்பட்ட கிழக்கு தீமோர் அதன் 27 ஆவது மாகாணமாகியது.

1976-மொன்றியஸ் கோடைகால ஒலிம்பிக் தொடக்க விழாவில் நியூசிலாந்து கலந்து கொண்டமையால் 25 ஆபிரிக்க அணிகள் புறக்கணித்தன.

1979-நிக்காரகுவா சர்வாதிகாரி ஜெனரல் அனஸ்ராசிலோ சோமாஷா டிபைற் தனது பதவியைத் துறந்து விட்டு அமெரிக்காவின் மியாமிக்குத் தப்பியோடினார்.


சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய வானூர்தி போயிங் 777

1981-மிஸோரி கன்சாஸ் நகரில் நடைபாதை அமைப்பு ஒன்று சரிந்து வீழ்ந்ததில் 114 பேர் சாவடைந்தனர். 200 பேர் காயமடைந்தனர்.

1984-அமெரிகாவில் மதுசார வகை குடிக்கும் வயது 18 இலிருந்து 21 ஆக அதிகரிக்கப்பட்டது.


1996 -ரி.டபிள்யு.ஏ. வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி 800 நியூயோர்க் லோங் தீவுக்கரைக்கப்பால் வெடித்துச் சிதறியதில் அதிலிருந்த 230 பேர் உயிரிழந்தனர்.

1998- பப்புவா நியூகினியாவில் 7.0 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டு பத்துக் கிராமங்கள் அழிந்ததுடன் 2 ஆயிரத்து 700 பேர்வரை சாவடைந்தனர் ஏராளமானவர்கள் காயமடைந்தனர்.

2014-மலேசிய வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி போயிங் 777 உக்ரைன் எல்லைக் கருகில் சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதிலிருந்த 298 பேரும் உயிரிழந்தனர்.

2015-ஈராக் டியலா மாகாணத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 120 பேர் உயிரிழந்ததுடன் 130 பேர் காயமடைந்தனர்.

## ஆடி மாத பலன்



### (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

புத்தி சாதுரியத்தால் புகழையும், செல்வத்தையும் பெறும் மேட ராசிக்காரர்களே, இந்த மாதம் ராசிநாதன் செவ்வாயின் சஞ்சாரத்தால் எண்ணிய காரியங்களை திறமையாக செய்து முடிப்பீர்கள். தனாதிபதி சுக்கிரனின் பலத்தால் பணவரவு இருக்கும். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். பயணம் செல்ல வேண்டி இருக்கும். சில முக்கியமான முயற்சிகள் அதிக உழைப்பின் பேரில் செய்ய வேண்டி இருக்கும். சொத்துக்கள் மீது கவனம் தேவை.

தொழில் ஸ்தானாதிபதியான சனியின் சஞ்சாரத்தால் தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிபடுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த கொள்வனவுக் கட்டளைகள் வந்து சேரும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் தாமதமாக இருந்தாலும் பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர் களுக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கலாம். வேலை தொடர்பாக வெளியூரில் தங்க நேரிடலாம்.

குடும்பத்தில் இருப்பவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் தாமதப்படும். ராசிக்கு 12இல் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் வாழ்க்கை துணைக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் அன்பு அதிகரிக்கும். அக்கம், பக்கத்தினரிடம் கவனமாக பேசுவதும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது.




**பெண்களுக்கு:** சிலமுக்கியமான காரியங்களை கூடுதல்ாகக் கவனம் செலுத்துவதன் மூலமும் அதிக உழைப்பினாலும் செய்து முடிப்பீர்கள். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

கலைத்துறையினருக்குக் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். பணவரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். வாழ்க்கையில் முன்னேற வேகம் காட்டுவது நல்லது. மன குழப்பம் நீங்கும். தீவிர உழைப்பு மற்றும் அதிக முயற்சிகளுடன் காரியங்களில் ஈடுபடுவீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறும்.

அரசியல்துறையினருக்கு மனக் கவலை குறையும். சகல வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திடீர்ச் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்வது நன்மை தரும்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் முன்னேற்றமடைய கூடுதல் நேரம் ஒதுக்கிப் படிப்பது நல்லது. கல்வி தொடர்பாகப் பயணம் செல்ல வேண்டி இருக்கும்.

**பரிகாரம்:**
செவ்வாய்கிழமை தோறும் விரதம் இருந்து முருகனை கந்தசஷ்டி படித்து வழிபடுவது எல்லா நன்மைகளையும் தரும். அலைச்சலை தவிர்க்கும்.

**அஸ்வினி:**
இந்த மாதம் எதிலும் தைரியமாகச் செயற்படுவீர்கள். அரசு சம்பந்தப்பட்ட காரியங்களில் அனுகூலமான போக்குக் காணப்படும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பண வரவு திருப்தி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும்.

**பரணி:**
இந்த மாதம் பணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனமாகச் செயற்படுவது நல்லது. தந்தை மற்றும் தந்தை வழி உறவினர்களிடமிருந்து மகிழ்ச்சியான செய்தி வந்து சேரும். குடும்பம் சம்பந்தப்பட்ட விடயங்களில் முடிவெடுக்கும் போதும் அவசரம் வேண்டாம். கவனம் தேவை.

**கார்த்திகை 1ஆம் பாதம்:**
இந்த மாதம் அரசு சம்பந்தப்பட்ட விடயங்களில் நிதானத்தைக் கடை பிடிப்பது நன்மை தரும். சிறு உடல்நலக் குறைபாடாக இருந்தாலும் கவனமாக இருப்பது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் தேவை இல்லாத வாக்கு வாதங்களில் ஈடுபடவேண்டாம்.

## நாளை

ஆடி - 02
செவ்வாய்க்கிழமை
-18.07.2017
திதி:தசமி
பி.இ.04.24 வரை
நட்சத்திரம்: பரணி
மு.இ.07.11 வரை
சுபநேரம்:
10.30–12.00 வரை
ராகுகாலம்:
03.00–04.30 வரை
கார்த்திகை விரதம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** உறவினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்க வேண்டாம். உணவு விடயத்தில் கவனம் தேவை.



**இடபம்:** அனைவரிடமும் பெருந்தன்மையுடன் பழகுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவு படிப்படியாக உயரும். பணக்கடனில் ஒரு பகுதி அடைபடும்.



**மிதுனம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில் வியாபாரம் மந்த கதியில் இயங்கும். நண்பரின் செயலை குறை சொல்ல வேண்டாம். குழந்தைகளின் நலனில் அக்கறை கொள்வர்.



**கடகம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் கூடும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**சிங்கம்:** பணி நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பாதுகாப்பு விடயத்தில் விழிப்புடன் இருக்கவும்.



**கன்னி:** சமூக விடயங்களில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் புத்தாடை நகை வாங்குவர்.



**துலாம்:** உங்கள் மீதான மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சியால் வருமானம் பெருகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க அனுகூலம் உண்டு.



**விருச்சிகம்:** நண்பர் எதிர்பார்த்த உதவியைச் செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.



**தனுசு:** தகுதிக்கு மீறி வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும்.



**மகரம்:** நேர்மறை சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட அபிவிருத்தி பணி நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். காணாமல் தேடிய பொருள் புதிய முயற்சியால் கிடைக்கும்.



**கும்பம்:** மனதில் இருந்த குழப்பம் தீரும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.



**மீனம்:** உங்களின் யதார்த்த பேச்சால் பிறர் சங்கடப்படலாம். தொழில் வளர்ச்சி பெற கடின உழைப்பு தேவைப்படும். சுமாரான இலாபம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**படிக்காமப் போய்ட்டோம்னு கவலைப்பட்ட காலம் போய்...**



**இவ்வளவு செலவு பண்ணி படிச்சுத் தொலைச்சிட்டம்னு நினைக்கிற காலத்தில வந்து நிக்கிறோம்...**

**காலை எழுந்ததும் நல்லதா நாலு வார்த்தை காதில விழுதோ இல்லையோ...**



**எரும மாடு! சோம்பேறிக் கழுத! காலையிலேயே பல்லுகூட விளக்காம போன் பாக்குது பாரு என்டு மட்டும் விழுது...!**

**ஏண்டா குடும்பத்தோட ஜெயிலுக்கு வந்துட்டீங்க?**



**வெளியில விலைவாசி ஏறிப் போச்சு... வயிறார சாப்பிட முடியலை... அதான் சார்...**



# ஐ.நா. சபையில் ஜல்லிக்கட்டு

சென்னை மெரினாவில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஜல்லிக்கட்டுப் போராட்டம் 'ஜல்லிககட்டு' என்ற பெயரில் படமாகத் தயாராகியுள்ளது. இதன் முன்னோட்டம் ஐக்கிய நாடு சபையில் வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 5ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை தமிழ்நாட்டில் நடந்த ஜல்லிக்கட்டுப் போராட்டம் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. சென்னை மெரினாவில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய போராட்டமாக எழுச்சி பெற்றது. எந்தக் கட்சிச் சார்பும், அரசியல் கலப்பும் இல்லாமல் நடந்த இந்த போராட்டம் 'ஜல்லிக்கட்டு' என்ற பெயரில் படமாக தயாராகியுள்ளது.

சந்தோஷ் இயக்கும் இந்த படத்தை அஸ்மிதா புரொடக்ஷன் சார்பில் சிங்கப்பூரைச் சேர்ந்த நிருபாமா, குருசரவணன் ஆகியோர் தயாரித்துள்ளனர். வொஷிங்டனைச் சேர்ந்த ஜெயபால் இணைந்து தயாரித்திருக்கிறார். இதன் முதல் காட்சி ஐக்கிய நாடுகள் சபையின் வெளியிடப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 9 | | 7 | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | | 9 | | |
| 5 | | | 9 | | 1 | | | 4 |
| | 6 | | | 3 | | | 8 | |
| 3 | | | 8 | | 2 | | | 7 |
| | | 5 | | | | 6 | | |
| 7 | | | | | | | | 5 |
| | 8 | | 5 | | 3 | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 1 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஏன் சார்
பொண்ணு சாஞ்சு சாஞ்சு நடப்பான்னு நீங்க சொல்ல வேயில்லயே!
உங்க பையன் கூட ராத்திரி ஆச்சுன்னா தள்ளாடிக்கிட்டே வருவார்னு நீங்க சொல்லவேயில்லயே!"



மனைவி : ஏங்க என் பிரசவ நேரத்தில் உதவியா இருக்க எங்கம்மாவை கூப்பிடட்டுமா?
கணவன் : வயதான காலத்தில் அவங்களை ஏன் சிரமப்படுத்துற! பேசாம உன் தங்கையை கூப்பிடு!

**கோழியின் கிறுக்கல்!!**
வாழ்க்கையின் பாரம் அதிகரிக்கத் தொடங்கியவுடன், பயணிக்கும் வண்டியின் வேகத்தைக் குறைத்துக் கொள்கிறோம்!

# தியாகம்



முன்னொரு காலத்தில் ஜப்பான் நாட்டில் ஒருவிதவைத் தாய்க்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். தாய், கூலி வேலை செய்து தன் பிள்ளைகளைக் காப்பாற்றி வந்தாள். அந்தத் தாய் கடினமான உழைப்பினால் வெகு விரைவில் உடல் ஆரோக்கியம் கெட்டு நோயினால் பீடிக்கப்பட்டாள். தாய், வியாதியி னால் துன்பப்படுவதைக் கண்ட பிள்ளைகள் கூலி வேலை செய்து உழைப்பதற்கு முயற்சி மேற்கொண்டனர்.

ஆயினும் அவர்களது உணவுக்கும் தாயின் நோய்க்கான மருந்துக்கும் போதுமான பணம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்போது புதல்வர்களில் இளையவனான சிறுவன், தன் சகோதரர்களை நோக்கி "நான் மிகச் சிறுவன். என்னால் ஒன்றும் சம்பாதிக்க முடியவில்லை. ஆகவே நான் என் பங்குக்கு ஒரு ஆலோசனை சொல்கிறேன்.

எமது நாட்டில் இந்தக் காலத்தில் திருட்டுக் குற்றம் அதிகம் நடைபெறுவதால், அரசர் திருடனைப் பிடித்துக் கொண்டு வருபவர்களுக்கு பரிசு அளிப்பதாக அறிவித்துள்ளார். ஆகவே உங்களுடைய வீட்டில் திருடவரும்போது என்னைக்கையும் களவுமாகப் பிடித்தோம் எனக் கூறி என்னைக் கட்டி இழுத்துக் கொண்டு சென்று அரசன் முன் நிறுத்துங்கள்.

நானும் குற்றம் செய்தேன் எனக் ஒப்புக் கொள்கிறேன். அரசனும் என்னைக் குற்றவாளியாகக் கருதி உங்களுக்கு நிறையப் பணம் கொடுப்பார். அப்பணத்தை வைத்து உடனடியாக எமது தாயாருக்கு நல்ல வைத்தியம் செய்யுங்கள். சத்தான உணவுகளை வாங்கி அவருக்கு உண்ணக் கொடுங்கள்" என்று உருக்கமாக வேண்டினான். இளைய சகோதரனின் வேண்டுகோளை ஏற்க முதலில் சகோதரர்கள் மறுத்தார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அவன் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டமையால் அவன் மீது பாசமிருந்தும் மறுக்க முடியாமல் இருவரும் சகோதரனைக் கட்டி இழுத்துச் சென்று நீதிபதியிடம் ஒப்படைத்தபோது நீதிபதியோ அவர்களிடம் விசாரணை செய்தார். குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் சிறுவனைச் சிறையிலடைக்கக் கட்டளையிட்டு அரசனிடம் விடயத்தைக் கூறி வந்தவர்களுக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

சகோதரர் இருவரும் மிகுந்த துயரத்துடன் இளையோனை விட்டுப் பிரிந்து பணத்தைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்ததோடு இரகசியமாகத் தாங்கள் செய்த செயலையும் தாயிடம் ஒன்றுவிடாமல் உரைத்தனர். தாயோ தன் சிறுவனாகிய இளையவன் செய்த தியாகத்தை எண்ணி பெரும் துயரமும் பெருமையும் அடைந்தாள். இந்த உலகில் அவனைவிட தான் நேசிக்கத்தக்க பிள்ளை யாரிருப்பார் என மனம் நெகிழ்ந்தாள்.

சிறுவனை குற்றவாளியாக்கி பணம் பெற்றுச் சென்றவர்கள் மகிழ்ச்சியாகச் செல்லாது மிகுந்த கவலையுடன் சென்றதை அவதானித்த நீதிபதி அவர்களை அறியாமல் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அவர்கள் தாயிடம் பேசிய விடயங்களை உற்றுக் கேட்டார். சிறுவன் செய்த தியாகம் அவர் உள்ளத்தை ஈர்த்தது. விடயத்தை உடனடியாக அரசருக்கு தெரிவித்தார். அரசரோ அந்த தியாகியைப் பெரிதும் பாராட்டி நிறையப் பொன், பொருள் வழங்கி அவனை விடுதலை செய்து அனுப்பி வைத்தார்.

**இக்காலத்தில் கடமையுணர்ச்சியுடைய எத்தனை பிள்ளைகள் தமது பெற்றோருக்கு வயோதிபம், நோய், துன்பம், வறுமை வரும் காலத்தில் இத்தகைய உயரிய அன்பைக் காட்டத் தயாராக உள்ளார்கள்?**

**தந்தை தாய் பேண்**



# சிறுவர் மகிழும் ஆடிப்பிறப்பு

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சக்கரையுங் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவையதிற் கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக்கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துளாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே!

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப்பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்




# மரபுத் தொடர்கள்

1. அகடவிகடம் - தந்திரம்
2. அகலக் கால் வைத்தல் - அளவு கடந்து போதல்
3. இட்டுக்கட்டுதல் - இல்லாததை எல்லாம் சொல்லுதல்
4. இலவு காத்த கிளி- காத்திருந்து ஏமாறுதல்
5. எடுத்தெறிதல் - அலட்சியம் செய்தல்
6. ஏட்டுச் சுரக்காய் - அனுபவமில்லாத கல்வியறிவு
7. ஒத்துப்போதல் - அனுசரித்துப் போதல்
8. கட்டுக்கதை - பொய்க்கதை
9. கல்லில் நாருரித்தல் - இல்லாததைப் பெற முயலுதல்
10. கைகூடுதல் - நிறைவேறுதல்
11. சீட்டுக் கிழித்தல் - வேலையில் நின்று நீக்கல்
12. நுனிப்புல் மேய்தல் - மேலெழுந்தவாரியாகப் படித்தல்
13. நெஞ்சு புண்ணாதல் - மனம் வருந்துதல்
14. பூசி மெழுகுதல் - குற்றத்தை மறைத்தல்
15. ஒத்துப் பாடுதல் - மனமொத்து அல்லாமல் போலியாக ஆமோதித்தல்.



# பழமொழி - பொருள்

- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சி
- அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி - முன்மாதிரி
- ஆழம் அறியாமல் காலை விடாதே - ஆராய்ந்து செய்
- ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் - காலம் மாறும்
- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தியற்ற மனம்
- இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை - தருமஞ்செய்
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் - உலோபம் கூடாது (கஞ்சத்தனம்)
- எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ? - இளமையில் செய்
- கடவுளை நம்பினோர் கைவிடப்படார் - நம்பிக்கை காக்கும்



# நேரு சொன்ன விளக்கம்

நேரு இந்தியத் தலைமை அமைச்சராக சோவியத் யூனியனுக்குபயணம்செய்த போது அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவரைப் பார்ப்பதற்கு பெரும் திரளாகக் கூட்டம் கூடியது. அப்போது அவதூறு பேசியே பழக்கப்பட்ட சிலர் அதுதானாக விரும்பி வந்த கூட்டம் அல்ல என்றும் ரஷ்ய அரசு திட்டமிட்டு கூட்டத்தைக் கொண்டு வந்து நிறுத்தியதென்றும் குறை கூறினார்கள். இதைப்பற்றி நேருவிடம் சிலர் கூறிய போது அவர் சிரித்துக் கொண்டே ''கூட்டத்தைக் கொண்டு வந்து அரசால் நிறுத்த முடியும் என்பது உண்மைதான். ஆனால் கூட்டத்துக்கு வந்த அனைவரும் மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தார்களே! அதுவும் அரசு சொல்லித்தான் என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினாராம்.

# விலங்குப் புதிர்

படத்தில் கொடுக்கப்பட்டுள்ள இந்த விநோதமான விலங்கின் உள்ளே மொத்தம் ஆறு விலங்குகள் ஒளிந்துள்ளன. என்னென்ன விலங்குகள் என்பதைக் கண்டறியுங்கள் பார்ப்போம்.




# ஆழமாகச் சுவாசிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

சுவாசிக்கும் போது நாம் மேலோட்டமாக சுவாசித்தால், எமது உடலுக்கு தேவையான ஒக்சிஜன் மட்டும் தான் கிடைக்கும்.

ஆனால் அதுவே நாம் ஆழமாகச் சுவாசிக்கும் போது, அதிகமான ஒக்சிஜன் எமது உடலுக்குள் சென்று உடலில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கிறது.

ஆழமாக சுவாசிப்பதால் கிடைக்கும் நன்மைகள்?

சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல் மற்றும் வியர்த்தல் ஆகியவற்றின் மூலம் வெளி




யேற்றப்படும் நச்சுக்கள், எமது சுவாசம் வழியாகவும் வெளியேறுகிறது. எனவே ஆழமாகச் சுவாசிப்பது நல்லது.

ஆழமான சுவாசம் தசைகளை விரிவடையச்செய்து, மன அழுத்தத்தைக் குறைத்து, மனதை அமைதியாகவும், புத்துணர்ச்சியா கவும் வைத்திருக்க உதவுகிறது. எனவே மன அழுத்தமாக இருக்கும் போது மேலோட்டமான சுவாசம் சிறந்தது.

எமது உடலுக்கு தேவையான ஆற்றல், எம்முடைய ஆழமான சுவாசத்தின் போது, உண்டாகும் ஒக்சிஜன் மூலம் கிடைக்கிறது. இந்த ஆழமான சுவாசப் பயிற்சியை பின்பற்றி வந்தால், மூச்சுத் திணறல் பிரச்சனைகள் ஏற்படாது.

ஆறு மாதம் தொடர்ந்து ஆழமாக சுவாசப் பயிற்சியை பின்பற்றி வந்தால், புகை ப்பிடிக்கும் பழக்கம் தானாகவே போய்விடும் என்று யோகா பயிற்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஆழமான சுவாசத்தை தினசரி பழக்கப்படுத்திக் கொண்டால், அது நுரையீரலில் ஏற்படும் சளி மற்றும் மார்பு நெரிசல் போன்ற பிரச்சினைகள் வராமல் தடுக்கும்.

எமது உடம்பில் உள்ள குருதியை தூய்மையாக்க ஆழமான சுவாசம் உதவுகிறது. இந்த ஆழமான சுவாசப் பயிற்சியை செய்வதால், குருதி அணுக்கள் அதிகமான ஒக்சிஜனை உடலுக்கு எடுத்துச் சென்று உடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

## வேலைவாய்ப்பு

யாழ். பல்கலைகழகத்துக்கு முன்பாகவுள்ள பெண்கள் தங்குமிட விடுதிக்கு கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பம் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

பதவி
- விடுதிப்பொறுப்பாளர் பெண்கள் மட்டும் (Female Warden)
- வயது : 25-45 வரை
- உணவு, தங்குமிடவசதிகள் இலவசம்
- சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்புகளுக்கு. 0763599737, 0770856058**

கோடீசுவரன்
சீட்டிழுப்பு வாரம்: 163
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 16.07.2017
ரூ. 94,334,740/-
G 25 34 49 77
19 29 47 55
Web: www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தால் வெளியிடப்பட்ட "வீரகத்தி விநாயகம்" மலரின் மலர் ஆசிரியரான

**கு. பாலஷண்முகன்**

அவர்களின் அன்புத்தாயார்



**சிவபாக்கியம் குமரேசன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்தி பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**நம்பிகை பொறுப்பாளர் பரிபாலன சபையினர்**
**கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில்,முதலாய கோயில்கள், கைதடி**

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் நாகம்மா (நாகேஸ்வரி)



காரைநகர், வலந்தலை, கணக்கனார் கண்டியைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் நாகம்மா (நாகேஸ்வரி) நேற்று (16.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வியும் ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை கஜமுகன் சரஸ்வதியின் அன்புச் சகோதரியும், நல்லை சேகரம்பிள்ளை பாலசுப்பிரமணியம் (ஓதுவார் கலாபூசணம், புராண படன வித்தகர், கலைமாமணி, முன்னைநாள் சாந்தி அச்சக முகாமையாளர்), கஜமுகன் (ஓய்வுபெற்ற சீநோர் திட்ட உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வேல்வேந்தன் (UK), வாசுகி - திருக்குமார் (UK) ஆகியோரின் சிறிய தாயாரும் வேல்வேந்தன் - ஞானகௌரி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் சிவகுகன் (UK), வாகீசன் (UK), கஜாணனன் (UK), பவித்திரா (UK), அபர்ணா (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் க. கங்காதேவியின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2017) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் மூளாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தபால்பெட்டிச் சந்தி,**
**மூளாய் கிழக்கு, மூளாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்குண்டு

உடுவில் K.K.S வீதியில் மூன்றாவது 6 1/2 பரப்புகாணிவிற்பனைக்குள்ளது. முகவர்கள் தேவையில்லை. நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

**0776064140, 0775581534**

## மணமகன் தேவை

1974 ஆம் ஆண்டு பிறந்த 2 இல் செவ்வாய் 4 பாவம் உயரம் 5' 6" வைத்தியத்துறை சம்பந்தமான ஸ்தாபனம் மெல்போன் ஆஸ்திரேலியாவில் பலவருடங்களாக சகலவதிவிடபதிவுகளுடன் வாழ்கின்றார். தாரம் இழந்தவர்களும் வரவேற்கப்படும்.

**தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்**
**0262221544, 0778908015**

## விற்பனைக்கு உண்டு


மணவறை (பைவர் மணவறை, பூ மணவறை) Water கூலர், 24000 Btu A/C சலூன் உபகரணம் (கதிரை, Bed, ஆவி பிடிக்கும் உபகரணம்) பியூட்டி பாலர் உபகரணம், கட்டட வேலைகளில் பயன்படும் Supporting Set என்பன விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு. 0772186919**

Galaxy Star
வெற்றி வாரம் 177
திகதி 2017.07.16
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
04 12 15 53 56
11 31 36 51
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 399, 556/-
2017.07.19 ஆம் திகதி புதன்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 16.07.2017
வெற்றி வாரம் 2159
வர்ணம் ஊதா
கடகம்
வெற்றி இலக்கங்கள்
01 13 23 56
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 596, 520/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
04 16 26 46
2017.07.18 ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்கள்



### பற்றிக் ஜெயராசா

*(ஓய்வுபெற்ற நகரசபை மேற்பார்வையாளர்)*


பற்றிக் ஜெயராசா (ஓய்வுபெற்ற நகரசபை மேற்பார்வையாளர்) நேற்று (16.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திரிசியார் அன்னம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மேரிநேசமணியின் அன்புக் கணவரும் ஜெயந்தினி (ஆசிரியர், யா/ விக்னேஸ்வரக் கல்லூரி), மேரிசாந்தினி, மெரீனாறோஜினி, அனிற்றாஜெஸ்வந்தி, காலஞ்சென்ற யூட்ராஜன், காலஞ்சென்ற யூட்ரஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராசா (ஆசிரியர், யா/ நெல்லியடி மத்திய கல்லூரி), பிரகலாதன், யஸ்ரின், காலஞ்சென்ற நித்தியசெல்வன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆர்த்தனா, அபிரா, அஜித்ரா, மாதுளன், நிகரிலான், ஆதிரை, அனனியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.07.2017) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வதிரி அந்தோனியார் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை நிகழ்த்தப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: வே.நாகராசா**
**(மருமகன் - 0779141799)**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 | 16 |
| 02 | 07 |
| 1929 | 2017 |



### சின்னத்தம்பி செல்லப்பா

**(இளைப்பாறிய ஆசிரியர் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்)**

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி செல்லப்பா நேற்று (16.07.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மா (பரமேஸ்வரி ரீச்சர், வரணி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை மற்றும் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கேசவர், சுவாமிநாதன் மற்றும் வேலாயுதபிள்ளை, காலஞ்சென்ற மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசந்தா (ஆசிரியை, கொ/பாத்திமா முஸ்லீம் மகளிர் கல்லூரி), வனஜா (Newzeland), வசீகரன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மராஜா (விரிவுரையாளர் - உயர் தொழில் நுட்பக் கல்லூரி மட்டக்குழி), சுதாகரன் (Newzeland), சிவசுதா (UK) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற பிரியங்கா மற்றும் ஹறுஸ்கா (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (17.07.2017) திங்கட்கிழமை பி.ப.2.00 8.00 மணிவரை வைக்கப்பட்டு நாளை (18.07.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப.2.00 மணிக்குகல்கிசைஇந்துமயானத்தில்தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**13A, 3/2, Fussels Lane,**
**Colombo 06.**
**0112559943, 0775487076**

**தகவல்: பிள்ளைகள்,**
**மருமக்கள்**


# வாழும் உயிரிகள்


## அழிவோடு திண்டாடி உயிர் பேணிக் காக்கும் பரிவுகள்

செ.தமிழ்கோ

இந்த உலகம் உருவாகி அண்ணளவாக 454 கோடி ஆண்டுகள் ஆகின்றன. சூரியனுடைய வயதும் இதை ஒத்ததாகவே அமைந்துள்ளது. இந்தக் கோளில் மட்டும்தான் உயிர்கள் வாழ்வதற்கான சூழமைவுகள் காணப்படுகின்றன. இங்கு ஒட்சிசனைச் சுவாசிக்காத உயிரினங்களும் உண்டு. அதே போல கொதிக்கும் நீரிலும், கரிக்கும் உப்பிலும், உறையும் பனியிலும் வாழும் உயிரினங்களும் அதிகமாகவே இருக்கின்றன. மனித இனம் வாழ்வதற்காகத்தான் இந்த உலகம் உருவானதா என்ற கேள்விகளை கேட்டிருந்தால் பதிலானது இல்லை என்றே வெளிப்படும். ஏனெனில் நாம் அனைவருமே இந்தப் பூமியில் இயக்கமுறும் வழிப் போக்கர்கள்தான். ஆனாலும் புவி அலங்காரம் செய்கின்ற இயற்கையை ஆட்டிப் படைக்கிறோம்.






### வெள்ளை நிறத் தொப்பி

பூமியின் இருதுருவங்களும் பனித்தொப்பிகளை மாட்டிக் கொண்டு திரிகின்றன. ஆனாலும் அதன் உள்ளாய் அமைந்துள்ள மையப்பகுதியானது இரும்பு,நிக்கல் கலந்த குழம்பினால் கொதித்துக் கொண்டு இருக்கிறது. அதன் காரணமாக பூமி காந்தப்புலனையும் கொண்டமைந்துள்ளது. பூமியின் வட துருவம் ஆட்டிக் என்றும், தென் துருவம் அந்தாட்டிக்கா என்றும் அழைக்கப்படுகிறது. இவை கொண்டுள்ளதனா அதிக தாது வளங்களும், அதன் விளைவாய் உருவான உயிரினங்களும் மனித சமுதாயத்துக்குப் பெரிதும் உதவுகின்றன.

### முதல் உயிரியும் வாயுப்பரிணாமமும்

பூமியின் ஆற்றல் மிகுந்த வேதியியல் பரிணாமம் காரணமாக அண்ணளவாக 400 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக தானாகவே இரட்டிப்பான ஒரு மூலக்கூறின் மூலம் உலகின் பொது மூதாதையரான ஓர் உயிரி உருவானதாகக் கூறப்படுகிறது. அதன் பின்பு உயிரினங்களின் தொடக்க காலப் பரிணாமங்கள் முதல் ஒளிச் சேர்க்கை உயிரி வந்ததன் பின்பாகவே தொடக்கமுற்றன. ஒளிச் சேர்க்கையின் வயது 350 கோடி ஆண்டுகள். அதற்கு முன் வாழ்ந்த உயிரிகள் எல்லாமும் ஜதரசன் அல்லது ஜதரசன் சல்பைடைப் பயன்படுத்தி உயிர் வாழ்ந்தன என்றே சொல்லப்படுகிறது.

அண்ணளவாக 30 கோடி ஆண்டுகளுக்கு முன் வந்த சயனோபக்டீரியா (Cyano bacteria) என்ற நீலப்பச்சைபாசி என்றே கூறப்படுகிறது. இந்த உலகை ஒட்சிசன் நிறைந்த உலகம், ஒட்சிசன் உள்ள வளி மண்டலம் என உலகின் முகவமைப்பையே மாற்றிய ஜாம்பவான்களாக இவையே விளங்குகின்றன. நாம் சுவாசிப்பதற்கான ஒட்சிசனை உருவாக்கிய பெருமை இந்த நீலப் பச்சைப் பாசிகளுக்கே உண்டு. இதன் பின்னான காலப்பகுதியிலேயே உயிரினப் பரிணாமம் பெரும் வீச்சுடன் நடைபெற்றது. அது போலவே 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக பூமியின் காந்தப் புலன் அல்லது பரப்பு உருவானது. அதன் ஈர்ப்பு விசை கொண்டே வளிமண்டலம் ஓடிப்போகாதிருக்கப் பணிக்கப்பட்டது. காப்பாற்றப்பட்டுள்ளது என்றே சொல்லலாம்.

### அழிவோடு மீண்டு வரும் பூமி

உலகம் உருவானதிலிருந்து ஏராளமான பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. அவை மூலம் ஒட்டுமொத்த உயிரின அழிவுகள் இடம்பெற்றுள்ளன. இதுவரை உருவான உயிரினங்களில் அண்ணளவாக 98 வீதமானவை இந்தப் பேரழிவுகள் கொண்டுதான் உலகத்தின் முகத்திலிருந்து துடைத்து எறியப்பட்டன. அதிலும் பெர்மியன்(பேர்மியன்) காலத்தில் நிகழ்ந்த அழிவுகள்தான் பெரும் சாவு (Great Dying) நிறைந்த பேரழிவு என்று சொல்லப்படுகிறது. இந்த மகா அழிவு அண்ணளவாக 250 கோடி ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. இந்த அழிவின்போது 96 வீதமான கடல் வாழ் உயிரிகளும், 70 வீதமான நிலவாழ் உயிரினங்களும் இந்த உலகை விட்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகி றது.

பூச்சிகளையும் இந்த ஆழிப்பேரலை அழிவுகள் விட்டு வைக்கவில்லை. அழிந்து போனவைகளில் முக்கியமா னவை பாலூட்டிகள் போலிருந்த ஊர்வன என்றே சொல்லப்படுகிறது. இந்த அழிவுக்குப் பின்பாக அண்ணளவாக 30 கோடி ஆண்டுகளுக்குப் பின்புதான் முதுகெலும்பிகள் தங்களின் இடத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ளன.

### வாழும் உயிரிகள்

இன்றைய உலகில் லைக்கன்ஸ் (Lichens), காளான்கள், பக்டீரியா என அனைத்துத் தாவர விலங்கினங்களை உள்ளடக்கியதாக அண்ணளவாக 1.13 கோடி உயிரின வகைகள் இந்தப் புவியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் பூச்சிகளில் மட்டுமே அண்ணளவாக 5 மில்லியன் இனங்கள் உள்ளன. முதுகெலும்பில்லாதவை 67 இலட்சத்து 55 ஆயிரத்து 830 இனங்கள் உள்ளன. முதுகெலும்பிகளில் அண்ணளவாக 80 இலட்சத்து 500 வகையினங்கள் உள்ளன. மொத்த தாவர இனங்களுள் 3 இலட்சத்து 90 ஆயிரத்து 700 வகைகள் உள்ளன.

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 • 05 • 1941 | 15 • 07 • 2017 |

### செல்லையா இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ் மாநகரசபை)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராஜரட்ணம் அவர்கள் 15.07.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு .திருமதி செல்லையாவின் அன்பு மகனும் நகுலேஸ்வரி அம்மாவின் அன்புக்கணவரும் சுகந்தினி (விரிவுரையாளர் .வவுனியா விவசாயக் கல்லூரி) .Dr சுனிதா (UK),சுவர்னா(கனடா),சுந்தரேசன் (Senior Project Manager, ஆஸ்திரேலியா), சுவேதா (ஆசிரியை , D.S.சேனாநாயக்க கல்லூரி)ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தில்குமரன் (விரிவுரையாளர் .தேசிய கல்வியியற்கல்லூரி .வவுனியா), பிரசன்னா(Surveyor), ராஜேஷ்வரன்(பொறியியலாளர்,கனடா), சத்தியா (ஆஸ்திரேலியா), ரமேஷ் (உதவி முகாமையாளர் .இலங்கை வங்கி , தலைமைக்காரியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜயப்பிரியா, பிரேமி, பிரியங்கா, ஹிருணி, தருஷி, டயாணி, ஸ்ரீராம், சிவராம், சாய்ராம், சஜிராம், கேஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசையா, செல்லம்மா, கந்தையா, பொன்னுத்துரை, சின்னமணி மற்றும் இரத்தினம்மா, கண்மணி(கனடா), சபாரட்ணம்(UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.07.2017 )திங்கட்கிழமை காலை 10.00 மணியிலிருந்து பிற் பகல் 3.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு .பின்னர் இறுதிக்கிரியைகள் 18.07.2017 செவ்வாய்க்கிழமை நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

011 236 2772

## கூட்டு...

கட்சியின் மையக் குழு உறுப்பினருமான மகிந்த அமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பில் முடிவொன்றை எடுப்பதற்காகச் சுதந்திரக் கட்சியின் மையக் குழு விரைவில் கூடும் எனவும் அவர் கூறினார்.

கூட்டு அரசிலிருந்து அமைச்சர்களான ஜோன் செனவிரத்ன, சுசில் பிரேமஜயந்த, அநுரபிரியதர்சன யாப்பா உட்பட 18 சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் வெளியேறப் போவதாக எச்சரித்துள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜோன் செனவிரத்ன, அரசில் இருக்கும்வரை சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்த முடியாது. அதிலிருந்து வெளியேறி எதிரணியில் அமர்வதற்கு அரச தலைவரிடம் அனுமதி கோரப்பட்டது. கூட்டு அரசின் ஒப்பந்தம் டிசெம்பரில் முடிவதால் அதுவரை பொறுமை காக்குமாறு அரச தலைவர் கோரிக்கை விடுத்தார். இது பற்றி பரீசிலனை செய்துவருகின்றோம், என்று கூறினார்.

இந்த நிலையில், சுதந்திரக்கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மிகவும் நெருக்கமான அமைச்சரான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரிடம் வினவியபோது, அரச தலைவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது, இரண்டுபேர் மாத்திரமே அரசிலிருந்து வெளியேறவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். அதுவும் சுயாதீனமாக இயங்கப்போவதாகவே அவர்கள் குறிப்பிட்டனர். சுதந்திரக் கட்சியில் இருந்து செல்பவர்கள் கூட்டு எதிரணியுடன் இணையமாட்டார்கள். எதுஎப்படியிருந்த போதிலும் கூட்டு அரசுடனான உறவு குறித்து எந்தவொரு நபரும் தனிமுடிவை எடுக்க முடியாது. இது விடயத்தில் கூட்டுப் பொறுப்பு இருக்கின்றது. மையக் குழுவின் ஊடாகத்தான் தீர்மானமெடுக்க வேண்டும். இதற்காக மையக் குழு கூட்டம் கூடவுள்ளது-என்றார்.

அதேவேளை, ஒருதொகுதி சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூட்டு அரசைவிட்டு விலகினாலும் ஏனைய சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூட்டு அரசில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பார்கள் என்று அறியமுடிகின்றது. (த-5)

## முல்லைத்தீவில்...

'அழிக்காதே அழிக்காதே எங்கள் காடுகளை அழிக்காதே' என்ற கோசங்களைப் பலமாக எழுப்பிக் கொண்டு இந்தப் பேரணி சென்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதமாக 177 ஏக்கர் தேக்கங்காடுகளை அழித்து மக்களைக் குடியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. காணிகள் அற்றவர்களில் முஸ்லிம் மக்களுக்கு மாத்திரம் காணிகள் வழங்கப்படுவதற்கு அண்மையில் நடந்த மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. காணிகள் அற்ற தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சமநேரத்தில் காணிகளை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியில், சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு எதிரான இளைஞர் அணி இனப் பரம்பலைச் சிதைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சட்டவிரோதக் காடழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த, சமூகவலைத் தளம் ஊடாகக் கடந்த வியாழக்கிழமை அழைப்பு விடுத்திருந்தது. மிகக் குறுகிய அழைப்பை ஏற்று, வடக்கின் 5 மாவட்டங்களிலிருந்தும், நூற்றுக்கணக்கான இளைஞர்கள் முல்லைத்தீவு நோக்கி நேற்றுப் படையெடுத்தனர்.

முள்ளியவளை ஆலடிச் சந்தியிலுள்ள காட்டா விநாயகர் ஆலயத்தில் முற்பகல் 11.30 மணிக்குப் பேரணி ஆரம்பமானது. பல்வேறு பதாகைகளைத் தாங்கிப் பிடித்தவாறும் கோசங்களை எழுப்பியவாறும், முல்லைத்தீவு மாங்குளம் வீதி வழியாக இளைஞர்கள் ஆர்ப்பரித்து பேரெழுச்சியுடன் பேரணியாகச் சென்றனர். சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் இந்த நடைபயணம் தொடர்ந்தது. இதன்போது வீதிப் போக்குவரத்தைப் பேணும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். பேரணியைக் கண்காணிக்கும் வகையில் புலனாய்வாளர்க ளும் குவிக்கப்பட்டிருந்தனர்.

'இயற்கை வளங்களைத் திட்டமிட்டு அழிக்கும் குடியேற்றங்களைத் தடைசெய்', 'எமது அமைதியான வாழ்க்கையை உறுதி செய்', 'வளர்த்தது நாங்கள் வெட்டுவது தான் உங்கள் வேலையா?', 'எங்கள் வனத்தாய் மடியில் தீவைக்க விடமாட்டோம்', 'கடலும் காடும் எம் மூச்சு', 'மண்ணில் துளையிட்டது வேர்கள் மட்டுமல்ல மாவீரர் கனவுகளும்தான்' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிப் பிடித்திருந்தனர். கோசங்களையும் எழுப்பினர்.

மதியம் 1.30 மணியளவில், பேரணி கூழாமுறிப்பைச் சென்றடைந்தது. அங்கு பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டது. இதன் பின்னர் அமைதியான முறையில் இளைஞர்கள் கலைந்து சென்றனர். இந்தப் பேரணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5-7-10-35-37)

## மணல் விநியோகம்...

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மணல் அகழ்வு மேற்கொள் ளப்பட்டு வந்த பிரதேசம், வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட் டது. இதன் பின்னர் மணலுக்குத் தட்டுப்பாடு உருவாகியது. இதனைப் பயன்படுத்தித் திருட்டு மணல் அகழ்வு நடவடிக்கைகளும் முனைப்புப் பெற்றிருந்தது. மணலுடன் சென்ற வாகனத்தின் மீது கடந்த வாரம் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழந்திருந்தான்.

இதன் பின்னர், வடமராட்சியிலிருந்து சட்டவிரோதமான மணல் அகழ்வு நடவடிக்கை அதிகரித்திருந்தது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் சில தினங்களுக்கு முன்னர் திடீர்ப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளை நேரடியாக அவதானித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

'தற்போது சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை அதிகரித்துள்ளது. இந்தச் செயற்பாட்டுக்காக வீதியில் நின்று தகவல் வழங்குகின்ற செயற்பாட்டிலும் ஒரு கூட்டத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். பொலிஸாருக்குச் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் நேரடியாகவே தெரிவித்திருக்கின்றேன். சட்டத்துக்கு உட்பட்ட வகையில் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன்' எனத் தெரிவித்தார்.

மேலும் கட்டுமான நடவடிக்கைக்குரிய மணல் விநியோகம் தற்போது இடம்பெற்று வருவதாகவும் மாவட்டச் செயலர் கூறினார். (த-5-101)

## வடக்கில்...

வுள்ளதாக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் கணித , விஞ்ஞான பாடங்களுக்கான வெற்றிடத்துக்குக் கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி 219 பேர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் 181பேர் தமது கடமையை பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 418 கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்பட்டது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி பத்திரிகைகள் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டது.

இதற்காக விண்ணப்பித்த 353 பட்டதாரிகளில் 219 பேர் மட்டுமே தகுதியானவர்கள் என நேர்முகத்தேர்வின்போது கண்டறியப்பட்டனர். சில பட்டதாரிகள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியபோதும் சான்றிதழ் கைவசம் இல்லாமை காரணமாக அதனைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் கோரியிருந்தனர் . அந்தக் கோரிக்கையின் பிரகாரம் அவர்களுக்கு மேலும் ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்தில் மேலும் 27 பட்டதாரிகள் தமது சான்றிதழைச் சமர்ப்பித்திருந்தனர்.

அவ்வாறு சமர்ப்பித்தவர்களின் சான்றிதழ் பரிசீலிக்கப்பட்டது. அவர்களுக்கு நாளை (இன்று) நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றார். (த-101)

## டெனீஸை...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ரெலோ அமைப்பு வடக்கு மாகாண முதலமைச்சருக்குக் கடந்த 13ஆம் திகதி கடிதம் அனுப்பியிருந்தது. தமது கட்சி சார்பான, தங்கள் அமைச்சரவையில் உள்ள பா.டெனீஸ்வரனை நீக்குமாறும், புதியவரது பெயரைத் தமது கட்சி பிரேரிக்கும் எனவும் தெரிவித்திருந்தது. இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனைப் பதவி நீக்குவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் முன்னெடுத்துள்ள நிலையில், கட்சித் தலைவர் என்ற ரீதியில் தெரியப்படுத்தப்பட்டுள்ளதா என்று இரா.சம்பந்தனிடம் வினவியபோது,

இது தொடர்பில், ரெலோ அமைப்போ அல்லது வடக்கு மாகாண முதலமைச்சரோ தன்னுடன் கலந்தாலோசிக்கவில்லை என்றும், தற்போதைய நிலையில் இதற்கு என்னால் பதில் கூறமுடியாது எனவும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சருடனான சந்திப்புத் திகதி குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும், இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (த-5)

## அனைத்துக்...

நேற்றுப் பிற்பகல் 2 மணி நேரம் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் மகிந்த அணியினர் மாத்திரம் பங்கேற்கவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டது. அதில், உள்ளூராட்சிமன்றங்களுக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்வதில், தற்போதுள்ள வட்டாரங்களின் அடிப்படையில் 60 சதவீதம் தொகுதிவாரியாகவும், 40 சதவீதம் விகிதாசார அடிப்படையிலும் தெரிந்தெடுப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கிக் கொண்டன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவில், ஒரு கட்சியின் சார்பில் 25 சதவீதம் பெண்களுக்கான இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற விடயமும் தேர்தல் திருத்தச் சட்டவரைவில் ஆராயப்பட்டது. இதில் சில தொழில்நுட்பத் தவறுகள் இருப்பதால் அதனைச் சரி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. திருத்தப்பட்ட வரைவு நாளை மறுதினம் புதன்கிழமை மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளது. (த-5)

## டிசெம்பர்...

நவம்பர் அல்லது டிசெம்பர் மாதமே உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சூழல் இருப்பதாக இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடர் நடைபெறும் என்பதால், நவம்பர் மாதம் வைப்பது சாத்தியமில்லை என்று கூறப்பட்டது. ஒக்ரோபர் மாதம் வைப்பதற்கு, காலம் போதாமல் உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது. இறுதியில் டிசெம்பர் மாதம் தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டது.

இதன்போது, டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி கல்விப் பொதுத்தராதரச் சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாவதால் அதற்கு முன்னர் தேர்தலை நடத்தவேண்டும் என்று ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்படி நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடர் முடிவடைந்த பின்னரும், டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு இடையிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என்று தெரியவருகின்றது. (த-5)

## தேசிய ...

யாடல் அடுத்த மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 1988ஆம் ஆண்டு, 27 ஆயிரத்து 550 ஏக்கர் நிலப்பரப்பு பறவைகள் சரணாலயத்துக்குரிய பகுதியாகப் பிரகட னப்படுத்தப்பட்டிருந்தது. இது திடீரென, 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி வர்த்தமானி ஊடாகத் தேசிய பூங்காவாகத் தரம் உயர்த்தப்பட்டது. 48 ஆயிரத்து 347 ஏக்கர் நிலப்பரப்பு இதற்காக உள்வாங்கப்பட்டது.

பறவைகள் சரணாலயத்திலிருந்து தேசிய பூங்காவாகத் தரம் உயர்த்தப்பட்டபோது, மேலதிகமாக உள்ளெடுக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலானவை தனியாருக்கு உரியவை. பாடசாலைக்குச் சொந்தமான காணி மற்றும் மீனவர்களின் கரைவலைப்பாடுகளும் அதில் உள்ளடங்கியுள்ளன.

புதிதாக உள்வாங்கப்பட்ட நிலப்பரப்பை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது. இதனடிப்படையில், தேசிய பூங்காவாகப் பிரகடனப்படுத்திய வர்த்தமானி அறிவித்தலை மீளாய்வு செய்வதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் இணங்கியுள்ளது. இதற்கான கலந்துரையாடல் அடுத்த மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (த-5-101)

## கடற்படை...

கம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டமை தொடர்பாக, இலங்கைக் கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, ஜூலை 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இளைஞர்கள் பலர் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களில் கடற்படை அதிகாரிகள் பலர் தொடர்புபட்டிருப்பது குறித்து, கொமடோர் டி.கே.பி.தசநாயக்கவிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், 2015ஆம்ஆண்டு விசாரணை நடத்தியிருந்தனர்.

அதேவேளை, கடந்த ஆண்டு கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவிடம், இந்த ஆள்கடத்தல்கள் தொடர்பாக வாக்குமூலம் அளித்திருந்தார்.

அட்மிரல் வசந்த கரன்னகொட அளித்த தகவல்களின் படி, மேலும் பலர் கைது செய்யப்படக் கூடும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன என்று அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டி.ஐ.ஜி லலித் ...

கொழும்பில் கைது செய்யப்பட்டிருந்த லலித் ஏ.ஜயசிங்க நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசனிடம் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவைப் பிறப்பிக்கப்பட்டது.

புங்குடுதீவில் மாணவி படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபரான மகாலிங்கம் சசிதரன் (சுவிஸ்குமார்) என்பவரை கொழும்புக்குத் தப்பிச் செல்வதற்கு உதவினார் என்றும், அதற்காக வெளிநாட்டில் உள்ள முகவர் ஒருவர் ஊடாக அவருக்குப் பணம் வழங்கப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமையவே மூத்த பொலிஸ்மா அதிபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

நேற்று அவர் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டார். அதிகாலை 6.30 மணியளவில் நல்லூரில் உள்ள ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இல்லத்தில் அவர் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். அதையடுத்து சந்தேகநபர் அநுராதபுரம் விளக்கமறியல் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ற-8-101)

## டி.ஐ.ஜியை...

வீதியோர மைல் கல்லுடன் மோதி வாகனம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வாகனம் கடுமையாக சேதமடைந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சாரதியின் தூக்க கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்காக நேற்று பொலிஸார் அழைத்து வந்தனர். இதன்போதே இந்த விபத்து இடம்பெற்றது. (ற-8)

## கட்டுத்...

மட்டக்களப்பு கல்லடியை சேர்ந்த எஸ்.உசாந்தன் (வயது- 29) என்பவரே காயமடைந்தார். பாலைப்பழம் பிடுங்கச் சென்றிருந்தபோது கட்டுத் துவக்கு வெடித்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. முழங்காவில் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்திருந்த நிலையில் பாலைப்பழம் பிடுங்குவதற்கு உறவினர்களுடன் சென்றுள்ளார்.

காயமடைந்தவரை அவருடன் சென்றவர்கள் மீட்டு முழங்காவில் வைத்தியசாலையில் சேர்த்தனர். மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கட்டுத்துவக்கின் குண்டு அவரது இடுப்புப் பகுதியினூடாகச் சென்று வயிற்றுப் பகுதியில் தங்கியுள்ளதாக வைத்தியசாலையில் ஸ்கானிங் செய்தபோது தெரியவந்ததாகவும் சத்திர சிகிச்சை மேற்கொண்டு குண்டு அகற்றப்படவுள்ளதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. முழங்காவில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (4-101)

# வவு. தமிழ் மத்தியின் கிந்துயன் அசத்தினார்




யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் பாடசாலைகளுக்கு இடையிலான அரைமரதன் ஓட்டத்தில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.கிந்துயன் முதலாம் இடத்தைப் பிடித்தார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.கிந்துயன் 01:14:52 மணித்தியாலயத்தில் ஓடி முதலாம் இடத்தைப் பிடித்தார். ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜெனந்தனன் 01:22:30 மணித்தியாலயத்தில் ஓடி இரண்டாம் இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.றினுசன் 01:24:50 செக்கன்களில் ஓடி மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த கே.டினேஸ் நான்காமிடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தீசன், ஐந்தாமிடத்தையும் கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.தனுசன் ஆறாம் இடத்தையும், பண்டத்தரிப்பு கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.நிலோஜன் ஏழாவது இடத்தையும், ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரியைச் சேர்ந்த கே.அனஸ்ரின் எட்டாவது இடத்தையும், வவுனியா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.நிரோஜன் ஒன்பதாவது இடத்தையும், வவுனியா மத்திய மகா வித்தியாலத்தைச் சேர்ந்த வி.கஜீவன் பத்தாமிடத்தையும் பெற்றனர். (ம-108-422)

## அனோயன் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான 5 கிலோ மீற்றர் ஓட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.அனோஜன் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் துரையப்பா பவிளையாட்டரங்குக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.அனோஜன் 18:25:7 நிமிடங்களில் இலக்கை அடைந்து முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வி.சஜீவன் 18:59 நிமிடங்களில் இலக்கை அடைந்து இரண்டாமிடத்தையும், காரைநகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.வசந்தரூபன் 19:01 நிமிடங்களில் இலக்கை அடைந்து மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம்.சஜீபன் நான்காமிடத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.அபினாஸ் ஐந்தாமிடத்தையும், மன்னார் நானாட்டன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.திபாகரன், ஆறாவது இடத்தையும் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜதுர்சன், ஏழாவது இடத்தையும், மன்னார் இலுப்பைக்கடவை கல்லூரியைச்சேர்ந்த ஆர்.டொறிங்ரன் எட்டாவது இடத்தையும், முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.நிலோஜன் ஒன்பதாவது இடத்தையும், மன்னார் முள்ளிக்குளம் அ.த.க பாடசாலையைச் சேர்ந்த எஸ்.புவனேஸ்வரன் பத்தாமிடத்தையும் பெற்றனர். (ம-23-108)




## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

**கலைமதியின் கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்துத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான தொடரில் 11 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான இறுதியாட்டம் உடுவில் மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று இடம்பெறவுள்ளது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)

## ஐயனார் அணி சம்பியனானது

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் ஊறெழு றோயல் அணியை வீழ்த்தி கிண்ணத்தைச் சுவீகரித்தது துறையூர் ஐயனார் அணி.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஊறெழு றோயல் அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டம் ஆரம்பித்து இரண்டாவது நிமிடத்தில் ஐயனார் அணியின் சுபராஜ் தனது அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். ஆட்டத்தின் 7ஆவது மற்றும் 15ஆவது நிமிடங்களில் தேசிய அணி வீரரும் றோயல் அணியின் நட்சத்திர வீரருமான எடிசன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்து றோயல் அணியை முன்னிலைப்படுத்தினார். எனினும் சுபராஜ் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதியின் 27ஆவது நிமிடத்தில் றோயல் அணியின் வீரர் கோபன் கோலொன்றைப் பதிவு செய்து மீண்டும் அணியை முன்னிலைப்படுத்தினார். ஆனால் இறுதிவரை கடினமான ஆட்டத்தினை வெளிப்படுத்திவந்த ஐயனார் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்து 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-108)

## பெண்கள் பிரிவு அரைமரதன் முதலிடம் பிடித்தார் சுடர்மதி



யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் பாடசாலைகளுக்கு இடையிலான அரை மரதன் ஓட்டத்தில் பெண்கள் பிரிவில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சுடர்மதி முதலாமிடத்தைத் தனதாக்கினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சுடர்மதி 01:37:40 மணித்தியாலயத்தில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். கற்சிலைமடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.விதுசா 01:44:70 மணித்தியாலயத்தில் இலக்கை அடைந்து இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.டென்சிகா 01:44:90 மணித்தியாலயத்தில் இலக்கை அடைந்து மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த வை.நிதர்சனா நான்காம் இடத்தையும், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.மங்கையர்கரசி ஐந்தாமிடத்தையும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே.டினோஜா ஆறாவது இடத்தையும் புதுக்குடியிருப்பு மத்திகல்லூரியைச் சேர்ந்த எல்.டிலக்சனா ஏழாவது இடத்தையும் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.திவ்யா எட்டாவது இடத்தையும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த பு.பிரகலா ஒன்பதாவது இடத்தையும் அதே கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தமயந்தி பத்தாமிடத்தையும் பெற்றனர். (ம-23-108)

## உதயதாரகையின் கால்பந்துத் தொடர்; இளைஞர், பொம்மர்ஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 17
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

உதயதாரகையின் மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன மோதின. ஆட்டத்தின் 23 [illegible] திக்



கம் இளைஞர் அணியின் அரிகரன் கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் அந்த அணி 1:0 என்று முன்னி[illegible]ந்தது. இரண்டாம் [illegible]தீபன் ஓர் கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டல் வைத்திருந்த பொம்மர்ஸ் அணிக்கு சாரங்கன் 2 கோல்களையும் கோபி மற்றும் மாதுஜன் இருவரும் தலா ஒவ்வொரு கோலையும் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

# போராடி வென்றது மானிப்பாய் இந்து

யாழ்ப்பாணம், ஜூலை 17
இளவாலை சென். ஹென்றிஸின் கால்பந்தாட்டத் தொடரில் 18 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி கிண்ணம் வென்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட அணிக்கு 5 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் 18 வயதுப் பிரிவு 'கப்' கிண்ணத்துக்கான இறுதியாட்டம் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. கொழும்பு சென். ஜோசவ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (ம-23)

## விசேட தேவையுடைய மாணவரின் விளையாட்டுப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தினால் நடத்தத் திட்டமிட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.
வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், சிறப்பு விருத்தினராக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)



# சென். ஜோசப் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 17
இளவாலை சென். ஹென்றிஸின் கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பிரிவில் கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் 110ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட அணிக்கு 5 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பிரிவு 'கப்' கிண்ணத்துக்கான இறுதியாட்டம் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சென். ஜோசப் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. (ம-23)

## அஸ்வினில் முரளிதரன் நம்பிக்கை

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் அஸ்வினின் செயற்பாடு மிகச் சிறப்பாக இருக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் முரளிதரன்.
இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பாக சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே முரளி இவ்வாறு குறிப்பிட்டார். (ம)

## வடக்கு கால்பந்தாட்டத்தின் அபிவிருத்திக்குப் பொறுப்பாக அன்ரன் டேவின்சன் நியமனம்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளுகளுக்கு பொறுப்பாக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உபதலைவர் ஞானப்பிரகாசம் அன்ரன் டேவின்சன் ஜெராட் நியமிக்கப்பட்டுள்ளார்.
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சகல விதமான வேலைத்திட்டங்களையும் காண்காணிக்கும் வகையில் அவர்



நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் போதே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## ஹென்றிஸை வென்றது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 17
இளவாலை சென். ஹென்றிஸின் கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் அணி சம்பியனானது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் 110ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட அணிக்கு 5 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பிரிவு 'கப்' கிண்ணத்துக்கான இறுதியாட்டம் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொண்ட யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. 3:2 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (ம)

## யூனியன், வின்ஸ்ரார் அணிகள் இறுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட தொடரில் தெல்லிப்பழை யூனியன், வின்ஸ்ரார் அணிகள் இறுதியாட்டத்தில் மோதுவதற்குத் தகுதி பெற்றன.
யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பமிலியன்ஸ் அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் அணி மோதியது. இதில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி 25:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பல்கலைக் கழக அணி மோதியது. 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வின்ஸ்ரார் அணி வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)


யூனியன் அணி


வின்ஸ்ரார் அணி

# 'திக்திக்' நிலையில் இலங்கை




முன்னதாக முடிவடைந்த ஒரு நாள் தொடரை சிம்பாப்வேயிடம் இலங்கை அணி பறிகொடுத்திருந்தது. இந்த டெஸ்ட் ஆட்டத்தில் சிம்பாப்வேயின் எஞ்சிய நான்கு இலக்குகளையும் இன்று மிக விரைவில் இலங்கை கைப்பற்றாவிட்டால் அந்த அணிக்கு வெட்கக்கேடான மிகப்பெரியதொரு தோல்வி காத்திருக்கிறது என்பது மட்டும் நிதர்சனம்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் பந்துவீச்சு வியூகங்களை திறம்படச் சமாளித்து சிம்பாப்வே வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளார் ரசா.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 356 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எர்வின் 160 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளையும், குமார, குணரத்ன இருவரும் தலா 2 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை இரண்டாம் நாள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குணரத்ன 24 ஓட்டங்களுடனும், கேரத் 5 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். குணரத்ன 45 ஓட்டங்களுடனும், கேரத் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 346 ஓட்டங்களுடன் இலங்கையின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் கிரீமர் 5 இலக்குகளையும், வில்லியம்ஸ் 2 இலக்குகளையும், திரிபானோ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

10 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 23 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து தவித்தது.

மசகட்சாவை 7 ஓட்டங்களுடனும், சக்கபவவை 6 ஓட்டங்களுடனும், முசகன்டானவை ஓட்டமெதையும் பெறவிடாதும் வீழ்த்தினார் கேரத். கேரத்தின் பந்துவீச்சு திடீர் எழுச்சியடைந்ததால் சிம்பாப்வே 100 ஓட்டங்களைத் தொடுவதென்பதே பெரியவிடயம் என்று பார்க்கப்பட்டது. 22 ஓட்டங்களுடன் வில்லியம்ஸையும் வீழ்த்தினார் கேரத். வில்லியம்ஸ் ஆட்டமிழந்தபோது சிம்பாப்வே 59-5 என்ற நிலையில் இருந்தது.

ரசா, மூர் இருவரும் இணைந்து இலங்கையின் பந்துவீச்சை குறிப்பாக கேரத்தின் அச்சுறுத்தலை திறம்படச் சமாளித்தனர். சிம்பாப்வேயின் டெஸ்ட் வரலாற்றில் பொன் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய இணைப்பாட்டம் இது என்று சொல்லிக்கொள்ளலாம். டெஸ்ட் ஆட்டமொன்றில் சரிவின் பின்னர் மீண்டெழும் வித்தையை சிம்பாப்வே மிகச் சிறப்பாகவே கற்றுள்ளது. 86 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன.

40 ஓட்டங்களுடன் மூர் ஆட்டமிழந்தார். மூரைப் பிரதியீடு செய்த வோலர் ஒருபடி மேலே சென்று அரைச்சதம் கடந்தார். சதத்தை நெருங்கினார் ரசா. நாள் முடிவில் சிம்பாப்வே 6 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற 10 ஓட்டங்களின் உதவியுடன் சிம்பாப்வே அணி தற்போது 262 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இன்னும் 60 முதல் 80 வரையான ஓட்டங்களை அந்த அணி கூடுதலாகப் பெற்றால், இலங்கைக்கு மிகப்பெரிய டெஸ்ட் தோல்வியொன்று காத்திருக்க வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ளது. (ம)

**தேவை**

★ எமது நிறுவனத்துக்கு சேகரிப்பு அதிகாரிகள் தேவை.
★ பட்டா வாகனங்கள் தேவை.
கிளைகள்:-
வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி
T.P: 011 4320232, 011 4062830
பிரதேச முகாமையாளர்: 072 5029966 (ஆனந்தன்)

## ரவி சாஸ்திரிக்கு ரூபா 12 கோடி

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ரவி சாஸ்திரிக்கு இலங்கை மதிப்பில் ஆண்டுக்கு சுமார் 12 கோடி ரூபா சம்பளமாக வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது சம்பளம் மற்றும் ஏனைய சலுகைகள் தொடர்பாக நால்வரைக் கொண்ட குழு பரிசீலனை செய்து வருகிறது. இந்தக் குழு ரவி சாஸ்திரியின் சம்பளமாக ஆண்டுக்கு சுமார் 12 கோடி வழங்க பரிசீலிக்கும் என்று தகவல்கள் வந்துள்ளன. (ம)

**கண்ணீர் அஞ்சலி**

**வேலாயுதம் ஜெயசீலன் (ஜெயா)**

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தினை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் ஜெயசீலன் 12.07.2017 புதன்கிழமை காலமானார்.

பிறப்பு
25 . 10 . 1966



இறப்பு
12 . 07 . 2017

வானக் கருங்கடலில் நீந்திக் கொண்டிருக்கும் மேகங்களுக்கு நடுவே புதிய நட்சத்திர மாய் முளைத்து விட்ட எம் அத்தானே

விட்டு விட்டு துடிக்கும் இதயத்தினை மாற்றி புது இதயத்தின் தாளகதியின் உற்சாகத் தோடு புன்னகைக்கு முகம் காண காத்திருந்த எங்களை ஏமாற்றி சென்றது ஏனோ ?

ஆறுமாதத்தில் அருகில் வருவீரென அன்போடு காத்திருந்து தாயின் கண்ணீருக்கு திரும்ப முடியாத தூரம் காலன் கொண்டு சென்ற சேதி சொல்ல வைத்தது ஏனோ?

இரவுகளின் நீளத்திற்கு விழித்திருந்து நினைவுகளின் போர்களத்தில் நிம்மதி இழந்து தவிக்கும் எமது சகோதரிக்கு கண்ணீரை பரிசளித்து மௌனமானது ஏனோ?

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.**

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**மைத்துனர்கள்.**

**போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புகள்**

**முகாமைத்துவ உதவியாளர்**
நாளை
செவ்வாய் தொடக்கம்
வெள்ளி வரை
3.00 → 6.00

**வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்**
நாளை
செவ்வாய் தொடக்கம்
வெள்ளி வரை
3.00 → 6.00

தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)


விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்

## றோயர் பெடரர் மகுடம் சூடினார்

விம்பிள்டன் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மரின் சிலிச்சை வீழ்த்தி கிண்ணம் வென்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் லண்டன் நகரில் நேற்று மாலை 7 மணிக்கு (இலங்கை நேரப்படி) ஆரம்பமானது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலாவது செற் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பெடரரின் வசமானது. இரண்டாவது செற்றில் பெடரர் முழுமையாக ஆதிக்கம் செலுத்தினார். அந்த செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அவரின் வசமானது. மூன்றாவது செற்றிலும் வெற்றிபெற்றால் நேர் செற் கணக்கில் கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு ஏற்பட பெடரர் அதைக் கச்சிதமாகப் பயன்படுத்தினார். மூன்றாவது செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பெடரரின் வசமாக முடிவில் அவர் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.